# அருங்காட்சியக இயல்



என். ஹரிநாராயணா

கு. தேவராஜ்

UG6171

R007I01

ப.ஏ.6171

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர்

# அருங்காட்சியக இயல்

ஆசிரியர்கள்

என்.உறரிநாராயணா

கு.தேவராஜ்

அருங்காட்சியகம்

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர் 613 005

ISBN : 81-7090-346-7

தமிழ்ப் பல்கலைக்கழக வெள்ளி விழா ஆண்டு வெளியீடு-3

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு : 285

திருவள்ளுவராண்டு 2036 - புரட்டாசி - செப்டம்பர் 2005

| | | |
|---|---|---|
| நூல் | : | அருங்காட்சியக இயல் |
| ஆசிரியர் | : | என்.உறரிநாராயணா<br>கு.தேவராஜ் |
| மொழி | : | தமிழ் |
| பொருள் | : | அருங்காட்சியகம் |
| பதிப்பு | : | முதற்பதிப்பு 2005 |
| பக்கம் | : | 118 |
| தாள் | : | டி.என்.பி.எல்.மேப்லித்தோ 16 கிலோ |
| அளவு | : | டெம்மி 1/8 |
| நூற்கட்டுமானம் | : | சாதாக்கட்டு |
| விலை | : | உரூ.60/- |
| படிகள் | : | 1000 |
| அச்சு | : | தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம்<br>தஞ்சாவூர் |

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

முனைவர் சி.சுப்பிரமணியம்
துணைவேந்தர்

## அணிந்துரை

அருங்காட்சியகம் என்பது ஒரு நாட்டின் பண்பாட்டை நிரல்பட எடுத்து இயம்பும் ஒரு வரலாற்றுப் பெட்டகம் ஆகும். ஒரு நாட்டின் வரலாற்றை எழுத்துருவில் காண்பதைக் காட்டிலும் பொருளாகப் பார்க்கும்பொழுது அது ஏற்படுத்தும் தாக்கம் பெரியது ஆகும். ஆதலால் அருங்காட்சியகங்களை அறியாதார் எவரும் இன்றில்லை எனலாம். நம்மில் பலரும் அருங்காட்சியகங்களுக்குச் சென்று அரிய பொருள்களின் தனிப் பெருங்கூறுகளைக் கண்டு நினைவில் கொண்டு வருகிறோம். ஆங்காங்குள்ள மிக அரிய கலைப்பொருள்கள் குறித்த சிறந்த செய்திகளை வேண்டியாங்கு பயன்படுத்தவும் செய்கிறோம்.

மேனாடுகளில் பல சிறந்த அருங்காட்சியகங்கள் உள்ளன. அங்குள்ள வரலாறு, கலை மற்றும் அறிவியல் தொடர்பான அரிய பொருட்களையும், அவற்றை அவர்கள் காட்சிப்படுத்தியுள்ள சிறந்த முறைகளையும், அப்பொருட்களைப் பற்றி அங்குள்ளோர் விளக்கம் செய்யும் முறைகளையும், அவ்வருங்காட்சியகங்களைப் பற்றி அந்நாட்டு மக்கள் அறிந்து வைத்துள்ள அறிவையும் கண்டு வெளிநாடு சென்று வந்த பலரும் வியப்போடு விவரிப்பதை நாம் அனைவரும் அறிவோம்.

நம் நாட்டில் இத்தகு அருங்காட்சியகங்கள் பல மிக அரிய பொருட்களைக் கொண்டுள்ளன. ஆனால் இவ்வருங்காட்சியகங்களை உரிய கண்ணோட்டத்தில் காண்பவர் மிகச் சிலராகவே உள்ளனர். அருங்காட்சியகக் காட்சிப்பாடுகள் பொதுமக்களுக்கும் அறிஞர்களுக்கும் அவரவர் நோக்கிற்கும் தேவைக்கும் ஏற்ற

மூலச்சான்றுகளாகவும், விளக்கத் தரவுகளாகவும் திகழ்கின்ற அருமையை அறிந்தவர் சிலராகவே உள்ளமை வருந்தத்தக்கதாகும். அருங்காட்சியக இயல் என்பது பல்வேறு கலை மற்றும் அறிவியல் துறைக் கூறுகளைத் தன்னகத்தே கொண்டதாகும். இதனை முழுமையுற அறிந்து கொள்வோர் அருங்காட்சியகங்களின் பயனைப் பெற முடியும்.

அவ்வகையில் அருங்காட்சியக இயலைத் தமிழகம் முற்றிலும் அறிந்து பயன் பெற வேண்டுமென்ற நோக்கில் இந்நூலைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியிடுகிறது. இன்றைய காலகட்டத்தில் தமிழகத்தில் பெரும் விளக்கம் பெற்றிராத இவ்வியல் குறித்த இந்நூலை பேரறிவு மற்றும் பெரும் அனுபவத்தைக் கொண்டு தமிழ்ப் பல்கலைக்கழக அருங்காட்சியகத் துறையின் முன்னாள் இயக்குநர் திரு என். உறரிநாராயணா அவர்களும், அருங்காட்சியக இயலில் முதுகலைப் பட்டம் பெற்றவரும், தமிழ்ப் பல்கலைக்கழக அருங்காட்சியகத் துறையில் பல ஆண்டுகளாகப் பணியாற்றி வரும் அனுபவத்தைப் பெற்றவருமான அருங்காட்சியகப் பொறுப்பாளர் திரு கு. தேவராஜ் அவர்களும் இணைந்து எளிய தமிழில் வழங்கி அருங்காட்சியக இயலைத் தமிழகத்திற்கு அறிமுகப்படுத்தும் முயற்சி எனக்கு மிக்க மகிழ்ச்சியை அளிக்கிறது.

அவர்களுக்கும் எம் பாராட்டுக்கள். இம்முதன் முயற்சியை, புதிய துறையின் விளக்கத்தைத் தமிழினம் பெற்றுப் பயன்பெறும் என நம்புகிறேன்.

இந் நூலினை நேர்த்தியாக அச்சேற்றி வெளியிட்டுள்ள பதிப்புத்துறை இயக்குநருக்கும் பதிப்புத்துறையைச் சார்ந்த அனைவருக்கும் என் நெஞ்சு நிறைந்த பாராட்டுதல்களும் வாழ்த்துகளும்.

தஞ்சாவூர்-613 005 (சி. சுப்பிரமணியம்)

நாள்: 12-09-2005

# அறிமுகம்

மிக அரிய பொருள்களையோ, மிகவும் கலைத்திறம் வாய்ந்த பொருள்களையோ ஒருங்கு சேகரித்து வைக்கும் இடமே அருங்காட்சியகம் என்பது பொதுவான கருத்தாகும். எதற்கும் பயன்படாத நிலையில் ஒரு பொருள் மிகப் பழமையாகிவிட்டால் அதை மியூசியத்தில் கொண்டு வையுங்கள் என்று வேடிக்கையாகச் சொல்வதுண்டு. பழமையான பொருள்களோ அல்லது சாதாரண நிலையிலிருந்து மாறுபட்ட பொருளோ அருங்காட்சியகத்தில் வைப்பதற்குத் தகுதியுடையனவாகும்.

புதியதொரு இடத்திற்குப் போகும் ஒருவா் அங்கு அருங்காட்சியகம் இருந்தால் அதனைத் தேடிப்போய்ப் பார்ப்பது வழக்கமாகும். எடுத்துக்காட்டாகச் சென்னை எழும்பூரிலுள்ள அரசினர் அருங்காட்சியகத்தை நாள்தோறும் மக்கள் கூட்டம் பார்த்து வருகிறது. அத்தகையோர் கிராமப்புறத்திலிருந்து ஊர் பார்க்கவோ அல்லது தலயாத்திரை செல்லவோ நகரத்திற்கு வந்தவராவர். அல்லது உலகம் சுற்றுவதில் ஆர்வமும் வசதியும் படைத்தவர்களாகவோ அல்லது வெளிநாட்டிலிருந்து வருகின்ற சுற்றுலாப் பயணிகளாகவோ இருப்பர். அவ்வாறு அவர்கள் சுற்றுலா மேற்கொண்டு பார்க்குமிடங்களில் அருங்காட்சியகம் முக்கியமானதாக அமையும். ஐதராபாத்திலுள்ள 'சாலார்ஜங் மியூசியம்' அங்கு செல்வோர் காணவேண்டிய ஒரு முக்கிய இடமாகும். அந்த அருங்காட்சியகத்தில் சேகரித்து வைக்கப்பட்டுள்ள விலைமதிப்பற்ற பொருட்களைக் கண்டு வரும் மக்கள் வியப்பும் திகைப்பும் அடைகின்றனர். பெங்களூரில் அமைந்துள்ள 'விசுவேசுவரய்யா சயின்ஸ் அண்ட் டெக்னலாஜிக்கல் மியூசியம்' அறிவியல் மற்றும் பொறியியல் தொடர்பான அருங்காட்சியகமாகும். மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து அதனைக் கண்டு மகிழ்ந்து செல்கின்றனர்.

நமது நாட்டின் பாரமபரியத்தை நினைத்தவுடன் தெரிந்து கொள்ள விரும்புவருக்குத் தில்லி ஜன்பத் சாலையிலுள்ள அருங்காட்சியகம் பயனளிக்கும். எனவே தில்லி செல்லும்

அத்தகைய மக்களின் பயணப் பட்டியலில் அந்த அருங்காட்சியகம் இடம் பெற்றிருக்கும். ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் அமைந்துள்ள அருங்காட்சியகங்கள் பெருமைக்குரிய தகுதியைப் பெற்றுள்ளன. பாரிசிலுள்ள 'லூவர்', இலண்டனிலுள்ள 'பிரிட்டிஷ் மியூசியம்', ஆம்ஸ்டர்டாமில் அமைந்துள்ள 'ரய்ச்சஸ்', லெனின்கிராடிலுள்ள ஹெர்மிடேஜ்' ஆகியவை அந்தந்த நாட்டின் பெருமைக்குரிய அருங்காட்சியகங்களாகும்.

இத்தகையவை மிக்க பெருமைக்குரியவை மட்டுமல்லாமல் அவை கல்வியறிவைப் பெறுவதற்கும் ஏற்ற இடங்களாக அமைகின்றன. வரலாறு, கலை, அறிவியல், சமூகவியல் ஆகிய துறைகளில் ஆழ்ந்த புது அறிவினைப் பெறுவதற்கும் அருங்காட்சியகங்கள் தகுந்த இடங்களாகின்றன. அங்கு சேகரித்து வைக்கப்பட்ட பொருள்கள் பல்வேறு துறைகளில் செய்யப்படும் ஆய்வுகளுக்கு மூலங்களாக உதவுகின்றன.

ஏதேனும் ஒரு குறிப்பிட்ட வரலாற்றுக்காலம், கனிப்பொருள்களின் வடிவங்கள், ஒரு குறிப்பிட்ட சமூகப் பிரிவின் பழக்க வழக்கங்கள் ஆகியவற்றைப் பற்றிய விவரங்களைத் தெரிந்து கொள்ள நீங்கள் விரும்பினால் அவற்றிற்குரிய அருங்காட்சியகங்களில் வைக்கப்பட்டுள்ள அரிய பொருள்களைப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். எப்படி ஒரு நூலகம் அதிலுள்ள நூல்களின் வாயிலாக அறிவு வளர்ச்சிக்கு உதவுகிறதோ அதைப்போல ஒரு அருங்காட்சியகம் அங்கு சேகரித்து வைககப்பட்டுள்ள பொருளகளின வாயிலாக அறிவை வளர்த்துக்கொள்ள உதவுகிறது. அங்குமிங்கும் சிதறிக்கிடக்கின்ற பல்வேறு பொருள்கள் சேகரித்து வைக்கப்பட்ட ஓர் இருளடைந்த இடமென அருங்காட்சியகத்தைக் கருதினால் அது தவறாகும். தன்னிடமுள்ள பொருள்களைக் காணும்படியான ஆவலைத் தூண்டுமிடமே அருங்காட்சியகமாகும். அது பொருள்களின் மூலத்தைக் காணும் வியத்தகு உணர்வையும், அனுபவத்தையும் மக்களுக்குத் தருகிறது. அப்பொருள்களைச் சுற்றியுள்ள விவரங்களைத் தெரிந்து கொள்ளவும் அவற்றைப் பற்றிய

அறிவாக்கத்தைப் பெறவும் அருங்காட்சியகம் உதவுகிறது. எப்போதும் தன்னிடத்திலுள்ள காட்சிப் பொருள்களை வரிசைப்படுத்துவதும் வகை வழிகளைக் கண்டறிந்து வைப்பதும் சேகரிக்கப்பட்ட பொருள்களைப் பாதுகாப்பதும் அருங்காட்சியகம் மேற்கொண்ட நோக்கங்களாகும். இத்தகைய நோக்கங்களை நிறைவேற்ற அது எதைச் செய்தாலும் அதைத் தாறுமாறாகச் செய்வதில்லை. தான் செய்யப்போகும் வேலையை ஒழுங்குமுறைப்படுத்தி அதை 'அருங்காட்சியகம்' என்ற ஒரு தனித்துறையாக வளர்த்திருக்கிறது. மக்கள் பழம் பொருள்களின் மதிப்பையும், அப்பொருள்களைப் பற்றிய இயற்கை அமைப்பையும் வரலாற்றையும் உணரத் தொடங்கிவிட்டதால் அண்மைக் காலத்தில் 'அருங்காட்சியக இயல்' ஒரு முக்கிய துறையாக வளர்ந்து வருகிறது.

இது அருங்காட்சியகத்தின் அமைப்பு முறை பற்றிய எல்லாவற்றையும் தன்னுட் கொண்டதாகும். அருங்காட்சியகம் எப்படி அமைக்கப்பட வேண்டும், மக்களுக்குச் செய்திகளை எவ்வாறு எடுத்துக்காட்ட வேண்டும், அது எவ்வாறு பயனுள்ள முறையில் செயல்பட வேண்டும் என்பனவற்றை எல்லாம் மேற்கொண்டது 'அருங்காட்சியக இயல்' ஆகும்.

இன்னமும் மக்கள் பலருக்கும் இதைப்பற்றித் தெரிவதில்லை. சிலர் இதனுடைய ஆங்கிலச் சொல்லை இசைத்துறைக்குரிய ஆங்கிலச் சொல்லுடன் தவறாகப் புரிந்து கொள்கின்றனர். 'மியூசியாலஜி' என்ற ஆங்கிலச் சொல்லும் 'மியூசிக்காலஜி' என்ற ஆங்கிலச் சொல்லும் ஒலி அமைப்பில் ஏறத்தாழ ஒரே மாதிரியாக அமைந்திருப்பதே அதற்குக் காரணமாகும். பலர் 'அருங்காட்சியக இயல்' என ஒன்று இருக்கிறதா என்று கூட வியப்படைகின்றனர். இன்றைய புது நூலகங்களைப் போல அறிவு வளர்ச்சிக்கும், மனித இனத்தின் கலை—பண்பாட்டுப் பாரம்பரியத்தை அறிந்து கொள்வதற்கும் அருங்காட்சியகங்கள் உதவி செய்ய வல்லன என்பதை மக்கள்

தெரிந்து கொள்ளும் போதுதான் 'அருங்காட்சியக இயல்' என்ற ஒரு துறையின் இன்றியமையாமையை அவர்களால் உணர முடியும்.

இத்துறையைப் பற்றிய அறியாமை இப்போது நீக்கப்பட வேண்டும். இதைபபற்றித் தெளிவாக எடுத்துரைப்பதுதான் இந்நூலின் நோக்கமாகும். 'அருங்காடசியக இயல்' என்ற இச்சிறு நூல், மக்கள் எல்லோரும் இதைப்பற்றிய செய்திகளைத் தெரிந்து கொள்ளவும், அருங்காட்சியகத்திலுள்ள காட்சிப் பொருள்களின் வாயிலாக மக்கள் எவ்வாறு பயன் பெற முடியும் என்பனவற்றை விளக்கமாக அறிந்து கொள்ளவும் உதவும்.

# 2. அருங்காட்சியகம்—ஒருவிளக்கம்

மிகப் பழமையான பொருள்களையும் கிடைத்தற்கரிய பொருள்களையும் சேகரித்து வைக்க வேண்டிய இடமே அருங்காட்சியகம் என்ற பொதுவான கருத்து ஓரளவுதான் பொருந்தும். தாவரவியல், நிலவியல், விலங்கியல் போன்ற இயற்கை அறிவியல் தொடர்பாகவும் அருங்காட்சியகங்கள் உண்டு. அவையெல்லாம் பழமையானவற்றின் தொகுப்புகள் ஆகா. அறிவியல் தொடர்பான அருங்காட்சியகங்கள் அறிவியல் கருத்துக்களை விளக்கும் செய்முறை மாதிரிகளைக் கொண்டிருக்கும். அவை பழமையானதுமில்லை, அரியவையு மில்லை. மானிடவியல் தொடர்பான அருங்காட்சியகங்கள் நாள்தோறும் பயன்படும் பொருள்களைக் கொண்டிருக்கும். எனவே அவை சாதாரணமாகக் காணப்படும் அண்மைக் காலத்து மூலப் பொருள்களாக இருக்கும்.

இவ்வாறு சேகரிக்கப்பட்ட பொருள்கள் பலவேறு இடிபாடுகளிலிருந்து எடுத்துக் காப்பாற்றப்பட்டிருக்கும். எனவே பொருள்களைப் பாதுகாப்பதும் அருங்காட்சியகத்தின் வேலைகளில் ஒரு பகுதியாகும்.

பொருள்களைச் சேகரித்து வைப்பதால் மட்டும் ஓர் அருங்காட்சியகம் உருவாகிவிடாது. குறிப்புப் பார்வைக்காகவோ அல்லது தனிப்பட்ட நோக்கத்திற்காகவோ பொருள்கள் சேகரிக்கப்பட்டால் அது அருங்காட்சியகமாகாது. பொதுமக்கள் பார்வைக்குரிய வகையில் பொருள்கள் சேகரிக்கப்பட்டு பொருத்தமான முறையில் ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதுதான் ஓர் அருங்காட்சியகத்தின் முக்கியமான முதல் தேவையாகும்.

இவையாவும் அருங்காட்சியகத்தைப் பற்றிய விளக்கமாகும். அனைத்துலக அருங்காட்சியகக் குழு இவை எல்லாவற்றையும் உள்ளடக்கிய விளக்கத்தைக் கீழ்வருமாறு தருகிறது.

கலை, பண்பாடு, இயற்கை வரலாறு தொடர்பான காட்சிக்குரிய பொருள்களைத் தொகுத்து அவற்றைப் பற்றிய கருத்துக்களையும் காட்சியின்பத்தையும் மக்கள் கண்டு

மகிழும்வகையில் அமைக்கப்படும் ஒரு நிறுவனம்தான் அருங்காட்சியகம் என்று தெளிவாகக் கூறலாம். எனவே மக்கள் எண்ணுவதுபோல் பயனற்ற பொருள்களையோ, பழைய பொருள்களையோ சேகரித்து வைப்பதுதான் அருங்காட்சியகம் என்பதில்லை. ஒவ்வொரு துறையிலும் அடங்கியுள்ள நமது பாரம்பரியத்தைப் பாதுகாப்பதையும், அதைப் பற்றி நாம் அடையவேண்டிய உணர்வையும் எடுத்துக்காட்டும் நன்னோக்கத்தில் அமைந்த ஒரு நிறுவனமே அருங்காட்சியகமாகும்.

# 3. அருங்காட்சியகங்களின் வரலாறு

இன்று இயங்கிவரும் அருங்காட்சியகம் என்ற அமைப்பு கிட்டத்தட்ட மூன்று நூற்றாண்டுகளாகவே செயல்பட்டு வருகிறது. 'மியூசியம்' என்ற ஆங்கிலப் பெயர்ச்சொல் 'மூசியோன்' என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து தோன்றியது. கிரேக்கர்கள், அலெக்சாண்டரியாவில் செயல்பட்டிருந்த 'அகாடமி' என்ற நிறுவனத்தின் ஒரு பகுதிக்கு 'மூசியோன்' என்ற பெயரை இட்டு வழங்கி வந்துள்ளனர். அகாடமியைச் சார்ந்த அறிஞர்களின் பயன்பாட்டிற்காகச் சேகரிக்கப்பட்ட அரிய பொருட்கள் வைக்கப்பட்டிருந்த இடம்தான் 'மூசியோன்'. பண்டைய கிரேக்கர்கள் வழிபட்டு வந்த கல்வி தெய்வங்கள் 'மி யூசஸ்' என்ற பெயரனவாகும். இத்தெய்வங்கள் இடம் பெற்றிருந்த இடத்தினை அவர்கள் கோயிலாகக் கருதி 'மீயூசியோன்' என்ற பெயரால் சுட்டி வந்தனர்.

தொன்மைக் காலத்தில் தற்போது வழங்கி வரும் அருங்காட்சியக அமைப்புக்கள் இல்லை. ஆனால் அரிய பொருள்கள், அழகான கனிமப் பொருட்கள், புதுமையான விலங்குகளின் சேகரிப்புக்கள் பல இருந்துள்ளன. அழகிய ஓவியங்கள், சிற்பங்கள் வைக்கப்பட்ட கூடங்களும் இருந்துள்ளன. புராணக் கதைகளை விளக்கும் ஓவியங்கள் உள்ள சித்திரச் சாலைகள் பல நம் நாட்டில் இருந்துள்ளமையினைப் பண்டைய இலக்கியக் குறிப்புக்கள் வழி அறிய முடிகின்றது. நம் நாட்டுக் கோயில்களிலும் தெய்வச் சிற்பங்களுள்ள நீண்ட திருச்சுற்று மாளிகைகள் பல உள்ளன. இத்தகு காட்சி அமைப்புக்கள் மக்களிடையே சமய உணர்வைத் தூண்டி வளர்ப்பதற்காகவே இடம் பெற்றுள்ளன எனலாம். ஆயினும் தற்போதுள்ள அருங்காட்சியகங்களின் முக்கியமான அம்சங்கள் இவற்றில் இல்லை எனலாம்.

பொருள்களைச் சேகரிப்பது பொதுவாக மனிதனுக்குள்ள ஒரு பண்பு. முன்னிடைக்காலங்களில் பொருட்களை சேகரிக்கும் ஆர்வம் ஐரோப்பாக்கண்டத்தில் விரிவாக வளர்ச்சி பெற்றுள்ளது.

பெருங்குடியினர், அரசர்கள், செல்வந்தர்கள் ஆகியோர் அரிய பொருட்களைச் சேகரித்து அவர்களின் அரண்மனைகளையும், மாளிகைகளையும் அலங்கரித்து வந்தார்கள். கிழக்கத்திய நாடுகளிலிருந்து அருமை வாய்ந்த விலங்கு, பறவைகள், ரத்தினங்கள் முதலிய பொருட்களையும் இவர்கள் தமது சேகரிப்புக்களில் சேர்த்து வைத்திருந்தார்கள். கலையார்வம் வளர வளர அரசர்களும், பெருங்குடியினரும் ஓவியர்களை ஊக்கப்படுத்தி அவர்கள் செய்த படைப்புக்களை தங்களின் சேகரிப்புக்களில் சேர்த்துக் கொண்டுள்ளனர்.

இவ்வாறாக பிரான்சு, இங்கிலாந்து நாடுகளின் மன்னர்கள், ஆஸ்திரியாவின் ஹாப்ஸ்பர்க் மன்னர்கள், இத்தாலியின் மெடிச்சி மன்னர்கள், இரஷ்யாவின் 'ஜார்' மன்னர்கள், போப் போன்ற மதத்தலைவர்கள் இப்படி கலைப்பொருட்களை ஏராளமாகச் சேகரித்துள்ளனர். இந்தச் சேகரிப்புக்களில் கிரேக்க, உரோமானியக் கலைப்பொருட்கள், ரபேல், மைக்கேல் ஆஞ்சலோ, லியர்னோடோடாவின்சி, ஆல்பைன் போன்ற சிறந்த ஓவியர்களின் படைப்புக்களும் இடம் பெற்றிருந்தன. ஆனால் இந்தச் சேகரிப்புக்கள் எல்லாம் அந்தந்த மன்னர்களுக்கு நெருங்கிய சிலரின் மகிழ்சிக்காகத்தான் வைக்கப்பட்டிருந்தன. சேகரிப்புச் செய்வது தம்முடைய புகழின் பெருக்கத்திற்குரிய அடையாளமாகக் கருதிச் சேகரிக்கப்பட்ட பெரும் பொருள்களை தனித்தனி மாளிகையில் இடம்படுத்திப் பாதுகாத்தும் வந்துள்ளனர்.

அரசர்களாலும் சிற்றரசர்களாலும் இவ்வாறு சேகரிக்கப்பட்ட பொருள்கள் அவர்களும் அவர்களால் அனுமதிக்கப்பட்டவர்களும் கண்டு மகிழ்வதற்காகவே சேகரிக்கப்பட்டன. இப்படிப் பொருள்களைச் சேகரிப்பது பெருமைக்கும் மதிப்புக்கும் உரிய தன்மையைப் பெற்றதால் பழங்காலத்தைச் சேர்ந்த பொருள் சேகரிப்போர் தாம் சேர்த்த பொருள்களை வைக்கவும் பாதுகாக்கவும் சிறந்த கட்டடங்களைக் கட்டலாயினர். 15, 16–ஆவது நூற்றாண்டுகளில் ஐரோப்பாவைக் குலுக்கிய வியத்தகு சமுதாய மாற்றங்கள் நடைபெறாவிட்டால் இத்தகைய தொகுப்புக்கள் அரண்மனைகளிலும் மாளிகைகளிலும் தனியார் உடைமைப் பொருள்களாகக் குறிப்பிட்ட சிலருடைய பார்வைக்காக மட்டும் வைக்கப்பட்டிருந்திருக்கும். மறுமலர்ச்சியியக்கம்,

புராட்டஸ்டண்டு மதத் தோற்றம், அச்சகத்தின் கண்டுபிடிப்பு, நூல் நூற்கும் கருவி, மாலுமிகளின் கப்பற் பயணம் போன்ற வரலாற்று நிகழ்ச்சிகள் சாதாரண மனிதனுக்கும் அறியாதனவற்றைப் பற்றி அறிந்து கொள்ளும் எண்ணத்தைக் கொடுத்தது. 17–ஆவது நூற்றாண்டின் தொடக்கத்தில் ஐரோப்பாவில் பரவிய களஞ்சியயியக்கம் இதற்கு ஒரு காரணமாகும். பல்வேறுபட்ட பொருள்களைப் பற்றிய கருத்துக்களை ஒரே நூலிலிருந்து பெற்றுக்கொள்ள வழி செய்வதே இக்களஞ்சியயியக்கத்தின் நோக்கமாகும். மக்கள் உள்ளத்தில் அறிவு வளர்ச்சியைப் பெறுகின்ற ஆவலை இவ்வியக்கம் தூண்டியது. அத்தகைய அறிவு வளர்ச்சியைப் பெறுவதற்கான உரிமை உணர்வையும் அது தந்தது. அவர்தம் ஆர்வ உணர்வு நிறைவுற்றதாகவும் சிலர் உணர்ந்தனர். கலைப்பொருள்களும் அரிய பொருள்களும் மக்கள் காணும் காட்சிப் பொருள்களாக அமைக்கப்பட்டமை இவ்வியக்கத்தின் விளைவுகளுள் ஒன்று. மக்கள் காணுமாறு செய்ய வேண்டும் என்ற வேண்டுகோளுடன் ஆஷ்மோல் பிரபு என்பவர் முதன் முதலாகத் தாம் சேகரித்த பொருள்களை ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்திற்கு நன்கொடையாக வழங்கினார். இவ்வாறு 'ஆஷ்மோலியன் மியூசியம்' கி.பி. 1675–இல் அமைக்கப்பட்டது. பல அருங்காட்சியகங்கள் இதற்குப்பின் உடனடியாகத் தோன்றிடவில்லை. ஆனால் இந்த மனநிலை உருவாயிற்று. கி. பி. 1745–இல் பிரிட்டிஷ் மியூசியம் நிறுவப்பட்டது. மெல்ல மெல்ல மற்ற அருங்காட்சியகங்கள் தோன்றலாயின. 1789–இல் நடைபெற்ற பிரஞ்சுப் புரட்சிக்குப் பிறகுதான் இவ்வியக்கத்தில் மிகப்பெரிய விளைவு ஏற்பட்டது. புரட்சி அரசு பிரான்ஸ் நாட்டு அரசர்கள் சேகரித்த அரிய பெரிய பொருள்களை பாரிசிலுள்ள லூவர் அரண்மனையில் ஒழுங்குறச் சேர்த்து வைத்து 1791–இல் அவற்றை மக்கள் பார்வைக்கு ஏற்ற அருங்காட்சியகமாக்கிற்று. அவ்வரசு, அருங்காட்சியகத்தின் அருமை பெருமையை உணர்ந்து இயற்கை வரலாறு, கலை, கைவினைப் பொருள், நினைவுச் சின்னங்கள் மரபு வழிப் பொருள்கள் போன்ற மற்ற மற்றத் துறைகளுக்கேற்ற மூன்று அருங்காட்சியகங்களை மேலும் அமைக்க ஏற்பாடு செய்தது.

இதனை அடுத்து ஐரோப்பிய நாடுகளில் அருங்காட்சியகங்கள் அமைக்கப்பட்டன. இவற்றுள் வெனிஸ் நகரத்தின் 'உஃபிஸ்' ரோமிலுள்ள 'வாட்டிகன்

மியூசியம்' மாட்ரிட்டிலுள்ள 'ப்ரோடா' ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

அருங்காட்சியகங்களை அமைக்கும் இந்த மனப்போக்கு இந்தியாவிலும் பரவிற்று. 1795–இல் வில்லியம் ஜோன்ஸ் என்பவர் 'ராயல் ஏஷியாட்டிக் சொஸைட்டி'யை உருவாக்கினார். இந்தியக் கலை, பண்பாடு தொடர்பானப் பொருட்களைக் கொண்ட ஓர் அருங்காட்சியகத்தை அமைக்க வேண்டும் என்ற திட்டத்தை அவர் கொண்டு வந்தார். இத்திட்டத்தின் விளைவாகக் கல்கத்தாவிலுள்ள 'இந்தியன் மியூசியம்' என்ற அருங்காட்சியகம் உருவாகியது. இதைப் பின்பற்றி 'மெட்ராஸ் லிட்டரரி சொஸைட்டி' எடுத்துக்காண்ட முயற்சியின் விளைவாக 1851–இல் 'அரசு அருங்காட்சியகம் சென்னையில் தொடங்கப்பட்டது. விரைவாகப் பல மாநிலங்களின் தலைநகரங்களில் அருங்காட்சியகங்கள் அமைக்கப்பட்டன. காலத்தால் முந்திய சென்னை 'அரசு அருங்காட்சியகம்' ஆறு மாவட்டத் தலைநகரங்களில் அருங்காட்சியகங்கள் அமைய உதவியது. அவை சென்னை அருங்காட்சியகத்திற்குத் தாம் சேர்த்த பொருள்களைக் கொடுக்கும்படி அமையலாயின. எவ்வாறாயினும் இந்த நடைமுறை வெற்றி பெறவில்லை. பத்தொன்பதாவது நூற்றாண்டின் முதல் அல்லது இரண்டாவது பத்தாண்டுகளில் பெரிய அருங்காட்சியகங்கள் அமைக்கப்பட்டன. இவை எல்லாம் அரசர்களாலும், பெரும் பணக்காரர்களாலும் சேகரிக்கப்பட்ட கலைப்பொருள்களைக் கொண்ட அருங்காட்சியகங்களாகும். நீராவி இயந்திரங்கள், நூற்புக் கருவிகள் போன்ற அறிவியல் கண்டுபிடிப்புக்கள் தோன்றிய தொழிற் புரட்சி யுகத்தில் இத்தகைய அருங்காட்சியகங்கள் அமையலாயின. பெருமளவுக்குப் பொருள்களைத் தொழிற்சாலைகள் உற்பத்தி செய்தன. இத்தகைய மிகையான உற்பத்தி பெருகியதன் விளைவாக நாள்தோறும் காணப்படும் கலைத்தன்மைகள் புறக்கணிக்கப்பட்டன. எனவே பழங்காலத்தைச் சேர்ந்த அழகான பொருள்கள் நிலையாமல் போய்விடும் என்ற உணர்வும் அவற்றைச் சேகரித்துப் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வும் தோன்றலாயின.

இவ்வாறு செய்வதில் இங்கிலாந்து முன்னோடியாக, 1851–இல் இலண்டனில் ஒரு பெரிய கண்காட்சியை

ஏற்படுத்தியது. பரந்து கிடக்கும் இங்கிலாந்தின் குடியேற்ற நாடுகளிலிருந்து இந்தக் கண்காட்சிக்காகப் பொருள்களைச் சேர்த்தனர். கண்காட்சி முடிந்ததும் அங்கிருந்த காட்சிப் பொருள்கள் எல்லாம் இலண்டனிலுள்ள 'விக்டோரியா' மற்றும் 'ஆல்பர்ட் மியூசியத்தின்' அடிப்படைப் பொருள்களாக வைக்கப்பட்டன. இது ஒப்பனைக் கலைத் தொடர்புடைய அருங்காட்சியகமாகும். மக்கள் உள்ளத்தைக் கவர்ந்து இன்பம் தரக்கூடியதும் நாள்தோறும் பயன்படக் கூடியதுமான பொருள்களை இது பெற்றிருந்தது. மக்களும் இதைத் தெரிந்து கொள்ளும் வகையில் இந்த அருங்காட்சியகம் அமைந்தது. ஓவியங்களும் சிற்பங்களும்தான் கலைப்பொருள்கள் என்பதில்லை; கலை என்பது அன்றாட வாழ்க்கையின் ஒரு பகுதிதான் என்பதை மக்கள் உணரும்படி இந்த அருங்காட்சியகம் செய்தது. இத்தகைய கருத்து நெடுங்காலத்துக்கு முன்பே உரைக்கப்பட்டது.

அருங்காட்சியகத்தின் வளர்ச்சி நிலையில் அடுத்த கட்டம் அறிவியல் தொடர்பான அருங்காட்சியக வளர்ச்சியாகும். 'மியூனிச்' சிலுள்ள 'டெய்ச்சஸ் மியூசியம்' முதல் அறிவியல் அருங்காட்சியகமாகும். இது ஒரு வேறுபட்ட வகை அருங்காட்சியகம். அறிவியல் கொள்கைகளை மக்களுக்கு அறிவுறுத்துவதே இதன் நோக்கமாகும். மேலும் அறிவியல் என்பது ஏதோ நமக்கு எட்டாததும் கடினமானதுமாகும் என்றில்லை என்பதை விளக்கவும் முக்கியமான அறிவியல் விளைவுகளுக்குப் பின்னால் எளிமையான கொள்கைகள்தான் இருக்கின்றன என்பதையும் மக்கள் உணரச் செய்வதே இதன் நோக்கமாகும். அறிவியல் உண்மைகளைக் கண்டுபிடித்தவர்களும் பெரும் அறிவியல் அறிஞர்களும் பயன்படுத்திய கருவிகளைச் சேகரித்து வைத்ததுடன் 'டெய்ச்சஸ் மியூசியம்' அறிவியல் விண்கலத்துக்காகச் செய்முறை மாதிரிகளையும் அமைத்து அவற்றைத் தாமாகவே இயக்கிப் பார்க்கவும் மக்களுக்கு அனுமதியும் வழங்கினர். இதனால் இக்கண்காட்சியை மக்கள் சிறப்பாகப் பாராட்ட வழி செய்தனர். இது ஒரு முக்கியமான வளர்ச்சியாகும். இதன்பிறகு அறிவியல் அருங்காட்சியகங்கள் பல தோன்றலாயின. வாஷிங்டனிலுள்ள 'ஸ்மித்சோனியன்' பாரிசிலுள்ள அரண்மனையின் கண்டுபிடிப்பு, இலண்டனிலுள்ள 'சயின்ஸ் மியூசியம்' ஆகியவை அவற்றுள் சில. வெளிப்படையானதும், கவர்ச்சியானதுமான செய்முறை

மாதிரிகளை அமைக்கும் வகையில் அறிவியல் அருங்காட்சியகங்கள் விரைவாக முன்னேறின.

இந்தியாவில் இந்த நூற்றாண்டின் அறுபதாம் ஆண்டுகளின் முற்பகுதிகளில் புதுதில்லியில் முதல் அறிவியல் அருங்காட்சியகம் 'நேஷனல் ஃபிஸிக்கல் லாபரட்டரியில்' அமைக்கப்பட்டது. பெங்களூரில் விசுவேசுவரய்யா மியூசியமும் அதைத் தொடர்ந்து கல்கத்தாவில் 'பிர்லா இண்டஸ்ட்ரியல் அண்டு டெக்னலாஜிக்கல் மியூசியமும்' திறக்கப்பட்டன. கல்கத்தாவிலுள்ள 'நேஷனல் கவுன்சில் ஆப் சென்டரல் மியூசியம்' என்ற அமைப்பு நாடு முழுதும் அறிவியல் அருங்காட்சியகங்களை ஒழுங்கான முறையில் அமைத்து வருகிறது.

அறிவியல் அருங்காட்சியகங்கள் பொதுவாக இயற்பியலையும், பொறியியலையும் கொண்டிருக்கின்றன. நிலவியல், தாவரவியல், விலங்கியல் போன்ற இயற்கை அறிவியல்கள் இயற்கை வரலாற்று அருங்காட்சியகங்களில் சேர்கின்றன. இவ்வகை அருங்காட்சியகங்கள் முன்னதாகவே அமைக்கப்பட்டுவிட்டன. 'பிரிட்டிஷ் மியூசியம்' இலண்டன், இந்தியன் மியூசியம் கல்கத்தா, சென்னையில் அமைந்த அருங்காட்சியகம் கலைப்பொருள்களின் தொகுப்புகளுடன் இயற்கை வரலாற்றுத் தொகுப்புக்களையும் பெற்றிருந்தன. நியூயார்க்கிலுள்ள இயற்கை வரலாற்று அருங்காட்சியகமாகிய 'அமெரிக்கன் மியூசியம்' சிக்காக்கோவிலுள்ள 'ஃபீல்டு மியூசியம்' ஆகியவை மிகப்பெருமளவு தொகுப்புக்களைக் கொண்டவை என்ற புகழைப் பெற்ற அருங்காட்சியகங்களாகும். மேலும் இயற்கை வரலாற்று ஆய்வுக்கு அதன் பங்கு மிகுதி என்ற பெருமையும் அதற்கு உண்டு. இந்தியாவில் இயற்கை வலாற்றுத் தொடர்புடைய 'நேஷனல் மியூசியம்' 1949–ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது.

குறிப்பாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இரண்டாம் பகுதியில் பழம்பொருள் ஆராய்ச்சியின் வளர்ச்சி அறிவியல் நிலை பெற்றது என்பது உறுதி. இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் மானிடவியல், மனித இன வரலாற்றியல் ஆகியவற்றின் வளர்ச்சி நிலையைக் காணலாம். இவை எல்லாம் மனிதன் தொடக்க காலத்திலிருந்து நாகரிக வளர்ச்சிக்காலம் வரையிலான வளர்ச்சி நிலையையும், அவனது சமுதாய வாழ்க்கை

நிலையையும் எடுத்துக்காட்டும். மனிதன் கையால் செய்த பொருள்கள் எங்கிருந்தாலும் அவற்றைச் சேகரிக்கும் ஆர்வம் வளர்ந்தது. மலைவாழ் மக்கள் அவ்வாறு செய்து பயன்படுத்திய பொருள்களும் சேகரிக்கப்பட்டன. மனிதன் வாழ்ந்த சூழ்நிலைகளையும் அவற்றால் தன் வாழ்க்கையில் பெற்ற தாக்கத்தையும் இவ்வகைத் தொகுப்புக்களை ஆராயும்போது அறிந்து கொள்ள முடியும்.

1930–ஆவது ஆண்டிலிருந்து தொடங்கிய 10 ஆண்டுக் காலத்தில் பாரீஸ் நகரத்தில் அமைக்கப்பட்ட மனித அருங்காட்சியகம் மேலே குறிப்பிட்ட கருத்துக்களுககு சானறாக முதன் முதலாக விளங்கியது. பல நாடுகளைச் சார்ந்த மக்களின் அன்றாட வாழக்கையில் பயன்படும் கருவிகள், பொருடகள் இந்த அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைககப்பட்டன. இவ்வாறு ஓரே இடத்தில், இத்தகைய பொருடகளை காடசிக்கு வைபபதனால உலகின் எப்பாகத்தில் வாழ்ந்தாலும் மககளுககு ஒரே விதமான உணர்வுகளே உள்ளன என்ற கருததுப் பெறுவது இயல்பு. இவ்வகையில் இந்த அருங்காட்சியகம் மிகவும் புகழ் அடைந்தது. இதனால் மற்ற நாடுகளிலும் மானிடவியல் அருங்காட்சியகங்கள் துவக்கப்பட்டன.

இத்தகைய மானிடவியல் அருங்காடசியகங்களில் ஒன்று மிக அழகான முறையில் மெக்சிகோவில் அமைககப்பட்டது. நம நாட்டிலும், மாநிலத்தின் தலைநகரிலுள்ள மாநில அருங்காட்சியகங்களில் பெரும்பாலும் மானிடவியல் பகுதி இடம் பெற்று உள்ளது. சென்னையிலுள்ள அரசு அருங்காட்சியகத்தில் மானிடவியலின் பல பகுதிகள் சரியான காட்சிப் பொருட்களின் மூலம் தெளிவாக விளககுகின்றன. கலகத்தாவிலுள்ள இந்திய அருங்காட்சியகத்தில் மலையின மக்களின் வாழ்க்கை, அவர்களின் உருவ மாதிரிகள், வீடுகளில் அவர்கள் பயன்படுத்தும் கருவிகள் ஆகியவற்றை காட்சிக்கு வைத்து பார்வையாளர்களைக் கவரும் முறையில் செயல்முறை உள்ளது. நம் நாட்டின் மானிடவியல் கூறுகளைவிளக்கும் 'தேசீய மனித அருங்காட்சியகம்' (இராஷ்டிரிய மானவ் சங்கரஹாலயா) மைய அரசினால் அமைக்கப்பட்டது.

மானிடவியல் அருங்காட்சியகங்கள் வளர வளர அதன் விளைவாகத் திறந்தவெளி அருங்காட்சியகங்களும் தோற்றுவிக்கப்பட்டன. இந்த அருங்காட்சியகங்களில் ஒரு இனத்தைச் சார்ந்த, வாழக்கையைச் சார்ந்த பொருட்களையும் அவர்கள் இருந்த இடத்திலேயே அல்லது வேறொரு இடத்தில் முழுமையாக பாதுகாக்கப்பட்டு வருகின்றன. (உதாரணம்) ஒரு விவசாயியின் வீடு, அதிலுள்ள எல்லா பொருள்களையும் அவர்கள் அன்றாட வாழ்க்கையில் எப்படி வைத்து இருப்பார்களோ அவ்வாறே வைத்துப் பாதுகாத்து வருவதால், அவர்களது வாழ்க்கை முறையினைப் பற்றி பழமை மாறாமல், பார்வையாளர்கள் உணர்ந்து கொள்ள ஏதுவாக அமைகிறது. இத்தகைய திறந்தவெளி அருங்காட்சியகங்கள் பலவேறு இடங்களில் தோற்றுவிக்கப்பட்டன. குறிப்பாக ஸ்கேண்டிநேவியன் நாடுகளில் இவை மிகவும் புகழ்பெற்று விளங்குகின்றன.

நம் நாட்டில் தில்லியிலுள்ள பிரகதி மைதானத்தில் கிராப்ட்ஸ் அருங்காட்சியகத்திலுள்ள கிராமிய வளாகம் இத்தகைய திறந்தவெளி அருங்காட்சியகம் ஆகும். போபாலில் உள்ள தேசீய மனித அருங்காட்சியகம் அந்த நகரத்தின் அருகிலுள்ள ஒரு சிறிய மலையின் மேல் நம் நாட்டில உள்ள பலவகைப்பட்ட மலைவாழ் மக்களின் வாழ்க்கைவியல் சூழல் மாதிரிகளை அமைத்து வருகிறது. அமெரிக்காவில் ஓகையோ மாநிலத்தில் 'கலோனியல் வில்லியம்ஸ்பார்க்' என்ற அருங்காட்சியகம் மிகவும் புதுமையான முறையில் அமைக்கப்பட்டது. இங்கு இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்பு ஒரு கிராமத்தில் அங்குள்ள மக்கள் வாழ்ந்த முறை இப்போதும் அதே விதமாக வாழ்ந்து காட்டப்படுகிறது.

திறந்தவெளி அருங்காட்சியகங்கள் தோன்றியதால் அருங்காட்சியகக் கருத்துருவிலே மாற்றம் ஏற்பட்டு வந்துள்ளது. இந்த புதிய கருத்தின்படி பொருட்கள் இயன்றவரை அவற்றின் இடத்திலேயே வைக்கப்பட வேண்டும். அல்லது அந்த இடத்தின் மாதிரியை உருவாக்கி அவற்றை அங்கே இடம்பெறச் செய்ய வேண்டும். 2–ஆவது உலகப் போருக்குப் பிறகு அருங்காட்சியகங்கள் கல்விப் பணிகளுக்கு மேன்மேலும் முக்கியத்துவம் கொடுத்து வருகின்றன. இந்தக் கருத்தின்படி

கூடங்கள் மாற்றியமைக்கப்படுகின்றன. பார்வையாளர்களைக் கவர்ந்து, அவர்கள் தமது அறிவுத் திறனை வளர்த்துக் கொள்வதற்கும், பொருட்களைப் பார்த்து மகிழ்ச்சி அடைவதற்கும் தகுந்த வசதிகள் அமைக்கப்பட்டு வருகின்றன. நவீன தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்பக் கருவிகளும் தற்போது கிடைக்கின்றன. இத்தகைய மாற்றம் அறிவியல் அருங்காட்சியகங்களில் சிறந்ததொரு அளவில் ஏற்பட்டுள்ளது. இத்தகைய அறிவியல் அருங்காட்சியகங்களில் சிறப்பு அரங்கங்கள் அமைக்கப்பட்டு பார்வையாளர்களுக்குப் பயன்படும் வகையில் திரைப்படங்களும் காட்டப்படுகின்றன. சிறப்பு ஒளிக்கருவிகள், கணிப்பொறி வசதிகள், ஒலிப்பதிவு செய்யப்பட்ட, பார்வையாளர்கள் தாமே இயக்கத் தக்க இயந்திர மாதிரிகள் போன்ற புதுமையான கூறுகள் அங்கு வைக்கப்படுகின்றன.

இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு அருங்காட்சியகங்கள் மிகவும் வளர்ந்து வருகின்றன. புதியதாக சுதந்திரம் பெற்ற நாடுகள் தமது தேசீய உணர்வுகளை எடுத்துக் காட்டும் வகையில் அருங்காட்சியகங்களை அமைத்து உள்ளார்கள். பெரும்பாலும் இந்த அருங்காட்சியகங்கள் அமைப்பதில் இந்த புதிய நாடுகள் இடைவிடாத முயற்சிகளை எடுத்து வருகின்றன.

அருங்காட்சியக வரலாற்றில் பன்னாட்டு அளவில் தோன்றிய நிறுவனங்கள் முக்கியமானவையாகும். இவற்றின் மூலம் அருங்காட்சியக வல்லுநர்கள் கலந்து தமது அனுபவங்களையும், கருத்துக்களையும் பரிமாற்றம் செய்து கொள்ள முடிகிறது. இரண்டாவது உலகப் போருக்கு முன்பே அருங்காட்சியகங்களின் பணிகளை ஒருங்கிணைப்பதற்குப் பன்னாட்டு அருங்காட்சியகக் குழு (International Council of Museums) தோற்றுவிக்கப்பட்டது. இதன் தலைமை அலுவலகம் பாரீஸ் நகரில் உள்ளது. அருங்காட்சியக வல்லுநர்களுக்குரிய மிகப்பெரிய நிறுவனம் இது. இதற்குப் பல நாடுகளிலும் தேசீய குழுக்கள் என்ற அமைப்புள்ளது. இந்த குழுக்கள் மூலம் அந்தந்த நாட்டின் அருங்காட்சியக வல்லுநர்கள் இந்த நிறுவனத்தோடு தொடர்புகொண்டு வருகின்றனர். மேலும் அருங்காட்சியகப் பணியில் ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு சிறப்புக் குழுவை இந்த நிறுவனம் அமைத்துள்ளது. எடுத்துக்காட்டாக தொழில்நுட்பக்

குழு, பதிப்புக்குழு, ஆடைகள் குழு முதலியவை. 'ஐகாம்'(ICOM) என்கிற இந்த நிறுவனம் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை முக்கியமான மாநிலங்களில் மாநாடுகள் நடத்தி வருகிறது. பன்னாட்டு அருங்காட்சியக வல்லுநர்கள் இந்த மாநாட்டில கலந்துகொண்டு அருங்காட்சியகங்களின் செயறபாடுகள் குறித்து கலந்தாலோசித்து, கருத்துக்களை வெளியிடுகிறார்கள். அதே நேரத்தில் 'ஐகாமின்' குழுககளும் அங்கே கலந்து கொணடு தம்முடைய சிறப்புத் தலைப்புக்களைப் பற்றி கலந்து உரையாடுகின்றன. மேலும் 'ஐகாமுக்கு' உலகத்தில் ஆங்காங்கு சிறப்பு நிறுவனங்கள் உள்ளன. ஆசியக் கண்டத்திற்கு உரிய இத்தகைய நிறுவனம் தறபோது கல்கத்தாவில் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த நிறுவனம் முதன முதலில் தில்லியில் அமைக்கப்பட்டு பிறகு தென்கொரியாவில் சியோல் நகரத்திற்கும், ஜப்பானில் டோக்கியோ நகரத்திறகும் மாற்றப்பட்டு 1990 ஆம் ஆண்டு இந்தியாவில் கல்கத்தாவிற்கு கொண்டு வரப்பட்டது. ஆசியக் கண்டத்தில் உள்ள அருங்காட்சியகங்கள் தொடர்பான செயல்களை இந்தக் குழு ஆய்கிறது.

பன்னாட்டளவில் அருங்காட்சியக வளர்ச்சிக்காகப் பாடுபட்டுவரும் மற்றொரு நிறுவனம் 'யுனெஸ்கோ'. யுனெஸ்கோவில் அருங்காட்சியகங்களுக்காக ஒரு தனி பகுதி ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது. இந்தப் பகுதி ஐகாமுடன் தறபோது இணைந்து, அருங்காட்சியகப் பணிக்காக வேண்டிய நல்கைகளை வழங்குகிறது.

பாரீசில் உள்ள தனது தலைமை அலுவலகத்தில் அருங்காட்சியகப் பதிப்பு மையத்தை நடததுவது யுனெஸ்கோவின் முக்கியமானதொரு பணியாகும். மேலும் யுனெஸகோ, அருங்காட்சியகம் என்ற பெயரில் ஒரு சிறந்த இதழை வெளியிட்டு வருகிறது. ஐகாம் உறுப்பினர்களுக்கு இந்த இதழ் தரப்படுகிறது.

தேசீய அளவில் அருங்காட்சியகங்களுக்குச் சிறந்த நிறுவனங்கள் சில உள்ளன. எடுத்துக்காட்டாக இலண்டனில் உள்ள "மியூசியம்ஸ் அசோசியேஸன்", நியூயார்க்கில் உள்ள "அமெரிக்கன் மியூசியம் அசோசியேஸன்", நம் நாட்டில் ஹைதராபாத்தில் தற்போதுள்ள "மியூசியம் அசோசியேஸன் ஆப் இந்தியா". இந்த நிறுவனங்கள் மாநாடுகளையும்,

கருத்தரங்குகளையும் நடத்துவது மட்டும் அன்றி இதழ்களையும் வெளியிட்டு வருகின்றன. இந்த இதழ்களில் மேற்படி நிறுவனங்களில் உறுப்பினர்கள், அருங்காட்சியகங்களைப் பற்றி ஆய்வு கட்டுரை படைத்து வெளியிடுகின்றனர்.

இந்த வகையில் தேசீய, பன்னாட்டு அளவில் அருங்காட்சியகங்களைப் பற்றிய கருத்துக்கள் மாற்றம் கொண்டு வருகின்றன. வளர்ச்சி அடைந்த நாடுகளிலுள்ள அருங்காட்சியகங்களின் சிறந்த சாதனைகள் வளர்ச்சி அடைந்துவரும் நாடுகளிலுள்ள அருங்காட்சியகங்களின் பிரச்சினைகள் எல்லாவற்றையும் ஆழ்ந்த முறையில் ஆராய்ச்சி செய்வதில் அருங்காட்சியகக் கருத்தரங்கு பற்றி புதுக் கருத்துக்கள் ஏற்பட்டுள்ளன. அருங்காட்சியக வல்லுநர்கள் கூறுவது யாதெனில், இதுவரையில் அருங்காட்சியகங்கள் பொருட்களை மையமாகக் கொண்டே பணியாற்றிக் கொண்டுவந்துள்ளது. தற்போது மக்களைக் கருத்தில் கொண்டு பணியாற்ற வேண்டிய காலம் வந்துவிட்டது. ஆகையால் மக்களைப் பரந்த அளவில் ஈர்க்கும்படி தமது பணிகளை அருங்காட்சியகங்கள் அமைக்க வேண்டும். இவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட கருத்துரு புதிய 'அருங்காட்சியக இயல்' (New Museology) என்று சொல்லப்படுகிறது.

இவ்வாறு 17–ஆவது நூற்றாண்டில் தனிப்பட்ட சேகரிப்புக்கள் மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்ட நிலையில் தோன்றிய அருங்காட்சியகங்கள் தற்போது மேன்மேலும் பரந்த அளவில் மக்களைச் சென்றடைந்து மனிதனைப் பற்றியும். அவனது சுற்றுப்புறச் சூழலைப் பற்றியும், பாரம்பரியத்தைப் பற்றியும் விழிப்புணர்ச்சியை உருவாக்க முயல்கிறது.

# 4. அருங்காட்சியகத்தின் செயல்பாடுகள்

அருங்காட்சியகத்தின் செயல்பாடானவை கீழ்வருமாறு அமைகிறது. அவை:

1) சேகரிப்பு (Collection)
2) பதிவு செய்தல் (Documentation)
3) பொருள்களைப் பாதுகாத்தல் (Conservation & Preservation)
4) காட்சிப்படுத்துதல் (Presentation)
5) ஆய்வும், வெளியீடுகளும் (Research and Publications)
6) கல்விப்பணிகள் (Educational Activities)
7) திருட்டு மற்றும் தீ விபத்துக்களிலிருந்து பாதுகாப்பு (Security)

இனி அருங்காட்சியகத்தின் செயல்பாடுகளை ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

## 1. சேகரிப்பு (Collection)

முதலில் ஒரு அருங்காட்சியகத்தை அமைப்பதற்குப் பொருள் சேகரிப்பு மிகவும் அவசியமாகிறது. இச்சேகரிப்பானது அந்தந்த அருங்காட்சியக வகைகளுக்கேற்ப மாறுபடுகிறது. உதாரணமாக தொல்லியல் அருங்காட்சியகமென்றால் தொன்மையான கற்கருவிகள், மனிதன் பழங்காலத்தில் பயன்படுத்திய அணிகலன்கள், மட்பாண்டங்கள், ஆயுதங்கள், மற்றும் தொல்லியல் அகழ்வாராய்ச்சியில் கிடைத்த பொருள்கள், பழைய கல்வெட்டுக்கள், நாணயங்கள் ஆகியவை சேகரிக்கப்படுகின்றன.

இயற்கை வரலாறு பற்றிய அருங்காட்சியகமென்றால் வண்டினங்கள், பலவகையான வண்ணத்துப்பூச்சிகள், பறவைகள், உயிரினங்கள், மீன் வகைகள் ஆகியவை சேகரிக்கப்பட்டுப் பின்னர் பதப்படுத்தப்பட்டு இவ்வகை அருங்காட்சியகங்களில் வைக்கப்படுகின்றன. அருங்காட்சியகத்தில் பொருள்கள் சேகரிப்பு என்பது அன்றாடம் நடைபெறும் நிகழ்ச்சியாகும். இதற்குக் கால வரையறை என்பது கிடையாது.

2. பொருள்களைப் பதிவு செய்தல் (Documentation)

அருங்காட்சியகத்தில் சேகரிக்கப்படும் பொருள்களை உடனடியாக அவற்றிற்குரிய பதிவேட்டில் பதிவு செய்வது இன்றியமையாததாகும்.

அருங்காட்சியகத்தின் செயல்பாடுகளில் இது மிகவும் முக்கியமான ஒன்றாகும். சேகரிக்கப்பட்ட பொருள்களுக்கு எண் கொடுப்பது மற்றும் அவைகளின் அளவு, தன்மை, காலம் மற்றும் இன்னபிற விவரங்களைப் பதிவு செய்தல் அவசியம். ஏனெனில் பொருள்களை மிகவும் எளிதில் இனங்கண்டு கொள்வதற்கு இப்பதிவு முறைகள் உதவுகின்றன. மேலும் எதிர்பாராவிதமாகப் பொருள்கள் திருட்டுப் போய்விட்டாலோ அல்லது காணாமல் போய்விட்டாலோ அப்பொருள்கள் பற்றிய குறிப்பைக் கொண்டு அடையாளம் தெரிந்து கொள்ள முடியும். அருங்காட்சியகத்தில் பொருள்களைப் பதிவு செய்வதற்கென தனிப்பிரிவு அமைந்திருக்க வேண்டும்.

3. பொருள்களைப் பாதுகாத்தல் (Conservation and Preservation)

அருங்காட்சியகத்தில் சேகரிக்கப்படும் பொருள்கள் சேகரிப்பின்போதே மிகவும் மோசமான நிலையில் இருக்கலாம். சில பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்ட பிறகு சில ஆண்டுகள் கழித்து கெட்டுப் போய்விடலாம். இப்படிப்பட்ட பொருள்களை வேதியல் முறைகளினால் சுத்தம் செய்து பாதுகாப்பது அருங்காட்சியகத்தின் அன்றாட நடவடிக்கைகளில் ஒன்றாகும். இதற்காக தனியாக ஒரு வேதியல் கூடத்தை பெரிய

அருங்காட்சியகங்களில் அமைத்திருப்பர். இவ்வாறு வேதியல் கூட வசதி இல்லாத அருங்காட்சியகங்கள் கெட்டுப்போன பொருள்களை உரிய முறையில் பதிவேடுகளில் பதிவு செய்து கொண்டு வேதியல் கூட வசதி உள்ள அருங்காட்சியகங்களுக்கு அனுப்பி பொருள்களை சீர் செய்து கொண்டு திரும்ப பெற்றுக் கொள்ளலாம். பொருள்கள் நல்ல நிலையில் உள்ளனவா என்பது தினமும் கண்காணிக்கப்படுகின்றன. அருங்காட்சியகத்தில் தினமும் பார்வையாளர்கள் அனுமதிக்கப்படுவதற்கு முன்பு கூடங்களின் உதவியாளர்களால் (Gallery Assistants) பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள எல்லாப் பொருள்களும் தினமும் தூசு அகற்றப்பட்டு சுத்தம் (dusting) செய்யப்படுகின்றன. கூடங்களும் பெருக்கி சுத்தம் செய்யப்படுகின்றன. இவை அருங்காட்சியகப் பொருள்கள் விரைவில் கெட்டுப் போகாமல் இருப்பதற்கு வழி வகுக்கும்.

## 4. காட்சிப்படுத்துதல் (Presentation)

காட்சிப்படுத்துவது என்பது மிகவும் நுண்ணிய ஒரு பணியாகும். இப்பணியானது அடிக்கடி செய்யப்படுவதில்லை என்றாலும் குறிப்பிட்ட காலங்களுக்கொருமுறை இப்பணி அருங்காட்சியகங்களில் மேற்கொள்ளப்படுகின்றன.

பொருள்களை அவற்றிற்குரிய காட்சிப் பெட்டிகளிலோ, அல்லது காட்சிப்பலகையிலோ வைத்துக் காட்சிப்படுத்தப்படுகின்றன. இக்காட்சிப் பெட்டிகளும், காட்சிப் பலகைகளும், அருங்காட்சியகத்தின் உள்ளே அமைக்கபபட வேண்டிய அமைப்பு முறை (Layout) உருவாக்கப்பட்டு பிறகு அதறகேற்றவாறு அமைக்கப்படுகின்றன. மிகப்பெரிய அருங்காட்சியகங்களில் இதற்கெனத் தனியாக வடிவமைப்புப் பிரிவுகள் (Design Section) உள்ளன. இப்பிரிவில் புதிது புதிதாகக் காட்சிப் பெட்டிகள் பல்வேறு விதங்களில் பொருள்களுக்கு ஏற்ப வடிவமைக்கப்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு கூடங்களை மாற்றியமைக்கும் பணி அருங்காட்சியகங்களில் நடைபெறுகின்றன.

5. ஆய்வும், வெளியீடுகளும் (Research and Publications)

அருங்காட்சியகங்களில் பலவேறு பொருள்களைப் பற்றியும் பலவேறு தலைப்புகளில் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. அருங்காட்சியகங்களின் செயல்பாடுகளில் பொருள்களைக் காட்சிப்படுத்துவது மட்டுமல்லாமல் அவைகளைப் பற்றி ஆய்வு மேற்கொள்வது சிறப்பான ஒன்றாகும். அருங்காட்சியகத்திலுள்ள ஒவ்வொரு பொருள் பற்றியும் ஆய்வு செய்து அவைகளின் சிறப்பை வெளிக்கொணர்வது அருங்காட்சியகங்களின் இன்றியமையாத பணிகளில் ஒன்றாகும். இவ்வாறு ஆய்வு செய்யப்பட்ட பொருள்களைப் பற்றி மக்களுக்குத் தெரிவிப்பதற்கு வெளியீடுகள் மிகவும் உதவுகின்றன. அருங்காட்சியகங்கள் கலைப்பொருள்களைப் பற்றி முழுமையான ஆய்வு செய்தபின் அவைகளை நூல் வடிவில் வெளியிடுகின்றன. கையேடுகளும் அருங்காட்சியகத்தில் வழங்கப்படுகின்றன.

6. கல்விப்பணிகள் (Educational activities)

அருங்காட்சியகங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள பொருள்களுக்கு சுருக்கமாகவும் அதே சமயத்தில் எளிதில் புரிந்து கொள்ளும் வண்ணம் விளக்க அட்டைகள் (Labels) வைக்கப்பட்டிருக்கும். ஆனால் பல பொருள்களைப் பற்றி மிகுந்த விளக்கம் தேவைப்படுவதால் அனைத்து அருங்காட்சியகங்களிலும் பொருள்களைப் பற்றி விளக்கிக் கூறுவதற்கு விளக்குநர் (Guide) இருப்பார். இவ்விளக்குநர் அருங்காட்சியகத்திலுள்ள அனைத்துப் பொருள்களைப் பற்றியும் நன்கு அறிந்திருக்க வேண்டும். அருங்காட்சியகத்தில் விளக்கவுரை அளிப்பதென்பது மற்ற எல்லாப் பணிகளையும் விட தலையாய பணியாகும்.

அருங்காட்சியகங்களில் சிறப்புக் கண்காட்சிகளை நடத்துவது, மாணவ, மாணவியர்க்கு ஓவியப்போட்டி நடத்துவது, வினாடிவினா நடத்துவது, அருங்காட்சியகங்களில் சிறப்புச் சொற்பொழிவுகள் நடத்துவது ஆகியவை போன்ற கல்விப்பணிகள் அருங்காட்சியகங்களில் அடிக்கடி செய்யப்படும் பணிகளாகும்.

அருங்காட்சியகங்களில் வருகைதரும் பார்வையாளர்களுக்கு அங்குள்ள பொருள்களைப் பற்றி விளக்கமான கையேடுகளை

இலவசமாக வழங்கலாம். மற்றும் தனியாக அருங்காட்சியகத்திலேயே ஒரு நூலகம் ஏற்படுத்தி மாணவர்க்கும், ஆய்வாளர்களுக்கும் அந்நூலகத்தைப் பயன்படுத்திக்கொள்ள அனுமதி வழங்கலாம். அவை அருங்காட்சியகத்தின் அன்றாடப் பணியாக அமையலாம்.

அருங்காட்சியகத்தைப் பற்றியும், அங்கு நடக்கும் முக்கிய நிகழ்ச்சிகள், சிறப்புக் கண்காட்சிகள், விழாக்கள் ஆகியவற்றைப் பற்றியும் மக்கள் அறிந்து கொள்வதற்காக விளம்பரம் (Publicity) செய்ய வேண்டியது அருங்காட்சியகத்தின் பணியாகும். தினபத்திரிக்கைகள், வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றின் மூலம் அருங்காட்சியக நிகழ்ச்சிகள் மக்களைச் சென்றடைய வாய்ப்பு ஏற்படுகிறது. பேருந்து நிலையம், தொடர்வண்டி நிலையம் மற்றும் முக்கியமான சுற்றுலாத் தலங்களில் அருங்காட்சியகம் பற்றிய விளம்பரப் பலகைகளை மக்கள் பார்க்கும் வண்ணம் வைக்கப்பட வேண்டியதும் அருங்காட்சியகத்தின் பணியாகும். எந்த ஒரு நிறுவனத்திற்கும் விளம்பரமே பிரதானமாக இருப்பதால் அருங்காட்சியகம் பற்றிய விளம்பரம் செய்வது அவசியமாகிறது.

## 7. திருட்டு மற்றும் தீ விபத்துகளிலிருந்து பொருள்களைப் பாதுகாத்தல் (Security)

அருங்காட்சியகத்தில் அரிய பொருள்கள் இருப்பதால் அவை திருட்டுப் போவதற்கு மிகுந்த வாய்ப்புக்கள் உள்ளன. இவ்வரிய பொருள்கள் திருட்டு மற்றும் தீ விபத்துக்களில் அழிந்து போகாமலிருக்க பாதுகாப்புப் பணிகள் சிறப்புடன் இருத்தல் அவசியமாகும். இதற்காக அருங்காட்சியகங்களில் பொருள்கள் வைக்கப்பட்டுள்ள எல்லா இடங்களிலும் காவலர்களை அமர்த்தி பாதுகாத்தல் வேண்டும். மேலே கூறப்பட்ட மற்ற பணிகள் அருங்காட்சியக வேலை நேரங்களில் மட்டும் செய்யப்படும் பணியாகும். ஆனால் பாதுகாக்கும் பணியானது இரவு, பகல் எந்நேரமும் செய்யப்படும் பணியாகும். அருங்காட்சியக வேலை நேரங்களில் அருங்காட்சியகத்தின் உள்ளேயும், மற்ற நேரங்களில் அருங்காட்சியகத்தின் வெளியிலும், கட்டடத்தைச் சுற்றியும் பாதுகாப்பது பயனுடையதாகும். ஒவ்வொரு நாளும் அருங்காட்சியக வேலை நேரம் முடிந்ததும் அனைத்துக்

கூடங்களையும் பார்வையிட்டு, பார்வையாளர்கள் அனைவரும் வேளியேறிவிட்டனரா என்பதை உறுதி செய்து கொண்டு அதன் பிறகு அருங்காட்சியகத்தை மூடவேண்டும். ஒவ்வொரு நாளும் காலையில் அருங்காட்சியகம் திறக்கப்பட்டவுடன் எல்லாப் பொருள்களும் அந்தந்த இடத்தில் சரியாக இருக்கின்றனவா என்பது முக்கியமாக கவனிக்கப்பட வேண்டிய பணியாகும். அருங்காட்சியகத்தில் உள்ள மின் இணைப்புகள் பழுதடைந்தால் தீப்பிடிக்கும் அபாயம் உண்டு. மேலும் அருங்காட்சியகத்தினுள் பார்வையாளர்கள் புகைப்பிடிக்க முற்படும்போதும் தீ விபத்துக்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு. இவ்வகையான செயல்கள் நடைபெறாமல் விழிப்புடன் பார்த்துக் கொள்வதும் காவலர் பணியாகும்.

# 5. அருங்காட்சியக வகைகள்

இந்தியாவில் தறபோது 408 அருங்காட்சியகங்கள் உள்ளன. இவற்றில் 69 அருங்காட்சியகங்கள் மத்திய அரசால் நிர்வகிக்கப்படுகின்றன. இந்தியாவிலுள்ள மாநில அரசுகளால் நிர்வகிக்கப்படும் அருங்காட்சியகங்கள் 169 ஆகும். 9 அருங்காட்சியகங்கள் நகராட்சிகளாலோ அல்லது மாவட்ட ஆட்சியாளர்களாலோ நிர்வகிக்கப்படுகின்றன. பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி நிறுவனங்கள், மருத்துவக் கல்லூரிகள், விவசாயக் கல்லூரிகளின் கீழ் இயங்கும் அருங்காட்சியகங்கள் 73. 42 அருங்காட்சியகங்கள் கோவில் நிர்வாகத்தாலும், சொஸைட்டி, டிரஸ்ட் போன்ற அமைப்புக்களாலும் நிர்வகிக்கப்படுகின்றன. தனியார்களால் 46 அருங்காட்சியகங்கள் நிர்வகிக்கப்படுகின்றன. அருங்காட்சியகங்கள் பலவகைகளாகப் பிரிக்கப்படுகின்றன. அவை:

1. கலை மற்றும் தொல்லியல் அருங்காட்சியகம் (Art & Archaeology Museum)
2. அறிவியல் மற்றும் தொழிலியல் அருங்காட்சியகம் (Science and Technology museum)
3. இயற்கையியல் அருங்காட்சியகம் (Natural History museum)
4. மானிடவியல் அருங்காட்சியகம் (Anthropology museum)
5. குழந்தைகள் அருங்காட்சியகம் (Children's museum)
6. பல்நோக்கு அருங்காட்சியகம் (Multipurpose museum)
7. ராணுவ அருங்காட்சியகம் (Defence museum)
8. கள அருங்காட்சியகம் (Site museum)
9. திறந்தவெளி அருங்காட்சியகம் (Open Air museum)
10. கைவினைப் பொருள்கள் அருங்காட்சியகம் (Crafts museum)

11. விவசாய அருங்காட்சியகம் (Agricultural museum)

12. உடல்நல அருங்காட்சியகம் (Health museum)

13. கானக அருங்காட்சியகம் (Forest museum)

14. அரண்மனை மற்றும் கோட்டை அருங்காட்சியகம் (Palace and Fort museum)

15. தனி நபர் அருங்காட்சியகம் (Personalia museum)

16. தனி அருங்காட்சியகம் (Specialised museum)

17. நாட்டுப்புற அருங்காட்சியகம் (Folklore museum)

இனி இவ்வருங்காட்சியக வகைகளைப் பற்றிச் சற்று விரிவாகப் பார்ப்போம்.

1. கலை மற்றும் தொல்லியல் அருங்காட்சியகம்

இவ்வகை அருங்காட்சியகங்களில் உலோகச் சிலைகள், கற்சிலைகள், மரச் சிற்பங்கள் மற்றும் தொல்லியல் அகழாய்வு மூலம் கிடைக்கும் பொருட்கள், பழைய நாணயங்கள், முத்திரைகள், கல்வெட்டுக்கள் ஆகியவை இடம் பெறுகின்றன. இந்தியாவில் ஏறக்குறைய 131 தொல்லியல் அருங்காட்சியகங்கள் இவ்வகை அருங்காட்சியகங்களுக்குச் சிறந்த உதாரணங்களாகும். கலைப் பொருட்களை மட்டும் காட்சிப்படுத்தியுள்ள அருங்காட்சியகங்களும் உண்டு. உதாரணமாக தஞ்சாவூர் கலைக்கூடமும், பெங்களூரிலுள்ள வெங்கடப்பா கலைக்கூடமும் கலைப்பொருள்களை மட்டும் கொண்டுள்ளன. புதுதில்லியிலுள்ள தேசீய சமகாலக்கலை அருங்காட்சியகம், பாரிசிலுள்ள லூவரு அருங்காட்சியகம் போன்றவையும் இவ்வகை அருங்காட்சியகங்களுக்கு உதாரணங்கள்.

## 2.அறிவியல் மற்றும் தொழிலியல் அருங்காட்சியகம்

அறிவியலில் அடிப்படையிலான செய்திகளை சாதாரண மக்களும் அறிந்து கொள்வதற்கு இவ்வகையான அருங்காட்சியகங்கள் பெரிதும் உதவுகின்றன. உதாரணமாக மின்சாரம் எப்படி நீர்மின் உற்பத்தி நிலையங்கள் மூலமாக எடுக்கப்படுகின்றன என்பதைப் பலரும் அறிந்திருக்க வாய்ப்பு இல்லை. இவ்வகை அருங்காட்சியகங்களில் நீர்மின் உற்பத்தி நிலையங்கள் போன்ற சிறிய அளவில் மாதிரிகளை அமைதது (models) மின்சாரம் எப்படி உற்பத்தி செய்யப்படுகிறது என்பது காட்டப்படுகின்றது. அது போன்றே தொலைபேசி எப்படி வேலை செய்கிறது என்பது போன்ற அடிப்படையான செய்திகளைத் தெரிந்து கொள்ளவும் இவ்வகை அருங்காட்சியகங்கள் உதவுகின்றன. பெங்களூரிலுள்ள விஸ்வேஸ்வரய்யா அறிவியல் மற்றும் தொழிநுட்ப அருங்காட்சியகம், பிலானியிலுள்ள அறிவியல் மற்றும் தொழிலியல் அருங்காட்சியகம் ஆகியவை இவ்வகை அருங்காட்சியகங்களுக்குச் சிறந்த சான்றுகளாகும். மேலும் நேரு அறிவியல் மையம்–பம்பாய், பிர்லா அறிவியல் அருங்காட்சியகம்–கல்கத்தா, திருநெல்வேலி மாவட்ட அறிவியல் மையம் ஆகியவை ஏற்படுத்தப்பட்டுள்ளன. சென்னையில் விரைவில் ஒரு அறிவியல் அருங்காட்சியகம் நிறுவப்படவுள்ளது.

## 3. இயற்கையியல் அருங்காட்சியகம்

உலகில் சுற்றுப்புறச்சூழல் எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. சில இடங்களில் வெப்பம் அதிகமாகவும், சில இடங்களில் குளிர் அதிகமாகவும் உள்ளது. இச்சுற்றுப்புறச்சூழலுக்கு ஏற்றவாறு இயற்கை வளமும் மாறுபடுகிறது. அதேபோல் உலகின் ஒவ்வொரு பகுதியிலும் உள்ள சுற்றுப்புறச் சூழலுக்கு ஏற்ப உயிரினங்களும், தாவரங்களும் வளர்கின்றன. இயற்கையியல் அருங்காட்சியகங்களில் தாவரவியல், விலங்கியல், புவியியல் போன்றவற்றைப் பற்றிக் காட்சிப்படுத்தப்படுகின்றன. பல ஆண்டுகளுக்கு முன்பு இருந்த டைனோசார் (Dinosaur) போன்ற ராட்சத உயிரினங்கள் இப்பொழுது இல்லை. ஆனால் டைனோசரின் எலும்புக்கூடு

அமெரிக்காவிலுள்ள இயற்கையியல் அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. பிற அருங்காட்சியகங்களில் டைனோசாரைப் போன்ற மாதிரிகள் (models) வைக்கப்பட்டுள்ளன. இதுபோன்று பல ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்து அழிந்து போன உயிரினங்களைப் பற்றிய வரலாற்றையும், தாவரங்களைப் பற்றியும் இவ்வகை அருங்காட்சியகங்களில் காணமுடிகிறது. புது தில்லியிலிருக்கும் இயற்கை வரலாறு பற்றிய "தேசீய அருங்காட்சியகமும்" (National Museum of Natural History) டார்ஜிலிங்கிலுள்ள இயற்கை வரலாறு அருங்காட்சியகமும் இவ்வகை அருங்காட்சியகங்களுக்கு உதாரணங்களாகும்.

4. மானிடவியல் அருங்காட்சியகம்

மனிதன் பரிணாம வளர்ச்சியைப் பற்றியும், மனித குலத்தின் வகைகளைப் பற்றியும் இவ்வகை அருங்காட்சியகங்களில் அறிய முடிகிறது. மேலும் பழங்குடியினரின் வாழ்க்கைமுறை அவர்களுடைய சடங்குகள், விழாக்கள், நடனங்கள், சமய வழிபாடுகள், பழக்க வழக்கங்கள் ஆகியவை இங்கு காட்சிப்படுத்தப்படுகின்றன. புதுதில்லி பல்கலைக்கழகத்திலும், இந்தியன் அருங்காட்சியகம், கல்கத்தாவிலும் மானிடவியல் அருங்காட்சியகங்கள் உள்ளன. சென்னையிலுள்ள அரசு அருங்காட்சியகத்தில் மானிடவியல் கூடம் (Anthropology gallery) உள்ளது. போபாலில் தேசீய மானிடவியல் அருங்காட்சியகம் நிறுவப்பட்டுள்ளது.

5. குழந்தைகள் அருங்காட்சியகம்

முன்பு அருங்காட்சியகம் என்பது படித்த அறிவாளர்கள் மட்டும் வருகைதரும் இடமாக இருந்தது. ஆனால் இப்பொழுதோ படித்த அறிவாளர்கள் மட்டுமல்லாது பாமர மக்கள், மாணவ, மாணவியர். குழந்தைகள் என்று பலதரப்பட்டவர்களும் வருகைதரும் இடமாக உள்ளது. ஆனால் எவ்வளவுதான் நவீன உத்திகளைக் கையாண்டு அருங்காட்சியகம் அமைக்கப்பட்டிருந்தாலும் எல்லாத் தரப்பினருடைய விருப்பத்தையும் பூர்த்தி செய்வதென்பது சற்று இயலாததாகும்.

ஒரு அருங்காட்சியகத்தின் முக்கியமான பணி கல்விப்பணியாகும். அருங்காட்சியகத்திற்கு வருகைதரும் பார்வையாளர்களுக்குப் பொருள்களைப் பற்றிய அறிவைப் போதிப்பது தலையாய பணியாகும். முக்கியமாக நாளைய தலைமுறையினரான இன்றைய குழந்தைகளுக்கு அருங்காட்சியகத்தின் மூலம் கலையறிவையும், அறிவியல் அறிவையம் போதிப்பது அருங்காட்சியகங்களின் கடமையாகும். குழந்தைகள் பொருள்களைப் பார்த்துப் புரிந்து கொள்வதைவிட அப்பொருள்களைத் தொட்டு உணர்ந்து, பங்கேற்று அப்பொருள்களைப் பற்றி நனகு அறிந்து கொள்கின்றனர். சாதாரணமாக அருங்காட்சியகங்களில் பொருள்களைத் தொடுவதற்குப் பார்வையாளர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. அதனால் இவ்வருங்காட்சியகங்கள் குழந்தைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாததாகையால், குழந்தைகளுக்கென்று தனியாக அருங்காட்சியகங்கள் இப்பொழுது அமைக்கப்பட்டுள்ளன. இவ்வருங்காட்சியகங்களில் குழந்தைகளைக் கவர்வதற்காகப் பொம்மைகள் வைக்கப்படுகின்றன. இவ்வகை அருங்காட்சியகங்களில் குழந்தைகள் பொருள்களைத் தொட்டு உணர்ந்து, அதைப் போன்றே மாடல்கள் செய்யவும், அனுமதிக்கப்படுகின்றன. ஒரு பொருளைப் பற்றி நன்கு அறிந்து கொள்வதற்கு இவ்வகை அருங்காட்சியகங்கள் குழந்தைகளுக்கு மிகுந்த உதவியளிக்கின்றன. புதுதில்லியிலுள்ள பாலபவனமும், லக்னோவிலுள்ள மோதிலால் நேரு சங்கராலயாவும் இவ்வகை அருங்காட்சியகத்திற்கு உதாரணங்களாகும். சென்னையிலுள்ள அரசு அருங்காட்சியக வளாகத்தில் 1988–ஆம் ஆண்டில் ஒரு குழந்தைகள் அருங்காட்சியகம் அமைக்கப்பட்டது.

6. பல்நோக்கு அருங்காட்சியகம்

இவ்வகை அருங்காட்சியகங்களில் பல்வேறு துறைகளைப் பற்றிய பொருள்களும் காட்சிப்படுத்தப்படுகின்றன. இங்கு மனிதனுக்குத் தேவையான அடிப்படை அறிவியல், வரலாறு பற்றிய செய்திகள், தொல்லியல், மானிடவியல் போன்ற அனைத்துத் துறைகளைப் பற்றியும் தனித்தனியே கூடங்கள் அமைத்து பொருள்கள் காட்சிப்படுத்தப்படுகின்றன. ஒவ்வொரு கூடத்திற்கும் தனித்தனியே காப்பாளர்கள், விளக்குநர்கள், மற்றும் தொழில்

நுட்பப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டு இவ்வகை அருங்காட்சியகங்கள் செயல்படுகின்றன. ஒரு துறையிலேயே கவனம் செலுத்துபவர்கள் மற்ற துறைகளைப் பற்றியும் அறிய முடிகிறது. உதாரணமாக அறிவியலிலேயே நாட்டமுள்ளவர்கள் இவ்வகை அருங்காட்சியகங்களுக்கு வருகை தரும்பொழுது இந்தியக் கலைகளைப் பற்றியும் தொல்லியலைப் பற்றியும் மானிடவியலைப் பற்றியும் அறிந்து கொள்வதற்குப் பெரிதும் வாய்ப்பு ஏற்படுகிறது. இவ்வகை அருங்காட்சியகங்களுக்கு உதாரணமாக சென்னையிலுள்ள அரசு அருங்காட்சியகம், இந்தியன் அருங்காட்சியகம்–கல்கத்தா, பரோடா அருங்காட்சியகம் ஆகியவற்றைக் கூறலாம்.

## 7. ராணுவ அருங்காட்சியகம்

இவ்வகை அருங்காட்சியகத்தில் ராணுவத்தின் நீண்டகால வரலாறும், இதுவரை நடந்த போர்களைப் பற்றியும், அவற்றில் பெற்ற வெற்றிகளைப் பற்றியும் காட்சிப்படுத்தியுள்ளனர். மேலும் ஆயுதங்கள், தளவாடங்கள் ஆகியவையும் காட்சிப்படுத்தப்படுகின்றன. எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்களும், தளவாடங்களும் தனியே காட்சிக்கு வைக்கப்படுகின்றன. இவ்வருங்காட்சியகங்கள் மூலம் நாட்டின் படைபலமும், அதனுடைய கட்டுப்பாடும் மக்களுக்குத் தெரியவருகிறது. இதன்மூலம் மக்களுக்கு நாட்டுப்பற்றும், நம்பிக்கையும் ஏற்படுகின்றன. பூனாவில் தேசியப் பாதுகாப்பு நிறுவனம் (National Defence Academy) ஒரு அருங்காட்சியகம் அமைத்துள்ளது. புதுதில்லியில் பாலம் என்னுமிடத்தில் விமானப்படை அருங்காட்சியகம் அமைந்துள்ளது.

## 8 கள அருங்காட்சியகம்

கள அருங்காட்சியகம் என்பது அகழ்வாராய்ச்சி செய்யப்பட்ட இடத்திலேயே அங்கு கிடைத்த பொருள்களை வைத்து அருங்காட்சியகம் அமைப்பதாகும். மேலும் அகழ்ந்த குழிகளை மூடிவிடாமல் அப்படியே அவைகளைப் பார்வையாளர் காணும் வண்ணம் அமைத்துப் பாதுகாக்கின்றனர்.

அகழ்வாராய்ச்சி செய்யப்பட்ட ஈமக்குழிகளும் அங்கு கிடைக்கும் பொருள்களும் அவை இருந்த நிலையிலேயே (In situ) காட்சிப்படுத்தப்படுகின்றன. இவ்வகை அருங்காட்சியகங்கள் பெரும்பாலும் இந்தியத் தொல்லியல் அளவைத் துறையினராலும் தமிழ்நாடு தொல்லியல் துறையினராலும் அமைக்கப்பட்டு நிர்வகிக்கப்படுகின்றன. நாகார்ஜுனகொண்டா, அமராவதி, சாரநாத் ஆகியவை கள அருங்காட்சியகங்களுக்கு நல்ல உதாரணங்களாகும்.

## 9. திறந்தவெளி அருங்காட்சியகம்

திறந்த வெளியில் பொருள்களைக் காட்சிப்படுத்தி மக்களுக்கு ஒரு இனத்தைப் பற்றியோ அல்லது ஒரு நாட்டின் பண்பாட்டு வாழ்க்கையைப் பற்றியோ சித்தரிப்பது திறந்தவெளி அருங்காட்சியகத்தின் தன்மையாகும். திறந்த வெளியில் ஒரு கிராமத்தையே உருவாக்கி, கிராமத்தில் நடைபெறும் தொழில்கள், விழாக்கள், பண்பாட்டு நிகழ்ச்சிகள் தொடர்பான பொருட்களைக் காட்சிப்படுத்தித் திறந்தவெளி அருங்காட்சியகம் அமைக்கப்படுகிறது. உதாரணமாக பழங்குடி மக்களைப் பற்றிய திறந்தவெளி அருங்காட்சியகம் என்றால் அங்கு பழங்குடியினரின் வீட்டைப் போன்றே வீடுகள், தெருக்கள், அவர்கள் வணங்கும் கோயில் அமைப்புகள், அவர்களுடைய தொழில்கள், அவர்களுடைய போக்குவரத்து வாகனங்கள் மற்றும் அவர்களுடைய வாழ்க்கையில் தொடர்புடைய அனைத்துப் பொருட்களும் காட்சிப்படுத்தப்பட்டு இந்த அருங்காட்சியகத்தைப் பார்வையிடும்போது பார்வையாளர்கட்கு பழங்குடியினரின் ஒரு கிராமத்திற்கு வருகைபுரிந்து அவர்களின் பண்பாட்டு வாழ்க்கையில் பங்கு கொண்டதைப் போன்ற உணர்வை ஏற்படுத்த வேண்டும். மத்தியப் பிரதேச மாநிலத்திலுள்ள போபாலில் உள்ள தேசிய மனித அருங்காட்சியகத்தின் ஒரு பகுதி திறந்தவெளி அருங்காட்சியகமாக (National Museum of Man) அமைக்கப்பட்டுள்ளது.

## 10. கைவினைப் பொருள்கள் அருங்காட்சியகம்

நமது நாடு கைவினைப் பொருள்களுக்கு மிகவும் பெயர் பெற்றதாகும். கைவினைப் பொருள்கள் செய்யும் தொழில்

இப்பொழுது மிகவும் குறைந்து வருகிறது. நாட்டிலுள்ள அனைத்து வகைக் கைவினைப் பொருள்களையும் கண்டு களிப்பதற்கும், அவற்றின் தொழில் நுட்பத்தை அறிந்து கொள்ளவும் இவ்வகை அருங்காட்சியகங்கள் உதவுகின்றன. புது தில்லியில் உள்ள கைவினைப் பொருட்கள் அருங்காட்சியகமும் (Grafts Museum), கல்கத்தாவிலுள்ள குருசடே அருங்காட்சியகமும் (Gurusaday Museum), இவ்வகை அருங்காட்சியகத்திற்கு எடுத்துக்காட்டாகும்.

11. விவசாய அருங்காட்சியகம்

இந்தியாவின் முக்கிய தொழில் உழவுத்தொழில். முன்பு மாடுகளைப் பூட்டி உழுது, தண்ணீர் இறைத்து விவசாயம் செய்து வந்தனர். ஏற்றம், தோல் இறைப்பான் போன்றவைகளை உபயோகித்து நீர் இறைத்தனர். ஆனால் இப்பொழுதோ எல்லாவற்றிற்கும் இயந்திரங்கள் உபயோகப்படுத்தப்படுகின்றன. இப்போதைய தலைமுறையினருக்கு பழைய உழவு முறைகளைப் பற்றியோ, கருவிகளைப் பற்றியோ, போக்குவரத்துச் சாதனங்களைப் பற்றியோ அறிந்திருக்க வாய்ப்பில்லை. எனவே விவசாயத் தொழிலின் வரலாறு, முன்பு உபயோகிக்கப்பட்ட கருவிகள், உழவு முறை, போக்குவரத்துச் சாதனங்கள், ஆகியவற்றைக் காட்சிப்படுத்தி விவசாய அருங்காட்சியகம் அமைக்கப்படுகிறது. மேலும் பயிர்களைப் பற்றியும், அவற்றை வளர்க்கும் முறைகளைப் பற்றியும் அவற்றை நோயிலிருந்து காக்கும் முறைகள் பற்றியும், நவீன உழவுக கருவிகள், நீர் இறைக்கும் இயநதிரஙகள், பூசசி மருந்து அடிக்க உபயோகப்படுத்தப்படும் கருவிகளையும் காட்சிப்படுத்தினால் விவசாயிகளும் அதைப்பார்த்துப் பயன் பெறுவர். கோயம்புத்தூரிலுள்ள விவசாயப் பல்கலைக்கழக அருங்காட்சியகமும், கல்கத்தாவிலுள்ள ஜூட் (Jute) அருங்காட்சியகமும் விவசாய அருங்காட்சியகங்களை அமைத்துள்ளன.

12 உடல்நல அருங்காட்சியகம்

மக்கள் சுற்றுப்புறத்தையும், சுகாதாரத்தையும் பேணிப் பாதுகாத்தால் நோய்கள் வராமல் தடுக்கலாம். இவ்வகை

அருங்காட்சியகங்களில் நோய்களைப் பற்றியும், அவைகள் வராமல் இருப்பதற்கு எவ்வாறு சுற்றுப்புறத்தை சுகாதாரமாக வைத்திருக்க வேண்டும் என்பதை எடுத்துரைக்கும் வண்ணமும், நோய்க்கிருமி களைப் பற்றியும் புகைப்படங்களையும், விளக்க அட்டைகளையும் காட்சிப் படுத்தினால் மக்கள் அதைப்பார்த்துச் சுகாதாரமாகவும், சுற்றுப்புறச் சூழலைப் பேணிப் பாதுகாக்கவும் ஏதுவாக இருக்கும். பரோடாவிலும் ஹைதராபாத்திலும் உடல்நல அருங்காட்சியகங்கள் உள்ளன. மேலும் பல மருத்துவக் கல்லூரிகளிலும் இவ்வகை அருங்காட்சியகங்கள் உள்ளன.

13. கானக அருங்காட்சியகம்

காடுகளைப் பற்றியும், அங்குள்ள சூழல்களைப் பற்றியும் இவ்வகை அருங்காட்சியகங்களில் காட்சிப்படுத்தப்படுகின்றன. காடுகளிலிருந்து கிடைக்கும் மரம், தேன் போன்ற பொருள்களைப் பற்றியும், காடுகளினால் தட்ப வெப்ப நிலைகள் மாற்றம் அடைவதையும் இவ்வகை அருங்காட்சியகங்கள் காட்டுகின்றன. அஸ்ஸாமில் கௌஹாத்தியில் ஒரு கானக அருங்காட்சியகமும், டேராடூனிலும், கோயம்புத்தூரிலும் வனத்துறையினரால் கானக அருங்காட்சியகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

14. அரண்மனை மற்றும் கோட்டை அருங்காட்சியகங்கள்

பழைய கோட்டைகள் மற்றும் அரண்மனைகளிலுள்ள பொருட்கள் அவ்விடத்திலேயே காட்சிப்படுத்தப்பட்டு அருங்காட்சியகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அரச குடும்பங்களில் அக்காலத்தில் பயன்படுத்திய ஆபரணங்கள், இருக்கைகள், மற்ற கலைப் பொருட்கள், ஆயுதங்கள் போன்றவை காட்சிப்படுத்தப்படுகின்றன. சென்னையிலுள்ள செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் சென்னை நகர வரலாறு தொடர்பான பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. ஜெய்ப்பூர் அரண்மனை அருங்காட்சியகம், மைசூர் அரண்மனை அருங்காட்சியகம் ஆகியவை இவ்வகை அருங்காட்சியகங்களுக்கு உதாரணங்களாகும்.

## 15. தனிநபர் அருங்காட்சியகம்

இவ்வகை அருங்காட்சியகங்கள் புகழ்பெற்ற அரசியல் தலைவர்கள், கவிஞர்கள், விஞ்ஞானிகள், போன்றோரைப் பற்றியதாக இருக்கும். அவர்கள் உபயோகித்த பொருட்கள், அணிந்திருந்த சட்டைகள், கைக்கடிகாரங்கள், மூக்குக்கண்ணாடி, செருப்புகள், கைத்தடி, படித்த புத்தகங்கள், பேனா, அவர்கள் வாழ்க்கையில் வாங்கிய பரிசுப் பொருட்கள், பதக்கங்கள் ஆகியவை காட்சிப்படுத்தப்படுகின்றன. மகாத்மாகாந்திக்கு அவர் பிறந்த ஊரான போர்பந்தரிலும், நேருவிற்கு புதுதில்லியில் அவர் வாழ்ந்த தீன்மூர்த்தி இல்லத்திலும், காமராசர், அறிஞர் அண்ணா போன்றோருக்குச் சென்னையிலும், பாரதியாருக்கு எட்டையபுரத்திலும், பாரதிதாசனுக்குப் பாண்டிச்சேரியிலும் அருங்காட்சியகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கர்நாடகாவில் டாக்டர் விஸ்வேஸ்வரய்யாவிற்கு அவருடைய கிராமமான முத்தண்ணஹள்ளியிலேயே அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது.

## 16. சிறப்பு அருங்காட்சியகம்

தனிப்பட்ட ஒரு பொருளை எடுத்துக்கொண்டு அதன் வரலாறு, வகைகள், தொழில்நுட்பம், அதன் பயன்பாடு இன்ன பிற செய்திகளைக் காட்சிப்படுத்தி சிறப்பு அருங்காட்சியகம் அமைக்கப்படுகிறது. ஹைதராபாத்தில் காலிகோ கம்பெனியினரால் துணிகள் அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது (Textile museum). இங்கு துணிகளைப் பற்றி மட்டும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. அதேபோன்று இந்நகரில் பட்டங்களுக்காகச் சிறப்பு அருங்காட்சியகம் (Kite Museum) அமைக்கப்பட்டுள்ளது. புதுதில்லியில் கட்டிடப் பொருள்களுக்கானச் சிறப்பு அருங்காட்சியகமும் புகைவண்டிகளைப் பற்றிய சிறப்பு அருங்காட்சியகமும் அமைக்கப்பட்டுள்ளது.

17. நாட்டுப்புறக் கலை அருங்காட்சியகம்

நாகரிகம் வளர வளரக் கலை மற்றும் பண்பாடு மறக்கப்பட்டு வருவதை இன்று நாட்டில் காண்கிறோம். இதற்கு நாட்டுப்புறங்களும் விதிவிலக்கல்ல. நிச்சயமாக அடுத்த தலைமுறையினருக்குத் தமிழக நாட்டுப்புற வாழ்க்கை முறை, கலை, பண்பாடு, நம்பிக்கைகள், சடங்குகள், பாரம்பரியம் ஆகியவை தெரியாமல் போகலாம். மறைந்து கொண்டிருக்கும் நாட்டுப்புறக்கலை, சடங்குகள், பாரம்பரியம் ஆகியவற்றை இன்றைய தலைமுறையினருக்கும் அடுத்துவரும் தலைமுறையினருக்கும் உணர்த்துவதற்கு நாட்டுப்புறக் கலை அருங்காட்சியகம் அமைப்பது அவசியமாகிறது. நாட்டுப்புறங்களில் மக்கள் அன்றாடம் வாழ்க்கையில் பயன்படுத்திக் கொண்டிருக்கும் பொருட்களை சேகரித்து நாட்டுப்புறப் பாடல்கள், விழாக்கள், சடங்குகள், விளையாட்டுக்கள், வழிபாட்டு முறைகள் ஆகியவை இவ்வகை அருங்காட்சியகங்களில் காட்சிப்படுத்தப்படுகின்றன. மைசூர் பல்கலைக்கழகத்திலும், லூதியானாவிலுள்ள பஞ்சாப் பல்கலைக்கழகத்திலும் நாட்டுப்புறக்கலை அருங்காட்சியகங்கள் இயங்கி வருகின்றன.

# 6. பொருள் சேகரிப்பு

அருங்காட்சியகம் அமைவதற்கு பொருள் சேகரிப்பு மிகவும் இன்றியமையாததாகும். அருங்காட்சியகங்களில் எந்த அளவிற்குப் பொருள்கள் சேகரிக்கப்படுகிறதோ, அந்த அளவிற்கு அதனுடைய சிறப்பு மேன்மேலும் பெருகுகிறது. பொருள் சேகரிப்புகேற்ப அருங்காட்சியகமும் விரிவடைகிறது. பொருள்கள் பலவேறு முறைகளில் சேகரிக்கப்படுகின்றன. அவை கீழ்வருமாறு அமைகின்றன.

1. களப்பணி (Field work)
2. புதையல் (Treasure trove)
3. அன்பளிப்பு (Gift)
4. பரிமாற்றம் மற்றும் கடன் (Exchange and loan)
5. விலைக்கு வாங்குதல் (Purchase)
6. அறிவியல் தொடர்பான பொருள்களைத் தயாரித்தல் (Preparation of exhibits for science)

## 1. களப்பணி (Field work)

களப்பணி மேற்கொண்டு அருங்காட்சியகத்திற்கு பொருள் சேகரிப்பது ஆய்விற்கு மிகவும் இன்றியமையாததாகும். ஏனெனில் களப்பணி மூலமே ஒரு பொருளின் காலம், தொழில்நுட்பம், அதன் வரலாறு ஆகியவற்றை குறைவற தெரிந்து கொள்ள முடியும். களப்பணியைத் திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டும். களப்பணிக்குச் செல்லும்போது களப்பணியாளர் தன்னுடன் புகைப்படக்கருவி, டேப்ரிக்கார்டர், களப்பதிவேடு (Field Register) ஆகிவற்றை உடன் எடுத்துச் செல்ல வேண்டும். வீடியோப் படக்கருவி (Video Camera) இருந்தால் அதை எடுத்துச் செல்வது சிறப்புடையது. களப்பணியின்போது கிடைக்கும் பொருள்களை அவ்விடத்திலேயே முக்கியமான செய்திகளைக் களப்பதிவேட்டில்

பதிவு செய்து கொள்ள வேண்டும். அப்பொருளைப் பற்றிய செய்திகள், அதன் வரலாறு, அது அவ்விடத்திற்கு வந்த விதம், அதைப்பற்றிய தொழில்நுட்பம் ஆகிய குறிப்புக்களை உடனடியாகப் பதிவு செய்து கொள்ள வேண்டும். பொருளை அது இருக்கும் இடத்திலேயே பலவேறு கோணங்களில் புகைப்படம் எடுத்துக் கொள்ள வேண்டும். இப்புகைப்படங்கள் பொருளை அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தும்போது உதவியாக இருக்கும். அப்பொருள் நாட்டுப்புற அருங்காட்சியகத்திற்காகச் சேகரிக்கப்படும் பொருளாக இருந்தால், அது பற்றிய வழிவழியான கதைகள் அல்லது நாட்டுப்புறப் பாடல்கள் இருந்தால் அதை அவ்விடத்திலுள்ள மக்கள் சொல்லக் கேட்டு டேப்ரிக்கார்டரில் பதிவு செய்தல் வேண்டும். இவை அப்பொருள் பற்றிய ஆய்விற்குப் பெரிதும் உதவும்.

அகழாய்வு (Excavation) மூலம் தொல்லியல் அருங்காட்சியகத்திற்கோ (Archaeological museum) அல்லது அருங்காட்சியகத்திலுள்ள தொல்லியல் கூடத்திற்கோ (Archaeology Gallery) அரும் பொருள்கள் சேகரிக்கலாம். ஆனால் இதற்கு இந்தியத் தொல்லியல் அளவீட்டுத் துறையிடமிருந்து (Archaeological Survery of India) அனுமதி பெற்ற பின்னரே அகழாய்வு மேற்கொள்ள முடியும். மேலும் அகழாய்வு மேற்கொள்ளுபவர் அகழாய்வில் நல்ல அறிவும், தகுதியும், அனுபவமும் பெற்றிருத்தல் நன்மை பயக்கும். அகழாய்வில் கிடைக்கும் பொருள்களை அவை இருக்கும் இடத்திலேயே அதே நிலையில் புகைப்படமோ அல்லது வீடியோ கருவி மூலம் படமோ எடுத்துக்கொள்ள வேண்டும். மேலும் அகழாய்வுக்குழியை அகழாய்வு செய்வதற்கு முன்பு அகழாய்வு செய்த பிறகு என்னும் நிலையில் புகைப்படம் எடுத்துக் கொள்ளுதல் வேண்டும். அகழாய்வுக் குழியின் அளவுகள் (measurements) அக்குழியில் எவ்வளவு ஆழத்தில் பொருள்கள் கிடைத்தன என்பது போன்ற குறிப்புக்களை உடனே களப்பதிவேட்டில் குறித்துக் கொள்ள வேண்டும். அருங்காட்சியகத்தில் அகழாய்வுக்குழி போன்ற மாதிரியைக் (Excavated site) காட்சிப்படுத்தும்போது களப்பணிக் குறிப்புக்கள் மிகவும் உதவியாக இருக்கும்.

அமராவதி, நாகார்சுனகொண்டா ஆகிய இடங்களில் அகழாய்வு செய்து எடுத்த பொருள்களை அவ்விடங்களிலேயே அருங்காட்சியகம் அமைக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளன.

## 2. புதையல் (Treasure Trove)

காலத்தால் பழமையான பொருள்களைப் பாதுகாக்க அரசு பல சட்டங்களை இயற்றியுள்ளது. நூறு ஆண்டுகளுக்கு மேல் ஆகியுள்ள பொருள் ஒருவரிடமிருந்தால் அதை வைத்திருப்பதற்கு இந்தியத் தொல்லியல் அளவீட்டுத் துறை (Archaeological Survey of India) இயக்குநரிடமிருந்து அனுமதி வாங்கவேண்டுமென்றும். பழம் பொருள் விற்பனையாளர்களும், பழம் பொருள்களை விற்பதற்கு அனுமதி பெற்றிருக்க வேண்டுமென்றும் அரசு சட்டங்கள் கூறுகின்றன. 1878--இல் இயற்றப்பெற்ற புதையல் சட்டத்தின்படி (Treasure Trove Act) நிலத்திற்கடியில் இருந்து பழம்பொருள்கள் எடுக்கப்பட்டால் அதை அரசிடம் ஒப்படைக்க வேண்டும் எனவும் அப்புதையலின் மதிப்பில் ஐந்தில் ஒருபங்கு அப்புதையலைக் கண்டுபிடித்தவருக்கும், புதையல் எடுக்கப்பட்ட நிலத்தின் உரிமையாளருக்கும் அரசால் அளிக்கப்பட வேண்டும் என்றும் இச்சட்டம் கூறுகிறது. 1972–ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டத்தின்படி கலைப்பொருளானது நூறு ஆண்டுகளுக்குக் குறைவானதாக இருந்தாலும் அது சிறப்பான கலைத்தன்மை உடையதாயிருந்தால் அதுவும் தொல்பொருள்கள் மற்றும் கலைச்செல்வங்கள் பதிவுச் சட்டம் 1972 (The registration of Antiquities and Art Treasures Act) இன்படி பழமையான பொருளாகக் கருதப்படும்.

## 3. அன்பளிப்பு (Gift)

அருங்காட்சியகத்திற்கு வருகை தரும் பார்வையாளர்கள் பலருக்கு, அருங்காட்சியகத்தைப் பார்த்த பிறகுதான் தங்களிடம் உள்ள பழம் பொருளையும் அளித்தால் என்ன என்ற எண்ணம் ஏற்படுகிறது. இவ்வகையில் அருங்காட்சியகத்திற்கு நிறைய பொருள்கள் சேகரிக்க முடியும். அன்பளிப்பாகக் கிடைக்கிறதே என்று எல்லாப் பொருள்களையும் அருங்காட்சியகத்தில் வாங்கிச

சேகரிப்பது இயலாததாகும். ஏனெனில் சில பொருள்கள் அருங்காட்சியகத்தின் குறிக்கோளை நிறைவேற்றத் தேவைப்படாததாக இருககும். இவ்வாறு உள்ள பொருள்களை அன்பளிப்பாகப் பெறுவதால் அவற்றினால் பயனில்லாமல் போவதோடு சரக்கறையில் இட நெருக்கடி, மற்றும் அதைப்பாதுகாக்க வேண்டிய பணியும் ஏற்படுகின்றன. சிலா் தங்கள் பெயரை எல்லோரும் பார்க்க வேண்டும் என்னும் நோக்கத்துடன் விளக்க அட்டையில் பெயா் போடுமாறு வற்புறுத்திப் பொருள்களை அனபளிப்பாக அளிக்கின்றனா். இவவகை அன்பளிப்புகளுக்கு அளித்தவரின் பெயரைப் பொருள்கள் இருப்புப் பதிவேட்டில் பதிவு செய்து கொணடு அவருக்கு அனபளிப்புககான நனறிக கடிதம் அனுபபலாம்.

அருங்காட்சியகத்திற்குப் பல அரிய பொருள்களும் அன்பளிப்பாக அளிக்கப்படுகின்றன. உதாரணமாக தேசீய அருங்காட்சியகத்திற்கு ஒரு ஐரோப்பிய பெண்மணியினால் கொலம்பியன் கலைப்பொருள்கள் ஏராளமானவை அளிக்கப்பட்டுள்ளன. இப்பொருள்களைக் கொண்டு அங்கு ஒரு தனிக்கூடமே அமைக்கப்பட்டுள்ளது. பரோடா அருங்காட்சியகத்திற்கு எகிப்திலிருந்து ஒரு எகிப்திய மம்மியை (Egyptian mummy) அன்பளிப்பாக அளித்துள்ளனா். மொகஞ்சொதாரோவில் எடுக்கப்பட்ட சிந்து சமவெளி நாகரீகப் பொருள்கள் தேசீய அருங்காட்சியகம், அரசு அருங்காட்சியகம், சென்னை, கல்கத்தா அருங்காட்சியகம் ஆகியவற்றிற்கு இந்திய தொல்லியல் அளவைத் துறையினரால் அன்பளிப்பாக அளிக்கப்பட்டுள்ளன.

## 4. பொருள் பரிமாற்றம் மற்றும் கடன் (Exchange and loan)

அருங்காட்சியகங்கள் பிற அருங்காட்சியகங்களிலிருந்து பொருள்களைக் கடனாகப் பெற்றுச் சேகரிக்கலாம். இவ்வகைக் கடனானது நிரந்தரக் கடனாகவோ (Permanent loan) அலலது தற்காலிகக் கடனாகவோ (Temporary loan)இருக்கலாம். நிரந்தரக் கடனென்பது ஒரே பொருள் நிறைய எண்ணிக்கையில் இருந்தால் அதைப் பதிவேட்டில் கடன என்று பதிவு செய்துகொண்டுபிற அருங்காட்சியகங்களுக்கு அளித்துவிடுவது ஆகும். அதற்குக்

காலவரையறை இல்லை. ஆனால் தற்காலிகக் கடன் என்பது பொருளை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குச் சிறப்புக் கண்காட்சிக்கோ (Special Exhibition) அல்லது தற்காலிகக் கண்காட்சிக்கோ (Temporary Exhibition) கடனாகக் கொடுத்து முடிந்ததும் திரும்பப் பெற்றுக் கொள்வதாகும். இது ஒரே பொருள் பல எண்ணிக்கையில் இருந்தால் மட்டும் சாத்தியமாகும்.

பொருள்கள் பரிமாற்றத்தின் மூலமும் அருங்காட்சியகத்திற்குப் பொருள்கள் சேகரிக்கப்படலாம். சில அருங்காட்சியகங்களில் சில பொருள்கள் அதிக எண்ணிக்கையில் இருக்கும். வேறுசில அருங்காட்சியகங்களில் இந்த பொருள் அதிக எண்ணிக்கையில் இருக்காது. இவ்விரு அருங்காட்சியகங்களும் தங்களிடையே அதிக எண்ணிக்கையில் உள்ள பொருள்களைப் பரிமாறிக் கொள்ளலாம். ஆகவே அருங்காட்சியகங்கள் பொருள்களை சேகரிக்கும்போது ஒரே பொருளை நிறைய எண்ணிக்கையில் வாங்கி வைத்துக் கொண்டால், இப்பொருள் இல்லாத அருங்காட்சியகத்திற்குச் சிலவற்றைக் கொடுத்துவிட்டு இங்கு இல்லாத பொருள்களைப் பெற்றுக் கொள்ள உதவியாக இருக்கும்.

## 5. விலைக்கு வாங்குதல் ( Purchase)

அருங்காட்சியகங்கள் பொருள்களை விலைகொடுத்து வாங்குவதற்கு மாநில அரசோ, மத்திய அரசோ அல்லது பிற நிறுவனங்களோ மானியம் அளிக்கின்றன. அந்நிதியைக் கொண்டு பொருள்களை வாங்குவதற்காக அருங்காட்சியகங்கள் செய்தித் தாள்களின் வழியே விளம்பரம் செய்கின்றன. இதன்மூலம் கலைப்பொருள் வைத்திருப்பவர்களும், கலைப்பொருள் விற்பனை செய்பவர்களும் ஒரு குறிப்பிட்ட நாளில் அருங்காட்சியகத்திற்கு விற்பனைக்காகக் கொண்டு செல்கின்றனர். இப்பொருள்களை வாங்குவதற்கு ஒரு வல்லுநர் குழு அமைக்கப்படுகிறது. இக்குழுவில் பொருள்களைப் பற்றியும், அவற்றின் கலை நுணுக்கங்கள் பற்றியும், அவற்றின் வரலாறு பற்றியும் அறிந்த வல்லுநர்கள் இருப்பர். கலைப்பொருள் விற்பனை செய்ய விரும்புபவர் கேட்கும் விலையைக் கொடுக்காமல் இக்குழு அப்பொருளின் காலம், கலைத்தன்மை, மற்றச் சிறப்புக்கள்

ஆகியவற்றை வைத்து விலை நிர்ணயம் செய்கிறார்கள். குழு நிர்ணயித்த விலையைக் கொண்டே அருங்காட்சியகம் அப்பொருளை வாங்குகிறது. இம்முறையையே அனைத்து அருங்காட்சியகங்களும் பின்பற்றுகின்றன. பொருள்களை வாங்குமுன் அப்பொருள்கள் உண்மையிலேயே கலை நுணுக்கம் நிறைந்த பொருள்களா, காலத்தால் பழமையானவையா என்பதை நன்கு அறிந்துகொண்டு வாங்க வேண்டும். ஏனெனில் சில பொருள்கள் புதிதாக செய்யப்பட்டுச் சில செயற்கை முறைகளினால் அவை பழமையானவையாக காட்டப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. சில நேரங்களில் அதை வல்லுநர்களாலேயே அறிய முடிவதில்லை. உலோகப் படிமங்கள் இம்முறையில் அதிகமாக விற்பனைக்கு விடப்படுகின்றன. ஆகவே பழமையான உலோகப் படிமங்களும், மரச்சிற்பங்களும் வாங்கும்போது அருங்காட்சியகங்கள் மிகவும் விழிப்புடன் இருந்து செயல்பட வேண்டும்.

பொருள் வாங்கும் குழுவினைக் கூட்டாமல் அருங்காட்சியக இயக்குநரோ அல்லது உயர் அலுவலர்களோ ஒரு குறிப்பிட்ட அளவு தொகைக்குள் பொருள் வாங்கலாம் என்னும் உரிமையும் இருக்க வேண்டும். இதனால் மிகவும் சிறப்புடைய பொருள்களோ அல்லது அரிய பொருள்களோ விலைக்கு வரும்பொழுது அவற்றை உடனடியாக வாங்கிச் சேகரிக்க முடியும்.

6. அறிவியல் தொடர்பான பொருள்களைத் தயாரித்தல் (Preparation of Science Exhibits)

இயற்கை வரலாற்று அருங்காட்சியகங்களில் (Natural History Museum) காட்சிப்படுத்த பலவேறு வகையான வண்டினங்கள், வண்ணத்துப் பூச்சிகள், பறவைகள், உயிரினங்கள் ஆகியவை சேகரிக்கப்பட்டுப் பின்னர் அவை பதப்படுத்தப்படுகின்றன. இதற்குப் பலவேறு வகையான வேதியியல் பொருட்கள் பயன்படுத்தரப்படுகின்றன. உயிரினங்கள் பறவைகள் போன்றவற்றின் தோல் உரிக்கப்பட்டு தோல் நீண்ட நாட்களுக்கு நன்முறையில் இருப்பதற்குத் தோலின் உட்புறம் சோடியம் ஆர்சனேட் என்னும் வேதிமக் கலவை பூசப்படுகிறது. பிறகு பஞ்சு போன்ற பொருளைத் தோலினுள் திணித்து பாடம்

செய்யப்பட்டு பறவைகளும், உயிரினங்களும் உயிருள்ளவை போன்ற தோற்றத்தில் தயாரிக்கப்படுகின்றன.

அறிவியல் அருங்காட்சியகங்களில் பலவிதமான இயந்திரங்களும் வாங்கி சேகரிப்படுகின்றன. அறிவியல் தத்துவங்களை உணர்த்துவதற்காக மாதிரிகள் (Models) அருங்காட்சியகத்திலேயே தயாரிக்கப்படுகின்றன.

# 7. பதிவு செய்தல்

அருங்காட்சியகத்தில் சேகரிக்கப்பட்ட பொருள்களை முறையாகப் பதிவு செய்தல் வேண்டும். பொருள்கள் சேகரிக்கப்பட்டவுடன் பதிவு செய்யப்படாவிட்டால், பின்னால் அப்பொருள்களைப் பற்றிய பல செய்திகளை அறிய முடியாமல் போகலாம். பொருள்களைப் பதிவு செய்து கொள்வதற்கு அருங்காட்சியகங்கள் பல்வேறு வகையான பதிவேடுகளைப் பயன்படுத்துகின்றன.

1) பொதுப் பதிவேடு அல்லது நுழைவுப் பதிவேடு (General accession register or entry register)

2) நிலையான இருப்புப் பதிவேடு (Permanent register or accession register)

3) பதிவட்டை (Catalogue Card)

## 1. பொதுப் பதிவேடு அல்லது நுழைவுப் பதிவேடு

இப்பதிவேட்டில் அருங்காட்சியக சேகரிப்பிற்காக பெறப்படும் எல்லாப் பொருள்களும் பதியப்படுகின்றன. பொருள்கள் அருங்காட்சியகத்திற்குள் கொண்டு வரப்பட்டவுடன் அவைகளுக்கு அடையாள எண்ணோ அல்லது நுழைவு எண்ணோ கொடுக்கப்பட வேண்டும். ஒரே நாளில் ஒரே சேகரிப்பில் ஒன்றுக்கும் அதிகமாக பொருள்கள் வந்தால் அடையாள எண்ணுடன் ஒரு புள்ளியோ அல்லது சிறிய கோடோ போட்டு துணை எணகளைக் கொடுக்கலாம். உதாரணமாக களப்பணியின் மூலமோ அல்லது வேறு வகையிலோ பத்துப் பொருள்கள் சனவரி 1–ஆம் நாள் வருகிறதென்றால், அதுதான் அந்த வருடத்தின் முதல் சேகரிப்பென்றால், அந்த மொத்த சேகரிப்பிற்கும் அடையாள எண் அல்லது நுழைவு எண் 1 என வைத்துக் கொள்ளலாம். அந்த சேகரிப்பில் பத்துப் பொருள்கள் உள்ளதால் அவைகளுக்கு துணை எண் கொடுத்து, 1.1, 1.2, 1.3, 1.4, 1.5, என்று வரிசையாகப் பதிவு செய்யப்பட வேண்டும்.

நுழைவு எண் ஒரு சிறிய அட்டையில் எழுதப்பட்டு அவ்வட்டையை அப்பொருளின்மீது கட்டிவிட வேண்டும். அல்லது ஒரு ஸ்டிக்கரில் நுழைவு எண்ணை எழுதி அதை அப்பொருளின் மேல் ஒட்டிவிடலாம். ஆனால் ஸ்டிக்கரை ஒட்டும்பொழுது, அப்பொருளுக்கு எந்தவிதத் தீங்கும் நேரா வண்ணம் ஒட்டப்பட வேண்டும். நுழைவுப் பதிவேட்டில் பொருளைப் பற்றிய விளக்கம் சுருக்கமாக இருந்தால் போதுமானதாகும். நுழைவுப் பதிவேடு பெரிய அளவில் பைண்ட் செய்யப்பட்டதாக இருத்தல் நலம்.

அருங்காட்சியகத்தில் சில பொருள்களை அதை விற்பனை செய்ய வந்தவருக்கோ அல்லது அன்பளிப்பாக கொடுக்க வந்தவருக்கோ திருப்பியளிக்க நேரிடலாம். அவ்வாறு திருப்பி அளிக்கப்படும் பொருள்களை நுழைவுப் பதிவேட்டில் "திருப்பி அனுப்பப்பட்டது" (returned) என்னும் தலைப்பில் பதிவு செய்து கொண்ட பின்னர் திருப்பப்பட வேண்டும்.

## 2. நிரந்தரப் பொருள்கள் இருப்புப் பதிவேடு

அருங்காட்சியகத்தில் நிரந்தரமாக வைக்கப்படலாம் என்று தீர்மானிக்கப்படும் பொருள்கள் நிரந்தரமான பொருள்கள் இருப்புப் பதிவேட்டில் பதியப்படுகின்றன. பொருள்களின் வகைகளுக்கேற்ப தனித்தனி பதிவேடுகளாகவோ அல்லது தனிப்பக்கங்களிலோ பதிவு செய்யப்படுகின்றன. பொருள்களை எளிதில் அடையாளம் கண்டு கொள்ளவும், அருங்காட்சியகத்தில் எந்த இடத்தில் உள்ளது என்பதை உடனடியாக அறிந்து கொள்ளவும் அவைகளுக்கு நிரந்தரமான எண்கள் கொடுக்கப்படுகின்றன. நடவடிக்கைகள் அதிகம் இல்லாத சிறிய அருங்காட்சியகங்களில் சாதாரணமாக வரிசையாக எண்கள் (simple numbering system) கொடுக்கலாம். ஆனால் பலவித நிகழ்ச்சிகள் நடைபெறுகின்ற பெரிய அருங்காட்சியகங்கள் முப்பாக எண் கொடுக்கும் முறையைப் (tripartite numbering system) பின்பற்றலாம்.

முப்பாக எண் கொடுக்கும் முறையில் எண்ணானது மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கும். இதில் முதல் பகுதி பொருள் பதிவு செய்யப்படும் ஆண்டின் கடைசி இரண்டு இலக்கங்களை கொண்டிருக்கும். உதாரணமாக 2004–ஆம் ஆண்டில் பொருள்

பதிவு செய்யப்பட்டதென்றால் 04 என்ற எண் முதல் பகுதியாக இருக்கும். இரண்டாவது பகுதியாக ஒவ்வொரு ஆண்டிற்கும் ஒரு எண் கொடுக்கப்படுகிறது. உதாரணமாக 2004 –ஆம் ஆண்டிற்கு, 1 என்ற எண் கொடுக்கப்பட்டால் இவ்வெண் இரண்டாவது பகுதியாக இருக்கும். இரண்டாவது பகுதியிலுள்ள எண் ஓராண்டிற்கு ஒரு முறை புதுப்பிக்கப்படுகிறது. மூன்றாவது பகுதியில் பொருளின் எண் கொடுக்கப்படுகிறது. உதாரணமாக ஒரு பொருள் 2004–ஆம் ஆண்டில் 350–ஆம் சேகரிப்பாக இருந்தால், அப்பொருள் பதிவேட்டில் 04–1–350 என்ற எண் கொடுக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது. பொருளை எளிதில் அடையாளம் கண்டு கொள்ளவும், அருங்காட்சியகத்தில் எந்த இடத்தில் வைக்கப்பட்டுள்ளது என்பதை அறிந்து கொள்ளவும் பொருளின்மீது அழியாத மையினால் எண்கள் எழுதப்படுகின்றன. ஆனால் எண் கொடுக்கும்போது பொருளின் அழகுணர்ச்சியும், தனித்தன்மையும் கெடாதவாறு பார்த்துக் கொள்வது அவசியமானதாகும். பொருளைக் காட்சிப்படுத்தும்போது அப்பொருளின் மேல் எழுதப்பட்டுள்ள எண் பார்வையாளர் கண்களுக்குப் புலப்படா வண்ணம் காட்சிப்படுத்தல் வேண்டும்.

நிரந்தரப் பதிவேட்டில் தலைப்புக்கள் அருங்காட்சியகத்தின் வகையைப் பொறுத்து மாறுபடுகிறது. உதாரணமாக, மானிடவியல் அருங்காட்சியகமாக இருந்தால் (Anthropology Museum) மற்ற அருங்காட்சியகங்களில் உள்ள பதிவேடுகளின் தலைப்புக்களுடன் உள்ளூர் மொழியில் பொருளின் பெயர், பொருளின் பண்பாடு போன்ற தலைப்புகளும், பதிவேட்டில் இருக்கும்.

### 3. பதிவட்டைகள் (Catalogue cards)

அருங்காட்சியக பதிவேடுகளில் மிக முக்கியமானது பதிவட்டை ஆகும். இப்பதிவட்டை தயாரிப்பதற்கு மிகுந்த கவனமும், சிரத்தையும் தேவைப்படுவதால், அருங்காட்சியகக் காப்பாளரே இப்பணியைச் செய்வது சிறப்புடையதாகும். இப்பதிவட்டையைத் தயாரிப்பதற்கு, காப்பாளருக்கு பொருள்களைப் பற்றிய சிறந்த அறிவும், கடின உழைப்பும் தேவை. பொருளைப் பற்றி பல்வேறு கோணங்களிலும் ஆய்வு செய்து, பிறகு அப்பொருளை இப்பதிவட்டையில் பதிவு செய்யப்பட வேண்டும்.

பொருள்களைப் பற்றி வேறு ஏதாவது வெளியீடுகள் இருந்தால் அதைப் பற்றியும் இப்பதிவட்டையில் குறிப்பிடப்பட வேண்டும். பொருளைப் பதிவு செய்யும்போது அதைப் பற்றிய விரிவான விளக்கமும், அதனுடைய எல்லா சிறப்புக்களும் பதியப்பட வேண்டும். பொருளின் புகைப்படம் இப்பதிவட்டையின் முன்பக்கத்தில் ஒரு மூலையில் ஒட்டப்பட வேண்டும். மிகவும் அரிய பொருளாக இருந்தால் பல்வேறு கோணங்களிலும் புகைப்படம் எடுக்கப்பட வேண்டும். இப்பதிவட்டைகள் முழுமையாக தவறில்லாமல் தயாரிக்கப்பட்ட பின்னரே அச்சிடப்பட வேண்டும்.

பொதுப் பதிவேடுகளும், நிரந்தரப் பதிவேடுகளும் தயாரிக்கப்பட்ட பின்னர் இப்பதிவட்டைகள் தேவைக்கேற்ற எண்ணிக்கையில் தயாரிக்கப் படுகின்றன. இந்திய அருங்காட்சியகங்களில் சிறிய அட்டைகள் முதல் பெரிய அட்டைகள் வரை பல்வேறு அளவுகளிலும் பதிவட்டைகள் தயாரிக்கப்படுகின்றன. இவ்வட்டைகளில் நிரந்தர இருப்புப் பதிவேட்டில் உள்ள எல்லா விவரங்களுடன் புகைப்படத்தின் நெகட்டிவ் எண்ணும் இருக்கும். இவ்வட்டைகள் ஒரு பொருளைப் பற்றி அறிந்து கொள்வதற்கும், அதைப் பற்றி ஆய்வு செய்வதற்கும் உபயோகப்படுகின்றன. மேலும் பொருளைப் பற்றிய அனைத்து விவரங்களும் இருப்பதால், ஆய்விற்காக பொருளை அடிக்கடி எடுத்துக் கையாள வேண்டிய நிலையை தவிர்க்கலாம். இவ்வட்டைகள் தயாரிக்கப்பட்ட பின்னர் அவைகள் பதிவட்டைகள் வைக்கப்படும் (Index cabinet) பேழையினுள் வரிசையாக அடுக்கி வைக்கப்படுகின்றன.

## ஒலி, ஒளி மற்றும் கணிப்பொறி மூலம் பதிவு செய்து கொள்ளுதல் (Audio Visual and Computerised documentation)

மேலை நாடுகளில் மட்டுமன்றி இந்தியாவிலும் அருங்காட்சியகத்தில் பொருள்களைப் பதிவு செய்ய கணிப்பொறிகள் இப்பொழுது பயன்படுத்தப்படுகின்றன. கணிப்பொறியில் பொருள்களைப் பற்றிய செய்திகளைப் பதிவு செய்து கொள்வதால் ஆய்விற்கும், மற்ற அருங்காட்சியகப் பணிகளுக்கும் எளிதாகிறது. மேலும் ஒரு பொருளைப் பற்றிய

செய்தியை அறிய வேண்டுமானால் கணிப்பொறி மூலம் நொடியில் அறிந்து கொள்ள முடிகிறது. இதனால் நேரமும், சிரமமும் குறைகிறது. பெரிய அருங்காட்சியகங்களில் கணிப்பொறியை வாங்கி வைத்துக் கொள்ளுதல் பயனுடையதாயிருக்கும். கணிப்பொறி அச்சடிப்பான் (Printer) மூலம் தேவையான செய்திகளை உடனுக்குடன் ஆய்வாளர்களுக்கு அச்சிட்டு வழங்க முடியும். இவ்வகை அறிவியல் கண்டுபிடிப்புக்களை அருங்காட்சியத்தில் பயன்படுத்திக் கொள்வது அருங்காட்சியக வளர்ச்சிக்குப் பெரிதும் உதவும்.

மேலும் தற்போது நவீனரக ஒலி, ஒளிககருவிகள் (Digital Audio and Video equipments) கிடைப்பதால், அவைகளைக் கொண்டு நாட்டுப்புற நடனங்கள், அழிந்துவரும் கலை, பண்பாட்டு நிகழ்வுகளை குறுந்தகடுகளில் பதிவு செய்து அருங்காட்சியகத்தில் பாதுகாக்கலாம். இவை ஆய்வாளர்களுக்கும், அடுத்த தலைமுறையினருக்கும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

தற்போது பல அருங்காட்சியகங்கள் இணைய தளங்களில் (Web sites) பல்வேறு வகையான பயனுள்ள தகவல்களையும், செய்திகளையும் வெளியிடுகின்றன. அவைகளையும் பதிவு செய்து கொள்ளுதல் அருங்காட்சியகத்தின் கல்விப் பணிகளுக்கு உதவியாக இருக்கும்.

தொல்லியல் பொருள்களுக்கான நுழைவுப் பதிவேட்டின் மாதிரிப்படிவம்

| நுழைவு எண் நிலை 1 | சேகரிக்கப்பட்ட விதம் 2 | சேகரித்த நாள் 3 | விலை அல்லது மதிப்பு 4 | பொருள் நிலை 5 |
|---|---|---|---|---|
| | | | | |

| எவ்வகைப் பொருளால் செய்யப்பட்டது 6 | காலம் 7 | எடை மற்றும் அளவு 8 | பொருள் பற்றிய குறிப்பு 9 | திருப்பிஅனுப்பப் பட்டது 10 | அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ள இடம 11 |
|---|---|---|---|---|---|
| | | | | | |

| நிரந்தரப் பதிவேடு எண் 12 | பொருள் அளித்தவரின் பெயரும் முகவரியும் 13 | பதிவு செய்தவர் கையொப்பம் 14 | இயக்குநா கையொப்பம் 15 | குறிப்பு 16 |
|---|---|---|---|---|
| | | | | |

## தொல்லியல் பொருள்களுக்கான நிலையான பதிவேட்டின் மாதிரிப் படிவம்

| நிலையான எண் | சேகரிக்கப்பட்ட விதம் | சேகரித்த நாள் | கண்டுபிடிக்கப்பட்ட இடம் | விலை அல்லது மதிப்பு | அகழாய்வில் என்றால் எவ்வளவு ஆழத்திலிருந்து எடுக்கப்பட்டது | காலம் | எவ்வகைப் பொருளால் செய்யப்பட்டது | அளவு மற்றும் எடை | பொருளின் நிலை | பொருளைப் பற்றிய விளக்கம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |

| மொழி மற்றும் எழுத்து | எண்ணிக்கை | அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ள இடம் | நுழைவுப் பதிவேட்டு எண் | பொருள் அளித்தவரின் பெயரும் முகவரியும் | பதிவு செய்தவர் கையொப்பம் | இயக்குநர் கையொப்பம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |

# 8. பாதுகாத்தல்

உயிரில்லாத பொருட்களுக்கு அழுகிப்போகும் தன்மை இயற்கையாகவே இருக்கும். சில பொருட்கள் மெதுவாக, சில பொருட்கள் வேகமாக அழுகிப்போகும். பழங்கள், காய்கறிகள் வேகமாக அழுகிப்போவதை நாம் பார்த்திருக்கிறோம். உலோகங்கள், கற்கள் போன்ற பொருட்கள் மிகவும் மெதுவாகச் சிதைவடையும்.

இதுபோலவே அருங்காட்சியகத்தில் வைத்துள்ள பொருட்களும் சிதைவடைவதற்கு வாய்ப்புண்டு. ஆனால் அருங்காட்சியகத்தின் நோக்கம் இப்படிப்பட்ட அரிய பொருட்களை நிரந்தரமாக இருக்கும்படிச் செய்யவேண்டியிருப்பதால் இப்பொருட்டகளைப் பாதுகாப்பது அருங்காட்சியகத்தின் மிக இன்றியமையாத பணியாகும்.

பொருட்கள் அழிவதற்குக் காரணங்கள் பல. ஒவ்வொரு பொருட்களின் இயற்கையான உருவத்திலேயே சில பலவீனங்கள் இருப்பதால் அந்தப் பொருட்கள் சிதைவடையும். உதாரணமாகப் பார்த்தால், மரம் நன்றாகப் பகுவப் படுத்தப்படாவிட்டால் அதில் செய்யப்பட்ட சிற்பம் சுலபமாக சிதைவடையும். பொருட்கள் சிதைவடைவதற்கு மற்றொரு காரணம் தட்பவெப்ப நிலையில் ஏற்படும் மாற்றங்கள். ஈரத்தன்மையும், தட்ப வெப்ப நிலையும் ஏறி இறங்குவதால், மரம், காகிதம் போன்ற பொருட்கள் அதற்குத் தகுந்தபடி மாற்றம் அடைந்து பலவீனம் அடைகின்றது. நம்மைச் சுற்றிலும் இயற்கையிலுள்ள பிராணிகள், சிறுசிறு புழுக்கள், கரையான்கள், காளான்கள், கரப்பான் பூச்சிகள் போன்ற சிறு பிராணிகள் பொருட்களைத் தாக்கிச் சேதப்படுத்திவிடுகின்றன.

சில காரணங்களினால் மனிதர்களாலும் பொருட்களுக்குச் சிதைவு ஏற்படுகிறது. எவ்வாறெனில், பார்வையாளர்கள் சில கற்சிற்பங்களைக் கையால் தொட்டுச் சிதைப்பதுண்டு. கவனமற்ற செயல் முறைகளாலும், சில சமயங்களில் அருங்காட்சியகத்திலுள்ள கலைப்பொருட்கள் சேதம் அடைகின்றன. இப்படிப்பட்ட சேதங்களிலிருந்து

அருங்காட்சியகப் பொருட்களைப் பாதுகாத்தல் இன்றியமையாததாகும்.

மேலும் அருங்காட்சியகத்திற்கு வரும் சில பொருட்கள் சேதம் அடைந்த நிலையில் வருகின்றன. உதாரணமாக, அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட உலோகப் பொருட்கள், துருவடைந்த நிலையில் கிடைக்கின்றன. ஓவியங்களில் தீட்டப்பட்டுள்ள வண்ணப்பொருட்கள் துணியிலிருந்து தனியாக இற்று விழுகிற நிலையில் இருக்கின்றன. அழகானபழைய ஆடைகளின் துணி மிகவும் நைந்து கையால் தொடுவதற்கே முடியாத நிலையில் இருக்கின்றது. காகிதச்சுவடிகளின் நிறம் மாற்றம் அடைந்து பூச்சிகளால் தாக்கப்பட்டு அவைகளின் நிறம் பழுதடைந்து இருக்கலாம். கற்சிற்பங்களில் சில பாகங்கள் உடைந்து, சிதறி இருக்கலாம். இப்படிப்பட்ட பொருட்களை அருங்காட்சியகத்தில் உண்மை நிலைக்கு கொண்டு வருவதும் ஒரு அரிய பணியாகும். இப்பணிக்கு 'உண்மையான நிலையைக் கொண்டுவருவது' (restoration) என்று சொல்வார்கள்.

இப்படி அருங்காட்சியகத்தில் பொருட்களைப் பாதுகாப்பதில் இரண்டு விதமான பணிகள் உள்ளன.

1. சேதம் அடையாதிருப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுப்பது.
2. பொருட்களின் உண்மை நிலையைத் திருப்பக் கொண்டு வருதல்.

இந்த இரண்டு பணிகளையும் ஒன்றாகச் சேர்த்து 'Conservation' என்று சொல்வார்கள்.

'Conservation' செய்வதற்கு பல முறைகள் உள்ளன. அவைகள் பின்வருமாறு:

(1) இயற்பியல் முறைகள் (Physical methods)

(2) வேதியியல் முறைகள் (Chemical methods)

(3) மின்வேதியியல் முறை (Electro Chemical method)

1. இயற்பியல் முறை

இம்முறையில் பொருட்களில் சிதைவடைந்த, உண்மையான கலை வேலைப்பாடுகளை மறைக்கும் மேற்புறங்களை சிறிய கத்தி, உளி, (Dril) துளைஊசி போன்ற கருவிகளால் அகற்றி கலைப்பொருட்களில் உண்மையான உருவத்தினை வெளிப்படுத்தல்தான் 'இயற்பியல்முறை' எனப்படும். தொன்மையான இரும்புக் கருவிகளில் உள்ள துருவினை இவ்வாறு அகற்றுதல் ஒரு உதாரணம்.

சிறப்பான கலை வேலைப்பாடுகள் கொண்ட மரச் சிற்பங்கள், எண்ணெய், தூசிகள் போன்றவைகளால் முழுமையாக மறைக்கப்பட்டுச் சிற்பத்தின் உண்மையான கலை வேலைப்பாடுகள் தெரியா வண்ணம் இருக்கின்றன. மேலே கூறப்பட்ட சிறிய கத்தி, உளி போன்றவைகளால் இவற்றை அகற்றி சிற்பங்களைப் பாதுகாக்கலாம்.

2. வேதியியல் முறை

இம்முறையினால், சில பொருட்களிலுள்ள சேதங்களை மேற்கூறப்பட்ட இயற்பியல் முறையில் அகற்ற முடியும். மற்ற பொருட்களில் சேதம் அப்பொருட்களை நன்றாக ஒட்டு மொத்தமாக இருக்கின்ற நிலையில் வேதியியல் முறையினால் மட்டுமே அகற்றப்பட முடியும். ஒவ்வொரு பொருளையும் பராமரிக்க உரிய இரசாயனப் பொருட்கள் உள்ளன. ஒவ்வொரு பொருளுக்கும் வெவ்வேறு விதமான சேதங்களுக்கு வெவ்வேறு வேதியியல் பொருட்கள் வேண்டியிருக்கும். உதாரணமாக காகிதச் சுவடிகள் எண்ணெயாலோ, மையாலோ, துருவினாலோ, கரையினாலோ சேதமடைய வாய்ப்புண்டு. இச்சேதங்களை வெவ்வேறு விதமான இரசாயனப் பொருட்களைக் கொண்டு அகற்ற வேண்டும்.

3. மின் வேதியியல் முறை

படிமங்கள், நாணயங்கள் போன்ற உலோகப் பொருட்கள் அடைந்த சேதத்திற்கு மின் வேதியியல் முறைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இது மிகவும் நுண்மையான முறையாகும். ஒரு உலோகம் துரு போன்றவைகளால் சிதைவு அடைவதற்கு முக்கிய காரணம் காற்றிலுள்ள பிராண வாயு. இதன்

விளைவால் உலோகத்தின் வெளிப்பரப்பு பாதிக்கப்படுகிறது. மின் வேதியியல் முறையில் இந்த பிராணவாயுவின் விளைவை ஹைட்ரஜன் என்னும் மற்றொரு காற்றின் செயலால் மாற்றி உலோகத்தின் உண்மைத் தன்மை வெளிப்படுத்தப்படுகிறது. இதற்கு மிகவும் நுண்மையான கருவிகள் தேவைப்படுகின்றன. இந்த முறைகள் நன்றாக ஆய்வு செய்யப்பட்டு முறைப்படுத்தப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட பொருட்களிலுள்ள சிதைவுகள் நீக்கப்பட்டு பிறகு தொடர்ந்து சேதம் வராதிருப்பதற்குச் சில இரசாயனப் பொருட்கள் கொண்டு மெல்லிய முறையில் பூசப்படுகின்றன. இப்படிச் செய்வதால் இந்தக் கலைப் பொருட்கள் நீண்டகாலம் இருப்பதற்கு வாய்ப்பு உண்டாகின்றது.



படம்.1 'சோமஸ்கந்தர்' – சோழர்காலப் படிமம், அரசு அருங்காட்சியகம், சென்னை.

மின் பகுப்பாய்வு முறையினால் சுத்தப்படுத்துவதற்கு முன்பு



படம்.2 அதே படிமம் சுத்தப்படுத்திய பிறகு அதன் கலைத்தன்மை நன்றாக வெளிப்படுகிறது.



படம்.3 சென்னை அர்சு அருங்காட்சியக வேதியியல் கூடத்தில் மின்பகுப்பாய்வு மூலம் உலோகப் படிமங்களை சுத்தப்படுத்தும் உபகரணம். இவ்வேதியியல் கூடம் 1930 இல் நிறுவப்பட்டது.



படம்.4 துணியை சீர்படுத்துதல்



படம்.5 சா நாமாவின் சுவடி. லக்னோ அருங்காட்சியகம்.

சுத்தப்படுத்துவதற்கு முன்பு.



படம்.6 அதே சுவடி சுத்தப்படுத்திய பிறகு.

அருங்காட்சியகங்கள் மேலே குறிப்பிட்ட முறைகளைச் செயல்படுத்துவதற்கு வேதியியல் கூடங்கள் நிறுவப்படுகின்றன. தமிழகத்தில் சென்னை அருங்காட்சியகத்தில் 1930–இல் வேதியியல் கூடம் நிறுவப்பட்டது. தற்போது நம் நாட்டில் பல அருங்காட்சியகங்களில் வேதியியல் கூடங்கள உள்ளன. 'லக்னோ' நகரத்தில் இந்த முறைகள் பற்றி ஆய்வு செய்வதற்கு மிகப் பெரிய ஆய்வுக்கூடம் செயற்பட்டு வருகிறது.

எல்லா அருங்காட்சியகங்களிலும் இப்படிப்பட்ட வேதியியல் கூடங்கள் நிறுவப்படுவதற்கு வேண்டிய வசதிகள் இல்லை. நாள்தோறும் அடிப்படையான பாதுகாப்பு முறைகளை பின்பற்றி வந்தாலே பொருட்களைப் பெரிதளவில் பாதுகாத்து வைக்க முடியும். உதாரணமாக தூசி, ஒட்டடை இல்லாமல் வைக்க வேண்டும். ஓவியங்கள், மரச்சிற்பங்கள் போன்ற பொருட்கள்,

சூரிய ஒளி படாமல் வைக்கப்பட வேண்டும். கோடைக் காலத்தில் வெப்பம் அதிகமாக இருக்கிற நிலையில் காட்சிக் கூடங்களில் வெப்பத்தைக் குறைக்கும் முறைகள் பின்பற்றப்பட வேண்டும். இவை போன்ற முறைகள் பின்பற்றப்பட்டாலே அருங்காட்சியகப் பொருள்கள் நல்ல முறையில் நீண்டகாலம் இருப்பதற்கு ஏதுவாக அமையும்.

அருங்காட்சியகங்களில் பாதுகாப்பு முறைகள் பின்பற்றப்பட்டுச் சில முக்கியமான கலைப்பொருடகள் பாதுகாக்கப்பட்டதற்குப் பல உதாரணங்கள் உள்ளன. குறிப்பாகச் சென்னை அருங்காட்சியகத்திலுள்ள சோழ படிமங்களைக் கூறலாம். இவை மிகச் சிறந்தவையாகும். ஆனால் அவைகள் அருங்காட்சியகத்திற்கு வரும்போது பெரும்பாலும் துருவினால் மூடப்பட்டு முழுமையான கலை வேலைப்பாடுகள் தெரியாமல் இருந்தன. இப்படிமங்கள் மின் வேதியியல் முறையில் பாதுகாக்கப்பட்டு அவற்றின் வேலைப்பாடுகள் தெளிவாகத் தெரியும்படி செய்யப்பட்டது ஒரு சிறந்த பணியாகும். 40 ஆண்டுகளுக்கு முன் சாக்கடல் (Dead Sea) பகுதிக்குப் பக்கத்திலுள்ள மலைக் குகைகளில் தோலிலும் பேப்பிரசிலும் எழுதப்பட்ட சுவடிகள் தற்செயலாகக் கண்டு எடுக்கப்பட்டன. அவைகள் தோன்றியபோது அவற்றின் நிலை மிகவும் மோசமாக இருந்தது. இந்தச் சுவடிகளை வெகு கவனத்துடன் பாதுகாத்து ஒழுங்கு முறையில் ஒன்று சேர்த்ததில் 2000 ஆண்டுகளுக்கு முந்தைய பைபிளின் மூலவடிவம் கிடைத்தது. இது ஆய்வாளர்க்கு ஒரு மிகப் பெரிய வரப்பிரசாதமாக அமைந்தது. இங்கிலாந்தில் "சத்தன்ஹூ" என்னும் இடத்தில் பூமிக்குக் கீழ் ஒரு பெரிய கப்பல் கண்டு எடுக்கப்பட்டது. இந்தக் கப்பல மி கவும் பத்திரமாகப் பேணும் முறைகளைப் பயன்படுத்திப் பாதுகாக்கப்பட்டது. சாலார்ஜங் அருங்காட்சியகத்திலுள்ள கண்ணாடி ஓவியம் ஒன்று உடைந்துவிட்டது. உடைந்த கண்ணாடித் துண்டுகளை ஒன்றாகச் சேர்த்து மற்றொரு கண்ணாடிமேல் தகுந்த பசையைக் கொண்டு ஒட்டி இந்த ஓவியத்தின் முந்தைய வடிவம் பாதுகாக்கப்பட்டது. அருங்காட்சியகங்களில் இப்படிப்பட்ட பொருட்களைப் பாதுகாத்து சில நேரங்களில் அவற்றின் உண்மை உருவங்களைத் திரும்ப அடையச் செய்வதற்கு மேலே கூறப்பட்டவை சிறந்த எடுத்துக்காட்டுக்களாகும்.

## 9. அருங்காட்சியகக் கட்டிடக்கலை

அருங்காட்சியகங்கள் தோற்றம் கொண்டபோது அவற்றினை அப்பகுதியில் ஏற்கனவே இருக்கும் அரண்மனைகளிலோ, பெரிய கட்டிடங்களிலோ அமைப்பது வழக்கமாக இருந்தது. கால வளர்ச்சியில் அருங்காட்சியகம் அமைப்பதற்கு வேண்டிய கூடத்திற்கு என சில தனிக் கூறுகள் இருக்க வேண்டியதன் இன்றியமையாமை தெரிய வந்தது. அவ்வழி அருங்காட்சியகங்கள் அமைப்பதற்கு வேண்டிய தன்மைகளைக் கட்டிடக் கலைஞர்கள் ஆய்ந்து வருகின்றனர். இவ்வாறு ஆராய்ச்சி செய்து நிறுவப்பட்ட அருங்காட்சியகக் கூடங்களிலிருந்து அருங்காட்சியகக் கட்டிடக்கலைத் தன்மைகளை கீழ்க்கண்டவாறு நாம் உணர முடிகிறது.

1. அழகான தோற்றம்

அருங்காட்சியகக் கட்டிடம், பார்வையாளர்களைக் கவரும் வகையில் இருப்பது இன்றியமையாதது. அப்படியிருந்தால்தான் அருங்காட்சியகக் கட்டிட முகப்புக் கவர்ச்சி பார்வையாளர்களை அழைக்கும் ஒரு உந்துதல் சக்தியாக அமையும். ஆனால் இந்த அழகான தோற்றத்தில் அலங்காரம் மிக அதிக அளவில் இருக்கக் கூடாது, பொதுவாக அருங்காட்சியகக் கட்டிடம் சாலைக்கு மிக அருகில் இல்லாமல் கொஞ்சம் உள்ளே தள்ளியிருப்பது நல்லது.

2. பார்வையாளர்கள் சுற்றிப் பார்ப்பதற்கு வசதியாக அமைத்தல்

அருங்காட்சியகத்திற்கு வரும் பார்வையாளர்கள் எளிய முறையில் சுற்றிப் பார்ப்பதற்கிணங்க கூடங்களை அமைக்க வேண்டும். மேலும் பொருட்களை இடம்படுத்துவதில் ஒரு கூடத்திலிருந்து மற்றொரு கூடத்திற்குப் போவதற்கு வசதியுள்ள முறையில் கூடத்தின் உள்தோற்றம் அமைவது நல்லது. ஒரு பார்வையாளர் தான் விரும்பும் கூடத்திற்கு நேராக செல்வதற்கும்,

நடுவில் எந்தக் கூடத்தில் இருந்தும் வெளியில் செல்வதற்கும், பார்த்த கூடங்களுக்கு மற்றொரு தடவை போகாமல் இருப்பதற்கும் கட்டிட அமைப்பில் வசதி செய்யப்பட வேண்டும். இப்படி அமைப்பதற்கு எத்தனையோ கட்டிட வடிவங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அருங்காட்சியகக் கட்டிடத்தை வட்ட வடிவமாக அமைத்து மையத்திலிருநது ஒரு சக்கரத்து ஆரங்களின் வடிவத்தில் கூடங்களை அமைப்பது ஒருவிதம். ஏறத்தாழ இந்த வடிவத்தில் தில்லியிலுள்ள தேசீய அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது. ஹைதராபாத் சாலார்ஜங் அருங்காட்சியகக் கட்டிடம்கூட வட்ட வடிவத்தில் இருந்தும், வட்டத்திற்கு நடுவில் ஒரு வராண்டா அமைத்து அந்த வராண்டா ஓரத்தில் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த அமைப்பிலும் பார்வையாளர்கள் தமது வசதிப்படி கூடங்களைப் பார்வையிடலாம். அமெரிக்க நியூயார்க் நகரத்தில் பிராங்க் லாய்ட் ரைட் என்ற ஒரு சிறந்த கட்டிடக் கலைஞர் கக்கன்ஹைம் **(Guggenheim)** அருங்காட்சியகக் கட்டிடத்தினை வடிவமைத்தார். இந்தக் கட்டிடத்தை ஒரு திருகு ஆணியின் வடிவத்தில் அமைத்து, மையத்தில் பார்வையாளர்கள் மேல் மாடிக்கு செல்வதற்கு ஒரு லிப்ட் அமைத்தார். அவரது நோக்கம் எந்தவொரு உயரமான இடத்திற்கும் மேலே செல்வது கடினம். ஆனால் இறங்கி வருவது எளிமையானது. கீழே இறங்கி வருதல் இ எளிமையானது என்ற அடிப்படையில் இக்கட்டிடத்தை அமைத்துள்ளார். வரும் வழியில் கூடங்கள் அமைத்தால் எந்தக் கூடத்திற்கு செல்ல வேண்டுமோ அந்தக் கூடத்திற்கு செல்லலாம். இந்த அமைப்பு மிகவும் சிறந்ததொரு அமைப்பாகும்.

### 3. பாதுகாப்பு வசதிகள்

அருங்காட்சியகத்திலுள்ள பொருட்களைத் திருட்டு, தீ விபத்து போன்றவைகளிலிருந்து பாதுகாப்பதற்கு வேண்டிய வசதிகள் அருங்காட்சியகக் கட்டிடத்தில் அமைக்கப்பட வேண்டும். பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு அருங்காட்சியகக் கட்டிடத்தில் அதிகமான நுழைவாயில்கள் அமைத்தல் கூடாது. அப்படி இருந்தாலும் அவைகளை மூடி வைப்பதற்கு வேண்டிய வசதிகள் இருக்க வேண்டும்.

4. பார்வையாளர்களுக்கு வேண்டிய அடிப்படை வசதிகள்

அருங்காட்சியகத்தைப் பார்வையிட வரும் பார்வையாளர்களுக்கு வேண்டிய அடிப்படை வசதிகளான குடிநீர், கழிவறை போன்றவைகள் ஆங்காங்கு அருங்காட்சியகக் கட்டிடத்திலேயே அமைந்திருத்தல் நன்று. மேலும் சிற்றுண்டிச் சாலை வைப்பதற்கும் இடம் ஒதுக்கப்பட வேண்டும். பார்வையாளர்கள் கூடத்தைப் பார்வையிடும்போது நடுவில் ஓய்வு எடுப்பதற்கு வசதியாக இடம் ஒதுக்கி, அங்கு தேவையான தளவாடங்களையும் அமைக்க வேண்டும். அருங்காட்சியகக் கட்டிடத்தில் பார்வையாளர்கள் போக வேண்டிய இடங்களைத் தனியாகவும், அலுவலகம், காப்பாட்சியர் பிரிவு, தொழில்நுட்பப் பிரிவு போன்றவைகளுக்கு வேண்டிய இடமும் தனித்தனியாக அமைந்திருக்க வேண்டும். ஆனால் காப்பாட்சியாளர்களும், தொழில்நுட்பப் பணியாளர்களும் கூடங்களுக்குச் செல்வதற்கு வசதியாக அவர்களின் அறைகளிலிருந்து நேராக வழி இருக்க வேண்டும்.

5. வெப்பநிலை, காற்றின் ஈரத்தன்மையை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருத்தல்

அருங்காட்சியகத்திலுள்ள பொருட்கள் வெப்ப நிலைக்கும், காற்றிலுள்ள ஈரத்தன்மைக்கும் ஏற்ப பாதிப்பிற்குள்ளாகும். ஆகையால் கூடத்தின் அமைப்பிலேயே இவற்றின் பாதிப்பினைக் குறைப்பதற்கு வேண்டிய வசதிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். குளிரூட்டுக் கருவி, ஈரம் தரும் கருவி போன்ற கருவிகள் வைப்பதற்கு வேண்டிய அமைப்புக்கள் கட்டிடத்திலேயே அமைக்கப்பட வேண்டும்.

6. சூரிய வெளிச்சத்திற்கு உரிய கட்டிட அமைப்பு

சூரிய வெளிச்சம், அருங்காட்சியகத்திலுள்ள சில பொருட்களை மிகவும் பாதிக்கும். ஆனால் கூடங்களை வெளிச்சமாக வைப்பதற்கும், சூரிய ஒளி தேவைப்படுகிறது. ஆகையால் அருங்காட்சியகக் கட்டிட அமைப்பிலேயே சூரிய ஒளி, கூடங்களில் வருவதற்கும், எந்தப் பொருட்களின் மீதும் சூரிய ஒளி

நேராக படாத நிலையில் இருக்கும்படியும் இதற்கு பொதுவான வசதிகள் செய்யப்பட வேண்டும். கட்டிடத்தை வடக்கு-தெற்கு திசையில் அமைப்பது வழக்கம்.

7. ஒளிக் கருவிகள் அமைத்தல்

அருங்காட்சியகத்திலுள்ள பொருட்களைப் பார்வைக்கு வைக்கும்போது கவனிக்க வேண்டிய மிக முக்கிய அம்சம் யாதெனில், கூடங்களில் ஒளிக் கருவிகள் வைக்கும் விதமாகும். கற் சிற்பங்கள், ஓவியங்கள், ஆடைகள் போன்ற வேறுபட்ட பொருட்களுக்கு வெவ்வேறு விதமாக ஒளி அமைத்தால்தான் அவைகளை நன்றாகப் பார்த்து இரசிக்க முடியும். இப்படி ஒளி அமைப்பதற்கு நன்றாக ஆராய்ச்சி செய்து கூடங்களில் வேண்டிய வசதிகளை கட்டிடம் கட்டும்பொழுதே அமைக்க வேண்டும்.

8. அருங்காட்சியகக் கட்டிடத்திற்கு வேண்டிய இட அமைப்பு

ஒவ்வொரு அருங்காட்சியகக் கட்டிடத்திற்கும் இன்றியமையாத சில இடத் தேவைகள் உள்ளன. அவற்றில் மிகவும் முக்கியமானது கூடங்கள் அமைப்பதற்குரிய இடமாகும். இந்த இடத்தில், தேர்ந்தெடுக்கப்பட்ட பொருட்கள் காட்சிக்கு வைக்கப்படும். காட்சிக்கு வைக்கப்படாது, இருப்பிலிருக்கும் மற்ற பொருட்களைக் காப்பதற்கு இருப்பு அறைகளுக்கு இடம் தேவைப்படும். கூடங்களுக்கு வேண்டிய இடம் பெரிதாகவே இருக்கும். இருப்பு அறைகளுக்கு இடம் குறைவாக இருந்தாலும் அந்த இடத்தில் பொருட்களை ஒழுங்குபடுத்தி வைத்துப் பாதுகாக்கலாம்.

பார்வையாளர்கள் அருங்காட்சியகத்தில் நுழைந்ததும், ஓய்வெடுப்பதற்கு வசதியான இடம் ஒதுக்கப்பட வேண்டும். இந்த இடத்திற்கு அருகிலே அருங்காட்சியகத்திலுள்ள கூடங்களை சுருக்கமாக விளக்கும் ஒரு அறிமுகக் கூடம் அமைப்பதற்கு இடம் ஒதுக்கப்பட வேண்டும். குடிநீர், கழிவறை, வசதிகளும் அமைக்க வேண்டும். பொருட்களைக் காட்சிப்படுத்துவதற்கு வேண்டிய காட்சிப் பெட்டிகள், பீடங்கள் போன்ற தளவாடங்கள் மற்ற விளக்க

அட்டைகள், படங்கள் போன்றவைகளைத் தயாரிப்பதற்கு ஒரு பட்டறை அருங்காட்சியகத்தில் நிறுவ வேண்டும். அதற்கு இடம் ஒதுக்கப்பட வேண்டும். மேலும் காட்சிப் பொருளகளை இரசாயன முறைகளைக் கொண்டு பாதுகாப்பதற்கு வேண்டிய வசதிகள் உள்ள வேதியியல் கூடத்திற்குத் தேவைப்படும இடம் ஒதுக்கப்பட வேண்டும். சிறப்புக் கணகாட்சிகள், கருத்தரங்குகள் போன்ற அருங்காட்சியகத்தின் கல்விப் பணிகளை நிகழ்த்துவதற்குரிய முறையில், ஒரு கருத்தரங்க அறைக்கு இடம் ஒதுக்கப்படுவது சிறப்புடையதாக அமையும். அருங்காட்சியக அலுவலகத்திற்கும், நிழற்படப் பிரிவுக்கும், பாதுகாப்பு அறைக்கும் இடம் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். சிறிய அருங்காட்சியகங்களில் காட்சிக் கூடங்களுக்கும், இருப்பு அறைகளுக்கும், அலுவலகத்திற்கும், கழிவறைகளுக்கும் இடம் அமைக்கப்பட வேண்டும்.

## 9. சிறப்புக் கூறுகள்

அருங்காட்சியகக் கட்டிடத்திற்கு சில சிறப்புக் கூறுகள் இருக்கின்றன. அருங்காட்சியகக் கூடங்களில், சுவர்களின்மேல் காட்சிப் பெட்டிகள் வைக்கவோ அல்லது படங்கள் பொருத்தவோ வசதியுள்ளபடி அந்தச் சுவர்களின் மேல்புறத்தில் வெண்டிலேட்டர்கள் அமைத்திருக்க வேண்டும். சன்னல்கள் குறைந்த அளவிலே பொருத்தப்பட்டிருக்க வேண்டும். மின்சாரப் பெட்டிகள் சுவற்றின் கீழ்ப்பகுதியில் வைக்கப்பட வேண்டும். சுவற்றில் பூசப்படும் வண்ணங்கள் மிருதுவாக இருக்க வேண்டும். பாதுகாப்பினைக் கருத்தில் கொண்டு, கதவுகளுக்கும், சன்னல்களுக்கும் நல்ல பலமான இரும்புக் கம்பிகள் பொருத்தப்பட வேண்டும்.

## 10. சில சிறப்பான அருங்காட்சியகக் கட்டிடங்கள்

கக்கன்ஹைம் நியூயார்க் அருங்காட்சியகத்தின் கட்டிடம் ஒரு சிறப்பான அமைப்பினை உடையது. அண்மையில் பாரீஸ் நகரத்தில் ஒரு பெரிய அறிவியல் அருங்காட்சியகம் அமைக்கப்பட்டது. மூன்று மாடிகள் உள்ள கட்டிடம் இது.

பெரும்பாலும் வெளிப்புறத்தில் கண்ணாடியைப் பயன்படுத்தி இக்கட்டிடம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த கண்ணாடிகள் உலோகத்தினால் அமைக்கப்பட்ட ஒரு அமைப்பில் பொருத்தப்பட்டுள்ளன. அருங்காட்சியகம் அமைக்கப்பட்டதில் வெளிப்புறத்திலுள்ள ஒளி அதிக அளவு கூடங்களில் பயன்படுகிறது. அதே நகரத்தில் இதற்குப் பிறகு அமைக்கப்பட்ட மற்றொரு அருங்காட்சியகத்தில், கட்டப்பட்ட கண்ணாடி சுவர்களில் காமிராவில் உள்ள சட்டர் போன்ற கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. இந்த கருவிகள் வெளிப்புறத்திலுள்ள ஒளிக்குத் தகுந்தவாறு மாறக்கூடியது. இப்படிச் செய்வதால் அருங்காட்சியகத்தின் கூடங்களில் ஒளி ஒரே விதமாக இருக்கும். நம் நாட்டில் தில்லியிலுள்ள தேசீய அருங்காட்சியகம் சிறப்பானது என்று முன்னதாகவே கூறப்பட்டது. அண்மையில் போபால் நகரத்தில் பாரத்பவன் என்று ஒரு கலைக்கூடம் அழகான கட்டிடத்தில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.



படம்.7 சாலார்ஜங் அருங்காட்சியகம், ஹைதராபாத்.



படம்.8 லூவ்ரு அருங்காட்சியகம், பாரிசு.

இவ்வருங்காட்சியகத்தின் முன்பு புதியதாகக் கட்டப்பட்டுள்ள பிரமிடு போன்ற அமைப்பின் ஒரு பகுதியைக் காணலாம்.



படம்.9 கிமே அருங்காட்சியகம், பாரிசில் கீழ்த்திசை நாடுகளின் கலையைக் கொண்டுள்ள இடம்.



படம்.10 தேசிய அருங்காட்சியகம், புது தில்லி.
பழங்குடி மக்களின் கலைப்பொருட்கள் கூடம்.



படம்.11 வேல்சு இளவரசர் அருங்காட்சியகம், மும்பை.
கடல்சார்ந்த தொழில்கூடம்.

# 10. காட்சிப்படுத்துதல்

அருங்காட்சியகப் பணிகளில் காட்சிப்படுத்தும் பணியில் சிறப்பான கவனம் செலுத்தப்பட வேண்டும். ஏனெனில் ஒரு பொருளைக் காட்சிப் படுத்தும் விதத்தில்தான், அதனுடைய சிறப்பும், மதிப்பும் வெளிக்காட்டப்படுகிறது. நல்ல முறையில் காட்சிப்படுத்தப்படாவிட்டால் அது சிறந்த பொருளாக இருப்பினும், அதனுடைய மதிப்பையும், சிறப்பையும் இழந்து விடுகிறது. பார்வையாளர்கள் அருங்காட்சியகத்திற்குள் நுழையும்போது அவர்கள் அங்குள்ள பொருள்களைப் பற்றியும் அவற்றின் சிறப்பையும் அறியாமலிருக்கலாம். ஆனால் அருங்காட்சியகத்தினுள் நுழைந்து வெளியே வரும்போது அவர்களுக்குப் பொருளைப் பற்றிய சிறந்த அறிவும், தெளிவும் பொருள்களை சிறந்த முறையில் காட்சிப்படுத்துவதன் மூலம் ஏற்பட்டிருக்க வேண்டும். அருங்காட்சியகத்தில் பொருட்கள் நிறைய உள்ளன என்பதைக் காட்டும் நோக்கத்துடன் எல்லாப் பொருள்களையும் காட்சிப்படுத்தினால், இடநெருக்கடியும், பார்வையாளர்க்கு சலிப்பையும் ஏற்படுத்தும். பொருள்களைக் காட்சிப்படுத்தும்போது அப்பொருள்களின் அழகுத் தன்மையை (Aesthetic sense) வெளிக்காட்டும் வண்ணமும், பார்வையாளர்க்கு ஒரு பொழுது போக்காகவும் (Recreation), அதே சமயம் அப்பொருளின் மூலம் பார்வையாளர்க்கு கல்வியறிவை (Education) ஊட்டும் வண்ணம் காட்சிப்படுத்த வேண்டும்.

காட்சிப்படுத்தும் பணியில் கீழ்க்கண்ட விஷயங்களை கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். அவை:

1) அருங்காட்சியகக் கட்டிட அமைப்பு (Museum Architecture)
2) காட்சிக்கூட அமைப்பு (Lay-out)
3) காட்சிப் பெட்டிகள் மற்றும் காட்சிப்பலகைகள் அமைப்பு (Show cases and Panels)
4) பின்புற அமைப்பு (Background)

5. ஒளியமைப்பு (Lighting)

6. விளக்க அட்டைகள் (Labels)

1. அருங்காட்சியகக் கட்டிட அமைப்பு

இந்தியாவில் சில அருங்காட்சியகங்கள் தான் அதற்கென ஏற்ற முறையில் கட்டிடங்கள் வடிவமைக்கப்பட்டு அமைக்கப்பட்டுள்ளன. பெரும்பாலான அருங்காட்சியகங்கள் பழைய அரண்மனைகள் மற்றும் பழைய கட்டிடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. அருங்காட்சியகத்திற்கென புதிய கட்டிடங்கள் கட்டும்போது அவை பார்வையாளர்களைக் கவரும் வண்ணமும் எதிர்காலத்தில் அருங்காட்சியகத்தை விரிவுபடுத்துவதற்கு ஏற்ற வகையிலும் கட்டப்பட வேண்டும்.

2. காட்சிக்கூட அமைப்பு

பார்வையாளர்கள் அருங்காட்சியகத்தினுள் நுழைந்தவுடன் எந்த வழியில் பொருள்களைச் சுற்றி வந்து பார்க்க வேண்டும் என்று காட்சிக்கூட அமைப்பு வரையறுக்கப்பட வேண்டும். காட்சிக் கூடங்கள் நீள வாக்கிலோ அல்லது வளைந்து வளைந்து சென்று பார்க்கும் விதத்திலோ அமைக்கப்படலாம். ஆனால் எவ்விதத்திலும் பார்வையாளர்களுக்குச் சலிப்பு ஏற்படாவண்ணம் காட்சிக்கூட அமைப்பு இருத்தல் வேண்டும். அதே சமயத்தில் எந்த ஒரு பொருளையும் தவறாமல் பார்த்துச் செல்லுமாறும் காட்சிக்கூட அமைப்பு இருக்க வேண்டும். மிகப்பெரிய காட்சிக் கூடங்களில் பார்வையாளர்கள் சிறிது நேரம் அமர்ந்து ஓய்வு எடுக்க ஆங்காங்கு இருக்கைகள் அமைக்கப்பட வேண்டும். இருக்கைகள் அமைக்கப்படுவதற்கும், காட்சிப் பெட்டிகளைச் சுற்றியும், போதிய இடம் விடப்பட வேண்டும். மிகவும் சிறப்பான பொருள்களைக் காட்சிப்படுத்தும்போது அப்பொருளை தனியாக, ஒரு காட்சிப்பெட்டியில் காட்சிப்படுத்த வேண்டும். அப்பொழுதுதான் விளக்குநர்கள் ஒரு குறிப்பிட்ட குழுவிற்கு அப்பொருளைப் பற்றிய விளக்கம் அளித்துக் கொண்டிருக்கும்போது மற்ற பார்வையாளர்களுக்கு இடையூறு இல்லாமல் இருக்கும். பெரிய அருங்காட்சியகமென்றால் காட்சிக்கூடங்களின்

அமைப்பைச் சிறிய வரைபடமாகவோ அல்லது மாடலாகவோ செய்து அவற்றை அருங்காட்சியக நுழைவாயிலிலேயே வைக்கலாம். இதனால் பார்வையாளர்கள் அதிகமாக விரும்பும் கூடத்தை உடனடியாக சென்று பார்க்க இந்த மாதிரி உதவியாக இருக்கும்.



படம். 12 சாலார்ஜங் அருங்காட்சியகம், ஹைதராபாத். சீனக்களிமண் பொருட்கள் கூடம்.

3. காட்சிப் பெட்டிகள், காட்சிப் பலகைகள் அமைப்பு

பொருள்களின் தன்மைக்கேற்ப அப்பொருள்கள் காட்சிப் பெட்டிகளில் (Show case) வைக்கப்பட வேண்டுமா அல்லது வெளியில் வைத்து காட்சிப்படுத்தப்பட வேண்டுமா என்பது தீர்மானிக்கப்படுகிறது. உதாரணமாக கற்சிலைகள், விவசாயக் கருவிகள் போன்றவை அளவில் பெரியதாக இருப்பதாலும் அவற்றிற்குப் பாதுகாப்பு அதிகம் தேவைப்படாது என்பதாலும் அவற்றை காட்சிப்பெட்டிக்கு வெளியில் வைத்துக் காட்சிப்படுத்தலாம். உலோகச் சிலைகள், நாணயங்கள் மற்றும் அரிய பொருள்களைக் காட்சிப் பெட்டிகளின் உள்ளே வைத்து காட்சிப்படுத்த வேண்டும். விலங்கியல் தொடர்பான

பொருள்களை, அவை தொடர்பான இயற்கைச் சூழலை அமைத்துக் காட்சிப்படுத்தலாம். கற்சிலைகளைத் தரையில் வைக்காமல், தாங்கிகளை (pedestals) அமைத்து அதன்மேல் வைத்துக் காட்சிப்படுத்துவது சிறப்பானதாகும். உலோகச் சிலைகள் இருபுறமும் கலை வேலைப்பாடுடன் திகழ்வதால் அவைகளை நான்கு பக்கமும் சுற்றி வந்து பார்ப்பதற்குத் தகுந்தவாறு காட்சிப்படுத்துதல் அவசியமாகும். இவ்வகைக் காட்சிப் பெட்டிகளைச் சுற்றி வந்து பார்க்கத்தக்கவாறு இவைகளைக் கூடத்தின் மையத்தில் அமைக்க வேண்டும். காட்சிப் பெட்டிகள் பல்வேறு வடிவங்களில் அமைக்கப்படுகின்றன. அவை:

1. மேசை வடிவக் காட்சிப் பெட்டிகள் (Table cases)

2. செங்குத்தான காட்சிப் பெட்டிகள் (Vertical show cases)

3. சமதளக் காட்சிப் பெட்டிகள் (Horizontal show cases)

4. சுவற்றில் அமைக்கப்படும் காட்சிப் பெட்டிகள் (Wall cases)

5. துணிக்காட்சிப் பெட்டிகள் (Textile cases)

6. தாங்கிகள் (Pedestals)

7. காட்சிப் பலகைகள் (Panels)

மேசை வடிவக் காட்சிப் பெட்டிகள் சாதாரணமாக அனைத்து அருங்காட்சியகங்களிலும் பயன்படுத்தப்படுகின்றன. இவைகளில் நாணயங்கள் மற்றும் சிறிய தொல்லியல் பொருள்கள் போன்றவற்றைக் காட்சிப்படுத்தலாம். இவ்வகைக் காட்சிப் பெட்டிகள் சிறுவர்களும் பார்க்கத்தக்க வகையில் உயரம் குறைவாக இருக்க வேண்டும். மேலும் இக்காட்சிப் பெட்டிகளில் தங்கம், வெள்ளி போன்ற விலையுயர்ந்த உலோகங்களிலான நாணயங்கள் மற்றும் அரிய தொல்லியல் பொருள்கள் வைக்கப்படுவதால் இக்காட்சிப் பெட்டிகளில் குண்டு துளைக்க முடியாத கண்ணாடிகள், பொருத்தப்பட வேண்டும்.

உலோகச் சிலைகளை நான்கு புறமும் கண்ணாடி பொருத்தப்பட்ட செங்குத்தான காட்சிப் பெட்டிகளில் (Vertical show case) காட்சிப் படுத்தலாம்.

சமதளக் காட்சிப் பெட்டிகளில் தொல்லியல் தொடர்பான பொருள்கள், அரிய மணிகள் போன்றவற்றைக் காட்சிப்படுத்தலாம்.

மரச்சிற்பங்கள், புகைப்படங்கள், வரைபடங்கள் போன்றவற்றிற்குக் காட்சிப் பலகைகள் செய்து அவற்றில் தொங்கவிடலாம். மேலும் காட்சிப் பொருள்கள் பார்வையாளரின் சராசரி உயரத்தில் வைத்துக் காட்சிப் படுத்தப்பட வேண்டும்.



படம்.13 பாய்மென்ஸ் அருங்காட்சியகம், ராட்டர்டாம். காட்சிப்பெட்டியின் சிறப்பான வடிவமைப்பைக் காணலாம்.



படம்.14 பாய்மென்ஸ் அருங்காட்சியகம், கூடத்தின் ஒரு கோணம்.

### 4. பின்புற அமைப்பு (Background)

பொருள்களை சுவரிலோ, காட்சிப் பலகையிலோ அல்லது காட்சிப் பெட்டியிலோ காட்சிப்படுத்தும்போது அப்பொருளின் நிறத்தைக் கவனத்தில் கொள்ள வேண்டும். ஏனெனில் பொருளின் நிறத்திற்குத் தகுந்தவாறு பொருளின் பின்புறம் உள்ள துணி அல்லது வர்ணத்தின் நிறம் இருந்தால்தான் பொருள் எடுப்பாகக் காட்சியளிக்கும். அழுத்தமான நிறமுடைய (Dark colour) பொருள்களுக்கு லேசான நிறமுடைய (Light colour) பின்புற அமைப்பும், லேசான நிறமுடைய காட்சிப் பொருள்களுக்கு, அழுத்தமான நிறமுடைய பின்புற அமைப்பும், இருக்க வேண்டும். உதாரணமாக, தந்தத்தினாலான பொருள்களுக்கு நீலநிறத் துணிகளை பின்புறமாக வைத்துக் காட்சிப்படுத்தினால் சிறப்பாக அமையும்.



படம்.15 பாய்மென்ஸ் அருங்காட்சியகம், ராட்டர்டாம்.

கற்சிலைகள் அல்லது கல்வெட்டுக்களைக் காட்சிப்படுத்த பின்புற அமைப்பாக மர அட்டைகளையோ (Plywood) அல்லது சணல் பைகளையோ பயன்படுத்தலாம். எவ்வாறாயினும் காட்சிப்பொருளைவிட பின்புற அமைப்பு (Background) பார்வையாளரின் கவனத்தை அதிகம் ஈர்த்தல் கூடாது.



படம்.16 பாரிசிலுள்ள வடக்கு தொடர்வண்டி நிலைய அருங்காட்சியகத்தின் நுழைவாயிற் கூடம். பழைய கட்டிடம், கலைப்பொருட்களைக் கொண்ட ஒரு அருங்காட்சியகமாக மாற்றப்படுதலுக்கு இது ஒரு உதாரணமாகத் திகழ்கிறது.



படம். 17 பாரிசிலுள்ள லூவரு அருங்காட்சியகத்தின் நுழைவாயில். படிக்கட்டின் நுழைவாயிலில் உள்ள சமோத்திராசின் வெற்றியைக் குறிக்கும் சிலை ஒரு புகழ்பெற்ற காட்சிப்பொருளாகும்.

## 5. ஒளியமைப்பு (Lighting)

அரும் பொருள்கள் சிதைவடைவதற்கு ஒளிக்கு முக்கிய பங்கு உண்டு. ஆகவே ஒளியானது நேரடியாக அரும்பொருட்களின் மேல் விழாதவாறு ஒளியமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும். அருங்காட்சியகங்களில் சன்னல்கள் மற்றும் சாளரங்கள் அமைத்து இயற்கை ஒளியைப் பயன்படுத்துவது மட்டுமல்லாமல் இப்பொழுது பல்வேறு வகையான செயற்கை ஒளி விளக்குகள் பயன்படுத்தப்படுகின்றன. இயற்கை ஒளியானது பொருளின் நிறத்தை அதன் தன்மை மாறாது அப்படியே காட்டும் இயல்புடையது. ஆனால் மழைக்காலங்களில் இயற்கை ஒளி குறையும் வாய்ப்புள்ளது. எனவே இத்துடன் மின் விளக்குகளை அமைத்து செயற்கை ஒளியையும் பயன்படுத்துவது சிறப்புடையதாகும். செயற்கை ஒளியானது நீலநிறப்

பொருட்களையும், பச்சை நிறப் பொருட்களையும் மங்கலாகக் காட்டக் கூடிய தன்மையுடையதானாலும், அதை பயன்படுத்துவது அவசியமாக உள்ளது. அருங்காட்சியகங்களில் பொருள்களைக் காட்சிப்படுத்தும்போது பொருள்கள் நன்கு பளிச்சென்று தேரியும் வண்ணம் விளக்குகள் அமைக்கப்பட வேண்டும்.



படம்.18 கண்பார்வை பற்றிய கூடத்தின் ஒரு கோணம்.
நேரு அறிவியல் மையம், மும்பை.

கூடங்களுக்குச் சன்னல்கள் மற்றும் சாளரங்கள் வழியாகக் கிடைக்கும் இயற்கை ஒளியுடன் குழல் விளக்குகள் (Tube lights) அமைப்பதனால் கிடைக்கும் செயற்கை ஒளியில் கூடத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் ஒளி பரவி கூடம் பார்வையாளர்களைக் கவரும் வண்ணம் இருக்கும். சிறபங்கள் மற்றும் கலை வேலைப்பாடு மிக்க பொருள்கள் நேரடியாக ஒளியூட்டப்பட வேண்டும் (Spot light). அப்பொழுதுதான் இவ்வகைப் பொருள்களின் நுண்ணிய கலை நுட்பத்தை நன்றாகப் பார்க்க முடியும். இவ்வகை ஒளியூட்டலுக்கான விளக்குகளை கூடத்தின் உட்கூரையில் (Ceiling) இருப்புப் பாதை (Track) போன்ற

அமைப்பை ஏற்படுத்தி அதில் பொருத்திவிட்டால் விளக்குகளை தேவையான இடத்திற்கு நகர்த்திக் கொள்ளலாம்.

காட்சிப் பெட்டிகளுக்கு கிரவுண்ட் கிளாஸ் பொருத்தி அதற்குள் குழல் விளக்குகளைப் பொருத்தலாம். இதில் வெளிச்சம் மட்டும் பொருள்களின் மீது ஒரே சீராகப் பரவும். இவ்வமைப்பில் விளக்குகள் பார்வையாளர் கண்களுக்கு புலப்படா வண்ணம் இருக்கும். சமதளக் காட்சிப் பெட்டிகளில் பக்கவாட்டில் குழல் விளக்குகளை அமைத்து ஒளியூட்டலாம், அல்லது தொங்கும் விளக்குகளைப் (Billiards lights) பயன்படுத்தலாம். ஆனால் இவ்வகை விளக்குகளின் ஒளி காட்சிப் பெட்டியின் கண்ணாடிகளில் பட்டு கண்களுக்குக் கூச்சம் ஏற்படுத்தாதவாறு அமைக்கப்பட வேண்டும். கலைநுட்பம் மிக்க உலோகச் சிலைகள் செங்குத்தான காட்சிப் பெட்டிகளில் நாற்புறமும் பார்க்கத்தக்க வகையில் காட்சிப்படுத்தப்படுகின்றன. இக்காட்சிப் பெட்டிகளிலேயே.



படம்.19 புதுதில்லியிலுள்ள தேசீய அறிவியல் மையத்தின் நுழைவாயில் கூடம்



படம். 20 கிமே அருங்காட்சியகம், பாரிசு. தென் கிழக்கு ஆசியாவின் கலைப் பொருள்கள் உள்ள கூடத்தின் ஒரு கோணம். ஒளி விளக்குகளைத் தேவையான இடத்தில் பொருத்திக் கொள்வதற்காக பைப்புகளால் ஆன அமைப்பைக் காணலாம்.



படம். 21 பாரிசிலுள்ள அறிவியல் மற்றும் தொழில் நகரத்தின் ஒரு கோணம். மேறகத்திய நாடுகளில் சமீபத்தில் நிறுவப்பட்ட ஒரு சிறந்த அறிவியல் அருங்காட்சியகம்.

நேரடியாக ஒளிவீசும் விளக்குகளை (Spot lights) இருபுறமும் அமைக்கலாம். இவ்விளக்குகள் காட்சிப் பெட்டியின் வெளியே தெரியாத வண்ணம் அமைக்கப்பட வேண்டும்.

## 6. விளக்க அட்டைகள் (Labels)

விளக்க அட்டைகள் எப்படியிருக்க வேண்டும் என்பதைப் பொருளைக் காட்சிப்படுத்தத் திட்டமிடும்போதே தேர்வு செய்து கொள்ள வேண்டும். இவ்விளக்க அட்டைகள் காட்சிப் பெட்டியின் எந்த இடத்தில் வைக்கப்பட வேண்டும் என்பதையும், அதில் பொருளைப் பற்றிய விளக்கம் எந்த அளவிற்கு இருக்க வேண்டும் என்பது பற்றியும் முதலிலேயே திட்டமிட்டுக் கொள்ளுதல் வேண்டும்.

விளக்க அட்டைகள் பார்க்க அழகாகவும் ஒரே மாதிரி அளவிலும் இருக்க வேண்டும். ஒவ்வொரு கூடத்திலும், அக்கூடத்தைப் பற்றிச் சுருக்கமான அளவில் விளக்க அட்டை வைக்கப்பட வேண்டும். ஒவ்வொரு பொருளுக்கும் தனித்தனியாக சிறிய அளவில் விளக்க அட்டைகளை மின்னணு தட்டச்சு செய்து வைக்கலாம். அல்லது கணிப்பொறி வழி லேசர் அச்சு செய்து வைக்கலாம். இவ்வட்டைகளில் பொருளின் பெயர், காலம், இடம் ஆகிய விளக்கங்கள் இடம் பெறலாம். இவ்வட்டைகளில் தாய்மொழியுடன் பொதுமொழியான ஆங்கிலத்திலும் விளக்கங்கள் இருக்கலாம். விளக்க அட்டைகள் காகித அட்டைகளில் இருப்பதைவிட பிளாஸ்டிக் அட்டைகளில் இருப்பது மிகவும் பயனுடையதாகும். ஏனெனில் பிளாஸ்டிக்கானது சாதாரண தட்ப வெப்ப நிலையில் வளையும் தன்மை எதுவுமில்லாமல் நன்றாக இருக்கும். மேலும் பிளாஸ்டிக் அட்டைகளை அவ்வப்போது கழுவி சுத்தம் செய்து வைத்துக்கொள்வது எளிதாக இருக்கும்.

ஒரு பொருளைக் காட்சிப்படுத்தும்போது இதுவரை கூறப்பட்ட தொழில்நுட்ப முறைகள் பின்பற்றப்பட்டால் காட்சிப் படுத்தும்பணி சிறப்பாக அமையும். பொருள்கள் சிறப்பான முறையில் காட்சிப் படுத்தப்பட்டால்தான் பார்வையாளர்களுக்கு அருங்காட்சியகத்தின்மேல் மேன்மேலும் ஆர்வம் ஏற்பட்டுப் பல



படம். 22 பிக்காசோ அருங்காட்சியகம், பாரிசு. அறிமுக விளக்க அட்டை இவ்வருங்காட்சியகத்தின் நுழைவாயில் கூடத்தில் வைக்கப்பட்டுள்ளது.



படம். 23 அறிவியல் மற்றும் தொழில் நகரம், பாரிசு. விளக்க அட்டை ஒரு தாங்கியில் பொருத்தப்பட்டுள்ளது.

செய்திகளை அறிந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்படும். இதனால் அருங்காட்சியகத்தின் கல்விப்பணியும் சிறப்பாக விரிவடைகிறது.

# 11. கல்விப்பணிகள்

அருங்காட்சியகங்கள் என்றால் பழங்காலப் பொருட்களைக் கொண்டுள்ள இடம் என்ற நிலை மாறி இன்று அவை சிறந்த கல்விக் கூடங்களாகத் திகழ்கின்றன. பள்ளி, கல்லூரிகளில் இருப்பது போல் இங்கு மக்கள் வந்து அமர்ந்து கல்வி கற்பது இல்லை. ஆனால் மக்கள் இங்கு பொருள்களைக் கண்டு ரசித்து, அது காட்சிப்படுத்தப்பட்டுள்ள விதத்தின் மூலம் அப்பொருளைப் பற்றியும், பொருளின் வரலாற்றையும் அறிந்து கொள்கின்றனர்.

உதாரணமாக கலை மற்றும் தொல்லியல் அருங்காட்சியகத்தில் அவர்கள் இதுவரை பார்த்திராத பழங்காலப் பொருள்களைக் கண்டு, பழங்கால மக்களின் வாழ்க்கைமுறை, அவர்கள் உபயோகித்த ஆயுதங்கள் ஆபரணங்கள் ஆகியவற்றைப் பற்றி அறிந்து கொள்ள முடிகிறது. அறிவியல் அருங்காட்சியகத்தில் மக்களுக்குத் தேவையான அடிப்படை அறிவியலை அறிந்து கொள்ள முடிகிறது. மாணவர்களும் தங்கள் பள்ளிகளில் காண முடியாத விலை உயர்ந்த இயந்திரங்களை இங்கு பார்த்து அறிந்து கொள்ள முடிகிறது. மேலும் இங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ள சில பொருள்களை அவர்களே இயக்கிப் பார்த்து அவற்றின் தொழில் நுட்பத்தை அறிய முடிகிறது.

அதே போன்று இயற்கை வரலாறு பற்றிய அருங்காட்சியகத்தில் பறவைகள் மற்றும் காட்டில் வாழும் உயிரினங்கள், அவற்றின் உடலமைப்பு ஆகியவற்றை அருகில் பார்த்து அறிய முடிகிறது.

அருங்காட்சியகத்தில் பொருள்களைக் காட்சிப்படுத்துவது மட்டுமன்றி பார்வையாளர்களுக்கு கல்வியறிவைப் புகட்டுவதற்காக அருங்காட்சியகங்கள் பலவித கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. எந்த வகையில் அருங்காட்சியகத்தின் மூலம் கல்வி கற்பிக்கலாம் என்பதை ஒவ்வொன்றாகப் பார்க்கலாம்.

1. அருங்காட்சியகங்களில் கல்விப் பிரிவு ஒன்று தனியாக ஏற்படுத்தப்படலாம். புது தில்லியிலுள்ள தேசீய அருங்காட்சியகம்

போன்ற பெரிய அருங்காட்சியகங்களில் கல்விப்பிரிவு தனியாக அமைக்கப்பட்டுள்ளது. கல்விப் பிரிவில் காப்பாளா அல்லது கல்வி அலுவலர், விளக்குநாகள் போன்ற பணியிடங்கள் இருக்கலாம்.

2. அருங்காட்சியகத்தில் பொருள்களைப் பற்றிய விளக்கம் அளிப்பதற்கு விளக்குநாகள் (Guides) நியமிக்கப்பட வேண்டும். இவ்விளக்குநர்கள் அருங்காட்சியகத்திலுள்ள காட்சிப் பொருள்களைப் பற்றி நன்கு அறிந்திருக்க வேண்டும். பொருள்களைப் பற்றித் தெளிவாகவும், சரளமாகவும் விளக்கம் அளிக்கும் திறமை பெற்றிருக்கவேண்டும். விளக்குநாகள் தாய் மொழியுடன் வேற்று மொழிகள் சிலவற்றையும் அறிந்திருக்க வேண்டும். வெளிநாட்டவாகளுக்கு விளக்கம் அளிப்பதற்கு பன்னாட்டு மொழிகளின் பொது மொழியான ஆங்கில மொழி அறிந்திருக்க வேண்டும்.

3. பார்வையாளாகளுக்கு, குறிப்பாக மாணவாகளுக்கு அருங்காட்சியக சுற்றுலா (Museum Tour) ஏற்பாடு செய்யப்படலாம். அருங்காட்சியக சுற்றுலா என்பது ஒரு குறிப்பிட்ட கூடத்தில் ஒவ்வொரு பொருளாக விளக்கம் அளித்து கூடம் முழுவதையும் சுற்றி வந்து பார்வையிடுவதாக அமையும்.

4. ஒவ்வொரு கூடத்திலும், அக்கூடத்தின் காப்பாளாகளால் அக்கூடத்திலுள்ள பொருள்களைப் பற்றி விளக்கமான சொற்பொழிவு (Gallery Talk) ஒரு குறிப்பிட்ட நாளில், வாரம் ஒருமுறை ஆற்றப்படலாம்.

5. அறிஞர்களின் சிறப்பு விரிவுரைகள் (Special Lectures) குறிப்பிட்ட காலத்திற்கு ஒருமுறை அருங்காட்சியகத்தில் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். இவ்விரிவுரையின் காலம், தலைப்பு, இடம் பற்றி முன்கூட்டியே நன்றாக விளம்பரம் செய்ய வேண்டும்.

6. அருங்காட்சியகத்தில் பள்ளி, கல்லூரி ஆசிரியாகளுக்குப் பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்படலாம். இதனால் ஆசிரியர்கள் அருங்காட்சியகத்தில் பொருள்களைக் கண்டு அறிந்து கொண்டு அதைச் சிறந்த முறையில் மாணவாகளுக்குப் புரிய வைக்க எளிதாக இருக்கும்.

7. பதிவு செய்யப்பட்ட ஒலிப்பதிவு நாடாக்களைப் பயன்படுத்தி கூடத்தில் உள்ள பொருள்களைப் பற்றி பார்வையாளர்களுக்கு விளக்கம் அளிக்கலாம். வீடியோக் கருவிகளைப் பயன்படுத்தி தொல்லியல் அகழ்வாராய்ச்சி, நாட்டுப்புறச் சடங்குகள், விழாக்கள் மற்றும் விலங்கினங்கள் பற்றியும், அவற்றின் வாழ்க்கை வரலாறு பற்றியும் இருபது நிமிடங்கள் வருமாறு தொடர்புடைய கூடங்களில் விளக்கப்படங்கள் காட்டப்படலாம். தானியங்கி முறையில் இப்படமானது பத்து நிமிட இடைவெளியில் திரும்பத் திரும்ப வருமாறு ஏற்பாடு செய்யலாம்.

பிறநாட்டு மக்களின் கலை, பண்பாட்டு வாழ்க்கையைப் பற்றிய திரைப்படங்களும் வாரம் ஒரு முறையோ அல்லது மாதம் ஒரு முறையோ அருங்காட்சியகத்தில் உள்ள திரையரங்கில் காட்டப்படலாம்.

8. அறிவியல் கண்டுபிடிப்புக்களை சிறு நாடகங்களாக அருங்காட்சியகத்தில் நிகழ்த்திக் காட்டி மக்களுக்கு அடிப்படை அறிவியலைக் கற்றுக் கொடுக்கலாம். பெங்களூரிலுள்ள விஸ்வேஸ்வரய்யா அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அருங்காட்சியகத்தில், அவ்வருங்காட்சியகத்தில் பணிபுரியும் அலுவலர்களால் அறிவியல் கண்டுபிடிப்புக்கள் சிறிய நாடகங்களாக நடிக்கப்பட்டு மக்களுக்கு அறிவியல் கற்றுத் தரப்படுகிறது. இதுபோன்ற முயற்சிகளில் பிற அருங்காட்சியகங்களும் ஈடுபடலாம்.

9. அருங்காட்சியகத்திலுள்ள பொருள்களைப் பற்றிய கையேடுகள் தயாரிக்கப்பட்டு பார்வையாளர்களுக்கு இலவசமாக வழங்கப்படலாம்.

10. சிறப்பான பொருள்களைப் பற்றி நன்முறையில் ஆய்வு செய்து அதன் சிறப்புக்கள், வரலாறு மற்றும் அதன் கலையம்சங்களை மக்களுக்கு எடுத்துக் கூற அவைகளுக்கென்று அருங்காட்சியகத்தில் தனியே கண்காட்சி (Exhibition) ஏற்பாடு செய்யப்படலாம். இவை தற்காலிகக் கண்காட்சி (Temporary Exhibition) சிறப்புக் கண்காட்சி (Special exhibition) என இரண்டு வகையாக அமையும்.

தற்காலிகக் கண்காட்சி என்பது ஏதாவது ஒரு பொருளைப் பற்றி சில வாரங்களுக்கு அல்லது சில மாதங்களுக்கு அமைக்கப்படும் கண்காட்சியாகும். உதாரணமாக, விளக்குகள் (Lamps) அல்லது தமிழ்நாட்டின் நாட்டுப்புறக் கலைகள் (Folk Art of Tamil Nadu) அல்லது கண்ணாடிப் பொருள்கள் (Glass objects) என்பது போன்ற ஒரே பொருளை எடுத்துக் கொண்டு அதன் வகைகளை ஒரு குறுகிய கால வரையறையில் காட்சிப்படுத்திக் காண்பிப்பது தற்காலிகக் கண்காட்சி எனப்படும்.

சிறப்புக் கண்காட்சியில் ஒரு கருவை (Theme) பற்றிச் சித்தரிக்கும் எல்லா வகையான பொருட்களும் காட்சிப்படுத்தப்படுகிறது. உதாரணமாக சிவனைப் பற்றிய சிறப்புக் கண்காட்சி என்றால் சிவனைப் பற்றிய ஓவியங்கள், நுண்கலை ஓவியங்கள் (Miniature paintings) கற்சிலைகள், மரச்சிற்பங்கள், உலோகச் சிலைகள் எனப் பலவகையான பொருள்களும் காட்சிப்படுத்தப்படுகின்றன.

11. சாதாரணப் பார்வையாளர்க்கு மட்டுமன்றி, ஆய்வு அறிஞர்களுக்கும், கருத்தரங்குகள், பணிப்பட்டறைகள் போன்றவற்றை அருங்காட்சியகத்தில் ஏற்பாடு செய்து ஆய்வாளர்களுக்கும் சிறந்த முறையில் கல்விச் சேவை செய்யலாம்.

12. பலவகைத் தொழிலில ஈடுபட்டுள்ள கிராம மக்களுக்கு ஓய்வு கிடைப்பது என்பது அரிதான ஒன்றாகும். ஆகவே அவர்களுக்கு அருங்காட்சியகங்களுக்குச் சென்று பார்ப்பதற்கு நேரம் கிடைப்பதில்லை. எனவே இவர்கள் வாழும் இடத்திற்கே சென்று வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படை அறிவியல் செய்திகளைக் காட்சிப்படுத்திக் காண்பித்தால் அது அம்மக்களுக்கு பயனுடையதாகவும் மேலும் பிற பொருள்களை அருங்காட்சியகத்திற்கு சென்று பார்ப்பதற்கு அவர்களுக்கு ஆர்வத்தையும் ஏற்படுத்தும். இதற்காக ஒரு பெரிய பேருந்தில் சிறிய அளவில் ஒரு அருங்காட்சியகத்தை ஏற்படுத்தி அப்பேருந்தை அருகிலுள்ள கிராமங்களுக்கு ஓட்டிச் சென்று கிராம மக்கள் பார்த்துப் பயனடையுமாறு செய்தல் வேண்டும். இது நடமாடும் அருங்காட்சியகம் (Mobile Museum) என்று அழைக்கப்படுகிறது.

13. பள்ளியில் படிக்கும் குழந்தைகளுக்கு ஓவியப்போட்டி, வினாடி, வினாப்போட்டி (Quiz competition) போன்ற போட்டிகள் நடத்தி அவர்களுக்கு ஆர்வத்தை ஊட்டலாம்.

14. பள்ளிகளுக்கு அரிய பொருள்களின் மாதிரிகளை (Models) அளித்து மாணவர்களுக்குக் கல்வியறிவு புகட்டலாம். உதாரணமாக சென்னை அருங்காட்சியகத்தில் 32 சிறந்த இந்திய நாணயங்களைத் தேர்ந்தெடுத்து அவற்றின் மாதிரிகளை உலோகத்தில் செய்து ஒரு அழகிய பெட்டியில் வைத்து இவற்றுடன் இந்நாணயங்களைப் பற்றிய ஒரு நூலும் விற்பனை செய்கின்றனர். இந்நாணய மாதிரிகளின் தொகுப்பைக் கொண்டு வரலாற்றுப் பாடத்தை நடத்துவதற்கு ஆசிரியர்களுக்கு மிக உதவியாக அமைகிறது. இதே போன்று புது தில்லி தேசீய அருங்காட்சியகத்தில் சிந்து சமவெளி நாகரீகம் தோன்றிய ஹரப்பா மற்றும் மொஹஞ்சோதாரோவில் கிடைத்த பொருள்களைப் போன்ற மாதிரிகளைச் செய்து விற்பனை செய்கின்றனர்.

15. அருங்காட்சியகத்தில் ஆசிரியர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்து வகுப்புகள் நடத்தச் செய்யலாம். இதனால் மாணவர்கள் பொருள்களை நேரடியாகப் பார்த்து ஆசிரியர் மூலம் கற்றுக்கொள்ள முடியும்.

16. அருங்காட்சியகத்தில் நூலகம் ஏற்படுத்தி ஆய்வாளர்கள் மட்டும் அல்லாது அனைத்துப் பார்வையாளர்களும் நூலகத்தைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

17. இயற்கை வரலாறு மற்றும் அறிவியல் அருங்காட்சியகங்களில் மாணவர்களுக்காக கண்டுபிடிப்பு அறைகளை (Discovery Rooms) ஏற்படுத்தி அவ்வறைகளில் மின் அமைப்புக்களைப் பயன்படுத்தி அடிப்படைச் செய்திகளை அறியச் செய்யலாம். உதரணமாக ஒரு பலகையில் அறிவியல் தொடர்பான சில கேள்விகளை எழுதி அதற்கு நேர் எதிரே பதில்களை மாற்றி எழுதி ஒவ்வொரு கேள்விக்கும் சரியான பதிலைக் கையினாலோ அல்லது கம்பியாலோ தொட்டால் மின் விளக்கு எரிவது போன்ற அமைப்பை இக்கண்டுபிடிப்பு அறைகளில் செய்து வைக்கலாம். இதனால் மாணவர்களுக்கு இதில் மிகவும் ஆர்வம் ஏற்படுகின்றது.

18. அருங்காட்சியகத்தில் மட்டுமன்றி அருங்காட்சியகத்திற்கு வெளியேயும் கல்விப் பணிகளை ஆற்றமுடியும். அருங்காட்சியக அலுவலர்கள் அருகிலுள்ள பள்ளி, கல்லூரிகளுக்குச் சென்று ஏதாவது ஒரு பொருளைப் பற்றிச் சிறப்பு விரிவுரையாற்றலாம். கல்லூரிகளிலோ அல்லது பள்ளிகளிலோ தற்காலிகக் கண்காட்சியை அமைத்து அதை அனைத்து மாணவர்களும் காணுமாறு செய்யலாம்.

இதுவரை கூறப்பட்ட கல்விப் பணிகள் பலவற்றை தேசீய அருங்காடசியகம், புதுதில்லி, இந்தியன் அருங்காட்சியகம், கல்கத்தா, விஸ்வேஸ்வரய்யா அறிவியல் அருங்காட்சியகம், பெங்களூர் மற்றும் அரசு அருங்காட்சியகம், சென்னை போன்ற பெரிய அருங்காட்சியகங்கள் செய்து வருகின்றன. தமிழநாட்டில் ஈரோடு, மதுரை, வேலூர், புதுக்கோட்டை போன்ற ஊர்களிலுள்ள மாவட்ட அருங்காட்சியகங்கள், மாவட்ட அளவில் கல்விப் பணிகளை நல்ல முறையில் ஆற்றி வருகின்றன். இத்தகைய கல்விப் பணிகள் மூலமாக மாவட்ட அளவில் மக்களுக்கு அருங்காட்சியகத்தைப் பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றன.

பெரிய அருங்காட்சியகங்கள்தான் கல்விப்பணிகள் செய்ய வேண்டும் என்ற வரையறை இல்லை. மற்ற அருங்காட்சியகங்களும் அவற்றின் வசதிகளுக்கேற்ப திட்டமிட்டுக் கல்விப் பணிகளை ஆற்ற வேண்டும். அப்பொழுதுதான் அருங்காட்சியகத்தின் குறிக்கோள் முழுமையாக நிறைவேறும்.



படம். 24 தேசிய இயற்கை வரலாறு அருங்காட்சியகம், புது தில்லி. ஒரு நாட்டுப்புறக் காட்சி. டயரமா என்று கூறப்படும் காட்சி முறைக்கு இது ஒரு உதாரணமாகும்.



படம். 25 தேசிய இயற்கை வரலாறு அருங்காட்சியகம், புது தில்லி. அழிந்துவரும் உயிரினங்களைக்கொண்ட ஒரு காட்சி.

பல்கலைக்கழக அருங்காட்சியகங்கள் அருங்காட்சியக இயலில் பட்டயப் படிப்புக்களை நடத்தலாம். இது இளைய தலைமுறையினருக்கு, மக்களுக்கு சேவை செய்ய ஒரு அரிய வாய்ப்பினையும், வாழ்க்கையில் புத்துணர்ச்சியையும், தன்னம்பிக்கையும் ஏற்படுத்தும். மேலும் தகுதியுடைய அருங்காட்சியகப் பணியாளர்கள் பல்கலைக்கழகங்கள் அல்லது கல்லூரிகளில் அருங்காட்சியக இயல் பாடங்களுக்கு வகுப்பு எடுப்பது போன்ற கல்விப் பணிகள் ஆற்றலாம்.

# 12. வெளியீடுகள்

வெளியீடுகள் கொண்டு வருவதும், அருங்காட்சியகத்தின் முக்கியமானதொரு பணியாகும். தனது சேகரிப்புக்களிலுள்ள பொருள்களைப் பற்றி ஆய்வு செய்து பெற்றுள்ள தகவல்களை நிரந்தரமாக அருங்காட்சியகம் பதிவு செய்வதோடு மக்களிடையே பரப்பவும் செய்கிறது. பெரும்பாலும் இந்த வெளியீடுகளில் அருங்காட்சியகத்திலுள்ள பொருட்களின் பட்டியல் ஒரு குறிப்பிட்ட வரன்முறையில் அடங்கியிருக்கும். சில சமயங்களில் இந்த வெளியீடுகளில் பொருட்களைப் பற்றி விரிவான விளக்கம் இடம் பெற்றிருக்கும் அல்லது பொருட்களைப் பற்றிய மலிவு விலைப்பதிப்பும் வெளியிடப்படும். இந்த வெளியீடுகள் எல்லாம் ஆய்வாளர்களுக்கும், பொதுமக்களுக்கும் மிகவும் பயனுள்ளதாக அமையும். சென்னை, அருங்காட்சியகம் தோற்றுவிக்கப்பட்ட முதல் ஆண்டிலேயே சுமார் 10 வெளியீடுகளைக் கொண்டு வந்தது ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும். அருங்காட்சியகங்களின் வெளியீடுகள் பலவகைகளாக இருக்கும். அந்த வகைகளைப் பற்றி நாம் இங்கு காண்போம்.

1. அட்டவணைகள் (Catalogues)

ஒரு அருங்காடசியக சேகரிப்பிலுள்ள பொருட்களைப் பற்றி வெளியிடப்படுகிற அட்டவணை மிகவும் பயனுடைய வெளியீடாகும். பொதுவாக ஒரு வகையான பொருட்களைப் பற்றி ஒரு அட்டவணை எழுதப்படும். உதாரணமாக (1) சாதவாகன நாணய அட்டவணை. (2) நாகப்பட்டினம் படிமங்கள் அட்டவணை, இவ்வகையான வெளியீடுகளில் அந்தப் பொருட்களின் பட்டியல், அவை எப்பொருட்களால் செய்யப்பட்டுள்ளன, அவற்றின் அளவுகள் யாவை, எவ்வாண்டில் அவை சேகரிக்கப்பட்டடன, எந்த இடத்தில் கண்டெடுக்கப்பட்டன அவற்றின் சிறப்புக் கூறுகள் எவை என்ற விளக்கங்கள் விவரமாகக் குறிக்கப்படும். இப்பொருட்களைக் காத்துவரும் காப்பாட்சியர் இவ்வட்டவணைகளுக்கு விரிவானதொரு அறிமுகம் தருவது இயல்பு. இவ்விளக்கங்களுக்கு மேலாக அவை குறித்த புகைப்படங்களும் வரைபடங்களும் இடம் பெறுவதும் உண்டு.

இப்படிப்பட்ட ஒரு பயனுள்ள அட்டவணைக்கு உதாரணம் சென்னை அருங்காட்சியகத்தின் அமராவதி சிற்பங்களைப் பற்றி சி. சிவராமமூர்த்தி எழுதிய அட்டவணையாகும். செய்திகளின் தூத்தில் இந்நூல் ஆய்வாளர்களுக்கு மிகவும் அரியதொரு நூலாக அமைந்துள்ளது.

## 2. இதழ்கள் (Journals)

சில அருங்காட்சியகங்கள் தம்முடைய வெளியீடுகளை ஒரு இதழ் தொடராகக் கொண்டு வருகின்றன. ஒரு இதழானது அவ்வப்போது வெளியிடப்படும் வெளியீடாகும். இவ்வாறாக வெளியிடப்படும் நூல்களுக்கு வரிசையான எண்கள் தரப்படும். இந்த இதழ்கள் தொடர்ந்து ஒரு குறிப்பிட்ட கால வரையறையிலோ அல்லது வசதிக்கேற்ப காலவரையறையின்றியோ கொண்டு வரப்படும். குறிப்பிட்ட தலைப்பைக் கொண்டு அமைகின்ற இதழ் தம்மளவில் பெரிய அளவிலோ சிறிய அளவிலோ அமைகின்ற ஒரு நூல் எனலாம். இதழ் வரிசையில் பட்டியல் கூட அடங்கியிருக்கலாம். சென்னை அருங்காட்சியகம் தனது இதழ்களை இரண்டு மாறுபட்ட தொடர்களில் வெளியிட்டு வருகிறது. ஒரு தொடர் கலை, தொல்பொருள் இயலுக்குத் தொடர்புடையது. மற்றொரு தொடர் இயற்கையியலுக்குத் தொடர்புடையது. இத்தகைய இதழ் தொடரை பரோடா அருங்காட்சியகம் சிறப்புற வெளியிட்டு வருகிறது.

## 3. வழிகாட்டி நூல்கள்

அருங்காட்சியகப் பார்வையாளர்களுக்கு கூடங்களைப் பார்வையிடுவதற்கு எப்போதும் வழிகாட்டியின் உதவி கிடைக்காமற் போகலாம். கூடங்களில் வைக்கப்பட்டுள்ள பொருட்களைப் பற்றி விரிவாகத் தெரிந்து கொள்வதற்குப் பார்வையாளர்களிடையே ஆர்வம் இருக்கலாம். இத்தேவையினைப் பூர்த்தி செய்வதற்கு அருங்காட்சியகக் கூடங்களில் உள்ள பொருட்களைப் பற்றி விளக்கம் கூறும் இவ்வழிகாட்டி நூல்கள் (Guide books) வெளியிடப்படுகின்றன. இந்த நூல்கள் சிறிய அளவில் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் அமைந்திருக்கும். சில புகைப்படங்களையும் காட்சிக் கூடத்தின் வரைபடத்தினையும் இந்நூல் கொண்டிருக்கும். பெரும்பாலான அருங்காட்சியகங்கள் இப்படிப்பட்ட வழிகாட்டும்

நூல்களை மலிவு விலையில் கொண்டு வெளியிட்டு வருகின்றன. எளிய நடையில் எழுதப்பட்டுள்ள இந்த நூல்கள் ஆய்வாளர்களுக்கும் ஆய்விற்கும் பயனுடையதாகவும் இருக்கின்றன.

4. கையேடுகள்

அருங்காட்சியகத்தின் தொழில்நுட்பப் பணிகளை விளக்கும் வகையில் எழுதப்படுபவை கையேடுகளாகும். சென்னை அருங்காட்சியகத்தால் வெளியிடப்பட்ட (Hand book of Museum Technique) 'அருங்காட்சியகத்தின் தொழில்நுட்பப் பணி கையேடு' இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். பிரிட்டனில் உள்ள அருங்காட்சியகக் கழகம் 'காப்பாட்சியாளர்களுக்குக் கையேடு' என்ற பொதுத் தலைப்பில் அருங்காட்சியகத்தின் வெவ்வேறு பணி வகைகளைப் பற்றிய சிறிய நூல்களை வெளியிட்டு உதவி வருகிறது.

5. சிறப்புக் கண்காட்சி கையேடுகள் மற்றும் பட்டியல்கள்

சிறப்புக் கண்காட்சிகளை வைப்பது அருங்காட்சியகத்தின் ஒரு பணியாகும். இவ்வமைப்புக்கள் பார்வையாளர்களை மீண்டும் மீண்டும் அருங்காட்சியகத்திற்கு வருவதற்குத் தூண்டும் ஒரு புதிய உத்தியாகும். சிறப்புக் கண்காட்சிகள் குறிப்பிட்ட நிறுவனம் அல்லது தனியார் சேகரிப்புக்களிலிருந்து தேவைக்கேற்பவும், கருத்து விளக்கத்திற்கேற்பவும் இன்றியமையாக் கூறுகளைத் தனிப் பிரிவாக்கி காட்சிப்படுத்தும் இயல்புடையனவாகும். கிருஷ்ண ஜெயந்தி, நவராத்திரியை ஒட்டி கிருஷ்ணன், மகிசாசுரமர்த்தினி கலை போன்ற தனிப் பொருட்களை விளக்கும் வண்ணம் இத்தகைய காட்சிகள் அமைப்பது இயல்பு. குறிப்பிட்ட சிறப்புக் கண்காட்சிகளில் கிருஷ்ணன் அல்லது மகிசாசுரமர்த்தினி தொடர்புள்ள சிறிய ஓவியங்கள், சிற்பங்கள், படிமங்கள் காட்சிப்படுத்தப்படுகின்றன. தற்போது சுற்றுப்புற சூழ்நிலையியல் (Ecology) பெரியளவில் அனைவராலும் பேசப்பட்டு வருகிறது. இயற்கையியல் அருங்காட்சியகம் இதுபற்றி ஒரு சிறப்புக் கண்காட்சி வைத்து மக்களுக்கு சுற்றுப்புற சூழ்நிலையை பாதுகாக்கும் வகையைப் பற்றி விளக்கலாம்.

நியூயார்க்கில், 'மெட்ரோபாலிட்டன் மியூசியம் ஆப் ஆர்ட்' என்கிற அருங்காட்சியகம் அண்மையில் பன்னாட்டு, அளவில்

சிவ வடிவங்கள் (Manifestation of Siva) என்ற தலைப்பில் சிறந்ததொரு கண்காட்சியை அமைத்திருந்தது. இவ்வாறு சிறப்பு கண்காட்சிகள் ஏற்படுத்தும்போது அவை பற்றி விளக்கப் பட்டியல் நூல்கள் வெளியிடுவது வழக்கமாகும். இப்படிப்பட்ட வெளியீடுகள் அறிஞர்களுக்கும், பொது மக்களுக்கும் அருங்காட்சியக சேகரிப்புக்களிலுள்ள அறிமுகம் இல்லாத பகுதிகளைப் பற்றி விளக்கங்கள் தருவதாக உள்ளன.

6. துண்டுப் பிரசுரங்கள், படங்களைக் கொண்ட அட்டைகள்

பெரும்பாலும் அருங்காட்சியகத்திற்கு வரும் பார்வையாளர்கள் திரும்பப் போகும்போது அவர்கள் காட்சியகத்தைக் கருத்துள் கொள்ளும் அடையாளமாக கையேடுகளையோ, படமுள்ள அட்டைகளையோ (picture post card) நினைவுப் பொருள்களாக எடுத்துச் செல்ல விரும்புகிறார்கள். துண்டுப் பிரசுரங்கள் அழகாக வடிவமைக்கப்பட்டு மலிவு விலையிலோ அல்லது இலவசமாகவோ கொடுக்கப்படுகின்றன. இவ்வாறு நன்றாக வடிவமைக்கப்பட்ட துண்டுப் பிரசுரங்கள், படமுள்ள அட்டைகள் ஆகியன அருங்காட்சியகத்தைப் பெரிதளவில் எல்லோரும் அறிவதற்கு உதவுகின்றன.

பெரிய அருங்காட்சியகங்களில் ஒரு அருங்காட்சியக அங்காடி அல்லது விற்பனைப் பகுதி பொதுவாக இடம் பெற்று வருகிறது. பார்வையாளர்கள், அருங்காட்சியக வெளியீடுகளையோ, பொருட்களையோ இவ்விற்பனைப் பகுதிக்குச் சென்று வாங்கிச் செல்கின்றனர். இப்பகுதியிலேயே அருங்காட்சியகத்தில் உள்ள முக்கிய பொருட்களின் சிறிய அளவு மாதிரிகள் (Miniature models) விற்பனை செய்யப்படுகின்றன. இம்மாதிரிகள் பல்வேறு அருங்காட்சியகங்களையும் மாந்தர்தம் நினைவில் கொள்வதற்கு ஏதுவாகிறது.

# 13. உலகப் புகழ் பெற்ற அருங்காட்சியகங்கள்

இதுவரையிலும் அருங்காட்சியகங்கள் அமைக்கும் முறையைப் பற்றிக் கூறிய கருத்துக்கள் யாவையும் உலகத்திலுள்ள சில முக்கிய அருங்காட்சியகங்களைப் பற்றிய செய்திகளைக் கூறாமல் இருந்தால் முழுமை பெற்றவையாகா. அருங்காட்சியக அமைப்பைப் பற்றிக் குறிப்பிட்டக் கருத்துக்களும், முறைகளும் இந்த முக்கிய அருங்காட்சியகங்களின் பணிகள் வாயிலாகவே தோற்றம் பெற்றுள்ளன. இவ்வருங்காட்சியகங்கள் தம்முடைய அமைப்பைத் தொடர்ந்து புதுப்பித்து வருகின்றன. எனவே அவ்வகையில் தற்போது அயல்நாடுகளிலுள்ள சில புகழ் பெற்ற அருங்காட்சியகங்களைப் பற்றிய செய்திகளைக் காண்போம்.

## பிரிட்டிஷ் அருங்காட்சியகம் (BRITISH MUSEUM, LONDON)

1745–இல் இந்த அருங்காட்சியகம் தோற்றுவிக்கப்பட்டது. இங்கிலாந்திலுள்ள அருங்காட்சியகங்கள் எல்லாவற்றிலும் இதுவே மிகப் பெரியதாகும். இங்கு தொல்லியல், கலை, மானிடவியல், சேகரிப்புக்கள் பெரிய அளவில் உள்ளன. எகிப்து, கிரீசு, ரோம் போன்ற நாடுகளின் கலைப்பொருட்கள், மேற்கத்திய ஆசியப் பொருட்கள், இங்கிலாந்தின் முன்னிடைக்காலப் பொருட்கள் ஆகியன இடம்படுத்தப்பட்டுள்ளன. நம் நாட்டின் அமராவதிச் சிற்பங்களும் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

## தேசீயக்கூடம் (NATIONAL GALLERY, LONDON)

இலண்டன் நகரில் இக்கூடம் 1824–இல் தொடங்கப்பட்டது. ஐரோப்பிய ஓவியச் சேகரிப்புக்கு மிகச் சிறந்த ஒரு கூடமென இதனைக் கருதலாம். இங்கு இத்தாலி, டச்சு, பிளமிசு (Flemish) ஸ்பானிஷ், செர்மன் நாடுகளைச் சேர்ந்த ஓவியங்களும் கி.பி.1900 வரை தீட்டப்பட்ட பிரான்ஸ் நாட்டின் ஓவியங்களும் இங்கிலாந்து நாட்டின் சில ஓவியங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

## விக்டோரியா & ஆல்பர்ட் அருங்காட்சியகம் (VICTORIA AND ALBERT MUSEUM, LONDON)

கி.பி.1853–இல் தொடங்கப்பட்ட இந்த அருங்காட்சியகம், பல நாடுகளிலிருந்து சேகரிக்கப்பட்ட கலைப்பொருட்கள் உள்ள மகத்தான இடமாகும். 1851–இல் நடைபெற்ற 'கிரேட் எக்ஸிபிஷன்' க்காகச் சேகரிக்கப்பட்ட எல்லாவற்றையும் சேர்த்து இந்த அருங்காட்சியகம் தொடங்கப்பட்டது. இதில் சிற்பங்கள், தளவாடங்கள், மட்பாண்டங்கள், பீங்கான் பொருட்கள், ஆடைகள், அணிகலன்கள் போன்ற பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இங்கிலாந்திலிருந்தும் சிறந்த பொருட்கள் இந்த அருங்காட்சியகத்தில் சேகரிக்கப்பட்டுள்ளன.

## இலண்டன் அருங்காட்சியகம் (LONDON MUSEUM, LONDON)

இலண்டன் நகரத்தின் வரலாற்றைச் சிறப்புற விளக்கும் முறையில் இவ்வருங்காட்சியகம் குறிப்பிடத்தக்க வகையில் செயற்பட்டு வருகிறது. இங்கு இந்நகரத்தின் வரலாற்றில் நடந்த சில முக்கிய நிகழ்ச்சிகள் 'போலுருவாக்கம்'(Diorama) என்கிற ஒரு காட்சி முறையால் காண்பிக்கப்பட்டுள்ளன. (உதாரணம்) கி.பி.15–ஆம் நூற்றாண்டில் லண்டனில் ஏற்பட்ட ஒரு பெரிய தீ விபத்து (The Great Fire of London) தத்ரூபமாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

## லூவர் அருங்காட்சியகம் (THE LOUVRE MUSEUM, LONDON)

பிரான்சிலுள்ள அருங்காட்சியகங்களில் மிகவும் சிறந்த ஒன்றாகும். இது பாரீசில் அமைக்கப்பட்டுள்ளது. பிரான்ஸ் மன்னர்களின் அரண்மனையாக இருந்த லூவ்ரு அரண்மனையில் கி.பி.1791–இல் இந்த அருங்காட்சியகம் தொடங்கப்பட்டுள்ளது. மிகவும் சிறந்த கலைப்பொருள்கள் இங்கு இடம்படுத்தப்பட்டுள்ளன. மத்தியக் கிழக்கு நாடுகளிலிருந்தும் ரோம், கிரீசு, எட்ரூஸ்கன், ஆகிய நாடுகளிலிருந்தும் தொல்லியல் பொருட்கள் சேகரிக்கப்பட்டு இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. மேலும் இசுலாமிய முன்னிடைக்காலச் சிற்பங்களும் ஓவியங்களும் இங்கு உள்ளன. லியோனார்டோ டாவின்சியின் 'மோனாலிசா' என்ற ஓவியம், வீனஸ் தோமிலோ என்ற சிற்பம் போன்ற உலகின் விலைமதிப்பற்ற அரிய

கலைப்பொருட்கள், இந்த அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

குவிமே அருங்காட்சியகம் (GUIMET MUSEUM, PARIS)

ஆசியக் கண்டத்தின் அருங்கலைப் பொருடகளைத் தம்மகத்தே கொண்ட சிறந்ததொரு அருங்காட்சியகமாக இது விளங்குகிறது. இங்கு சீனா, தாயலாந்து, இந்தோனேசியா, கொரியா, சப்பான் நாடுகளிலிருந்தும் நம் நாட்டிலிருந்தும் கலைப் பொருட்கள் சேகரிக்கப்பட்டுக் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

துருவ நாடுகளின் அருங்காட்சியகம் (MUSEUM OF THE TROPICS, AMSTERDAM)

நெதர்லாந்து நாட்டின் தலைநகரமான ஆம்ஸ்டாடாமில் உள்ள அருங்காட்சியகம் துருவ, துணைத்துருவ (Tropical & Sub-Tropical) நாடுகளில் வாழும் மக்களின் வாழ்க்கையினை விளக்கும் அருங்காட்சியகமாகத் திகழ்கிறது. இந்த மக்களின் குடியிருப்பு, ஆடைகள், பண்பாடு, சமயம், கலைகள் பற்றிய தொடர்புடைய பொருட்களை சேகரித்து போலுருவாக்கம் (Diorama) மூலமாக சிறந்த முறையில் இங்குக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பாய்மான் அருங்காட்சியகம் (BOYMANS MUSEUM, ROTTERDAM)

ஐரோப்பியக் கலைகளுள் குறிப்பிடத்தக்க இடம் பெறும் சிறந்த ஓவியங்கள் பலவற்றைக் காட்சிக்கு வைத்திருக்கும் கூடங்களைக் கொண்ட சிறந்த அருங்காட்சியகம் இது. நெதர்லாந்தில் ரோட்டர்டாம் நகரத்தில் இது அமைந்துள்ளது. மேலும் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த சிற்பங்கள் பீங்கான் பொருட்கள், கண்ணாடிப் பொருட்கள், தளவாடங்கள் ஆகியனவும் இந்த அருங்காட்சியகத்தில் உள்ளன.

பிராடோன் அருங்காட்சியகம் (PRADO MUSEUM , MADRID)

ஸ்பெயின் நாட்டில் உள்ள தேசீய அளவிலான கலை அருங்காட்சியகம் பிராடோன் அருங்காட்சியகமாகும். இங்கு ஸ்பெயின் நாட்டின் ஓவியங்களும், இத்தாலி ஓவியங்களும், பிளமிஷ், பிரான்சு, ஜெர்மன், இங்கிலாந்து முதலிய நாடுகளைச்

சேர்ந்த ஓவியங்களும் இடம் பெற்றுள்ளன. இங்குள்ள கிரேக்க ரோமானியச் சிறபங்களும் டெல்பின் நாணயங்களும் குறிப்பிடத்தக்க சிறப்பு வாய்ந்தவை ஆகும்.

ஹெர்மிட்டாச் அருங்காட்சியகம் (THE HERMITAGE , LENINGRAD)

இந்த அருங்காட்சியகம் சோவியத் நாட்டிலுள்ள அருங்காட்சியகங்களில் மிகவும் சிறந்ததாகும். சோவியத் மன்னர்களால் சேகரிக்கப்பட்ட ஐரோப்பியக் கலைப்பொருட்கள், ஆசியக் கண்ணாடிக் கலைப் பொருட்கள், இரசிய நாட்டின பல்வேறு பண்பாட்டுக் கலைப்பொருட்கள், நாணயங்கள் இந்த அருங்காடசியகத்தில் உள்ளன. இது லெனின்கிரேட் நகரததில் உள்ளது.

உபீசி காலரி (UFFIZI GALLERY, FLORENCE)

இது இத்தாலி நாட்டிலுள்ள பழமையான அருங்காட்சியகமாகும். இவ்வருங்காட்சியகம் பிளாரன்ஸ நகரததில் உள்ளது. இங்கு 16–ஆவது நூற்றாண்டைச் சேர்ந்த எழினிகள் (tapesteries) கிரேக்கச சிறபங்கள், இததாலிய ஓவியங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. பெலினி, டியூபர், ஹால்பைன, கொரேகியோ போன்ற புகழ்பெற்ற ஓவியாகளின படைப்புக்களைக் கொண்ட அருங்காட்சியகமாகவும் இது திகழ்கிறது.

வாட்டிகன் அருங்காட்சியகங்கள் (THE VATICAN MUSEUMS, LONDON)

கத்தோலிக்க கிறித்துவ சமயத்தாருக்குத் தலைவரான போப் இருக்கும் நகரம் வாட்டிகன் ஆகும். இது ரோம் நகரத்தில் உள்ளது. போப்புகள் பல நூற்றாண்டுகளாகக் கலைப் பொருட்களைச் சேகரித்து வந்துள்ளனா். இவ்வாறு சேகரிக்கப்பட்ட பொருட்கள் ஆறு அருங்காட்சியகங்களில் வாட்டிகன் நகரத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. ராபேல், மைக்கேல் ஆன்சலோ போன்ற சிறந்த ஓவியர்களின் படைப்புக்களை இங்கு காணலாம்.

## மெட்ரோபாலிட்டன் அருங்காட்சியகம், நியூயார்க் (METROPOLITAN MUSEUM OF ART, NEW YORK)

அமெரிக்கக் குடியரசிலுள்ள மிகப்பெரிய கலை அருங்காட்சியகமாக இது விளங்குகிறது. இங்கு ஐரோப்பிய, அமெரிக்க, கிரீசு, உரோம், தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கலைப்பொருட்கள் ஏராளமாக உள்ளன.

ஐரோப்பாக் கண்டத்தில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நகரங்களில் மக்கள் வாழும் வீடுகளில் அறைகள் எவ்வாறு அமைந்திருக்குமோ அவற்றை விளக்கும் வகையில் கூடங்கள் அசலாக அமைக்கப்பட்டுள்ளன. மேலும் இசைக்கருவிகள், ஆடைகள், அலங்காரப் பொருட்கள் இந்த அருங்காட்சியகச் சேகரிப்புக்களில் அடங்கும்.

## அமெரிக்கன் இயற்கையியல் அருங்காட்சியகம் (AMERICAN MUSEUM OF NATURAL HISTORY, NEW YORK)

இயற்கையியலைச் சார்ந்த அருங்காட்சியகங்களில் மிகவும் சிறந்ததென இவ்வருங்காட்சியகத்தைச் சுட்டலாம். இது நியூயார்க் நகரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. புவியியல், விலங்கியல், தாவரவியல் ஆகியனவற்றைச் சார்ந்த பொருட்கள் பரந்த அளவில இந்த அருங்காட்சியகங்களில் சேகரிக்கப்பட்டுக் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. மேலும் இந்த அருங்காட்சியகங்களில் ஆப்பிரிக்கா, மெக்சிகோ, மத்திய அமெரிக்க நாடுகளில் மனிதன் வாழ்ந்த முறைகளை விளக்கும் கூடங்கள் அழகாக அமைக்கப்பட்டுள்ளன.

மனிதன் தோன்றுவதற்கு முனபே பூமியில் வாழ்ந்த மிகப்பெரிய விலங்குகளின் எலும்புக் கூடுகள் சேகரிக்கப்பட்டு இந்த அருங்காட்சியகத்தில் அசலான வடிவில் அமர்த்தப்பட்டுக் காட்சியில் வைக்கப்பட்டுள்ளன. இந்த அருங்காட்சியகத்தில் இது ஒரு சிறந்த அம்சமாகும்.

## நுண்கலை அருங்காட்சியகம் (MUSEUM OF FINE ARTS, BOSTON)

நுண்கலைகள் பல நாடுகளில் வளர்ந்த முறையினை தெளிவாக்கும் வகையில் இந்த அருங்காட்சியகத்தில் சேகரிப்புக்கள் உள்ளன. சிறப்பாக ஐரோப்பிய ஓவியங்கள்,

18–19–ஆவது நூற்றாண்டுகளைச் சார்ந்த அமெரிக்க ஓவியங்கள், வரைபடங்கள், பெரு நாட்டைச் சேர்ந்த ஆடைகள், வெள்ளியால் உருவாக்கப்பட்ட பண்டைய இசைக்கருவிகள், சீன நாட்டின் பீங்கான் பொருட்கள் முதலியன இந்த அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளமை பாராட்டத்தக்கதாகும்.

### டாயிட்சஸ் அருங்காட்சியகம் (DEUTCHES MUSEUM, MUNICH)

அறிவியல் கூடங்கள் கொண்டு அமைக்கப்பட்ட அருங்காட்சியகமாகும் இது. அறிவியல் கருவிகளை விளக்குவதற்கு இந்த அருங்காட்சியகத்தில் பொருத்தமான மாதிரிகள் செய்யப்பட்டுக் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. புகழ்பெற்ற அறிவியல் அறிஞர்கள் சிறந்த கண்டுபிடிப்புக்கள் செய்வதற்குப் பயன்படுத்திய கருவிகள் இந்த அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இங்கு இயற்பியல், வேதியியல், இயற்கையியல், புவியியல், தொழில்நுட்பவியல் போன்றவை மாதிரிப் பொருட்களின் மூலம் தெளிவாகத் தயாரிக்கப்பட்டுள்ளன. மேலும் போக்குவரத்து, கப்பல் கட்டுதல், வானூர்தியியல், புகைப்படவியல் போன்றவைகளைச் சார்ந்த பொருட்கள் இங்கு உள்ளன.

### பெர்லின் அருங்காட்சியக வளாகம் (BERLIN MUSEUM COMPLEX, BERLIN)

கிழக்கு பெர்லினில் அமைக்கப்பட்ட இந்த அருங்காட்சியக வளாகத்தில் தனித்தனியாக பல அருங்காட்சியகங்கள் ஒரே இடத்தில் அமைக்கப்பட்டுள்ளன. அவைகளில் ஒன்பது அருங்காட்சியகங்கள் கொண்ட போட் அருங்காட்சியக வளாகமும் 5 அருங்காட்சியகங்கள் கொண்ட பெர்கமன் அருங்காட்சியகமும் உள்ளன. மிகச் சிறந்த கலைப்பொருட்கள் இந்த இரண்டு அருங்காட்சியகங்களிலும் வைக்கப்பட்டுள்ளன. ஓவியங்கள், நாணயங்கள், பேப்பிரஸ், ஓலைச்சுவடிகள், சிற்பங்கள், போன்றவை இந்த அருங்காட்சியகங்களில் உள்ளன.

தேசீய மானிடவியல் அருங்காட்சியகம் (NATIONAL ANTHROPOLOGY MUSEUM,MEXICO)

மானிடவியலை விளக்கும் அருங்காட்சியகங்களில் மிகவும் சிறந்தது மெக்சிகோவிலுள்ள இந்த அருங்காட்சியகமாகும். இதில் மனிதன் வரலாற்றிற்கு முன்பிருந்த காலத்திலிருந்து தற்காலம் வரை பல இடங்களில் வாழ்ந்த முறைகளை விளக்கும் கூடங்கள் உள்ளன. வியக்கத்தக்க அஸ்டெக் பொருட்கள் இந்த அருங்காட்சியகத்தில் உள்ளன. அருங்காட்சியகக்கூடம் மற்றும் கலைக்கும் சிறந்த சான்றாக இந்த அருங்காட்சியகம் விளங்குகிது.

மனித அருங்காட்சியகம் (MUSEUM OF MAN, PARIS)

பாரீஸ் நகரத்தில் மானிடவியலுக்குத் தனியாக அமைக்கப்பட்ட அருங்காட்சியகமாகும் இது. இங்கு ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, தெற்கு அமெரிக்க நாடுகளைச் சார்ந்த மக்களின் கலைப்பொருட்கள் பரந்த அளவில் சேகரிக்கப்பட்டுக் காட்சியில் வைக்கப்பட்டுள்ளன. மேலும் வரலாற்றிற்கு முந்தைய காலத்திலிருந்து மனித உடல் அமைப்பை விளக்கும் வகையில் இங்கு காட்சிப் பொருட்கள் வைக்கப்பட்டுள்ளன. இந்த அருங்காட்சியகம் தோன்றிய பிறகு மானிடவியல் அருங்காட்சியகங்கள் பல தோன்றியுள்ளன.

இதுவரை அயல்நாடுகளிலுள்ள சில சிறந்த அருங்காட்சியகங்களைப் பற்றி அறிந்தோம். ஐரோப்பாக் கண்டத்தில் 18–ஆவது நூற்றாண்டிலிருந்து அருங்காட்சியக இயக்கம் வளர்ந்து கொண்டு வரும்போதே நம் நாட்டிலும் இவ்வளர்ச்சி தொடங்கியது. கல்கத்தாவில் அப்போதே நிறுவப்பட்ட இராயல் ஏசியாட்டிக் நிறுவனம் (Royal Asiatic Society) நம் நாட்டிலும் அருங்காட்சியகங்களை நிறுவ வேண்டும் என்ற முயற்சிகளை மேற்கொண்டது. இம்முயற்சியின் பலனாக 1814–இல் கல்கத்தாவில் முதன்முதலாக ஒரு அருங்காட்சியகம் தோன்றியது. அந்த அருங்காட்சியகமே தற்போது 'இண்டியன் மிஹ்யூசியம்' ஆக வழங்கிவருகிறது. இதனைத் தொடர்ந்து நம் நாட்டிலும் வெவ்வேறு பகுதிகளில் அருங்காட்சியகங்கள் தோன்றி வந்தன. மெக்கன்சி, அலெக்சாண்டர் கன்னிங்காம், ராபர்ட் புரூஸ்புட், அலெக்சாண்டர்ரே போன்ற சிறந்த ஆராய்ச்சியாளர்கள் கண்டு ஆராய்ந்த பொருள்கள் இவ்வருங்காட்சியகங்கள்

அமைவதற்கு உதவி புரிந்தன. மெக்கன்சி சேகரித்த சுவடிகள் முதலில் சென்னை அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டு பிறகு 'ஓரியண்டல் சுவடிகள் நூலகத்திற்கு' மாற்றப்பட்டன. அலெக்சாண்டர் கன்னிங்காம் சேகரித்த சிற்பங்கள் கல்கத்தாவிலுள்ள இந்தியன் அருங்காட்சியகத்தில் உள்ளன.

தற்போது நம் நாட்டிலுள்ள சில முக்கிய அருங்காட்சியகங்களைப் பற்றி நாம் அறியலாம்.

1) இந்தியன் அருங்காட்சியகம், கல்கத்தா

இந்த அருங்காட்சியகம் 1814–இல் நிறுவப்பட்டது. இவ்வருங்காட்சியகத்தில் தொல்லியல், மானிடவியல், விலங்கியல், தாவரவியல், புவியியல் ஆகியவற்றைச் சார்ந்த பொருட்கள் ஏராளமாக உள்ளன. இந்த அருங்காட்சியகத்தின் சேகரிப்புக்களைக் கொண்டு பார்த்தால் ஆசியாவிலேயே இது மிகப் பெரிய அருங்காட்சியகமாகும்.



படம். 26 இந்தியன் அருங்காட்சியகம், கல்கத்தா. கட்டிடத்தின் ஒரு கோணம்.

2) அரசு அருங்காட்சியகம், சென்னை

1851–இல் துவககப்பட்டது. மாநில அரசு அருங்காட்சியகங்களில் இது மிகப் பெரியதும், பழமையானதும் ஆகும். இந்த அருங்காட்சியகத்தில் தொல்லியல், மானிடவியல் கலைப்பொருட்கள், இயற்கை இயலைச் சார்ந்த பொருட்கள் ஆகியன சேகரிப்பில உள்ளன. மேலும் இவையனைத்தும் காட்சியில் வைக்கப்பட்டுள்ளன. அமராவதி சிற்பங்கள், சோழப் படிமங்கள், புரூஸ்புட் என்ற ஆங்கில ஆய்வாளா் முதன்முதலாக சென்னையின் அருகே உள்ள பல்லாவரம், அத்திரம்பாக்கம் போன்ற இடங்களில் கண்டுபிடித்த கற்காலக் கருவிகள், ஆதிச்சநல்லூரில் கண்டுபிடிக்கப்பட்ட பெருங்கற்காலப் பொருட்கள், பல்வேறு காலங்களைச் சோ்ந்த நாணயங்கள் மிகப்பெரிய திமிங்கலத்தின் எலும்புக்கூடு, புதை படிவங்கள் (fossils) இந்த அருங்காட்சியகத்தில் உள்ள சிறந்த சேரிப்புக்கள் ஆகும். அண்மையில் இந்த அருங்காட்சியகத்தில் ஒரு வளா் கலைக்கூடமும், ஒரு சிறுவா் அருங்காட்சியகமும் துவக்கப்பட்டன.



படம். 27 அரசு அருங்காட்சியகம், சென்னை




படம்.28 வளர் கலைக்கூடம், அரசு அருங்காட்சியகம், சென்னை.

தற்காலக் கலைக்காகவே உருவாக்கப்பட்ட கூடம்.

இக்கூடம் 1987–ஆம் ஆண்டு திறக்கப்பட்டது.

### 3. பரோடா அருங்காட்சியகமும், ஓவியக்கூடமும், பரோடா

இந்த அருங்காட்சியகம் குஜராத் மாநிலத்திலுள்ள மிகப்பெரிய அருங்காட்சியகமாகும். இதுவும் ஒரு பல்நோக்கு அருங்காட்சியகமாகும். இங்கு ஐரோப்பாவில் கண்டெடுக்கப்பட்ட படிமங்களும், குஜராத்திலுள்ள மக்களின் ஆடைகளும், எகிப்தில் இருந்து கண்டெடுக்கப்பட்ட ஒரு மம்மியும் காட்சியில் வைக்கப்பட்டுள்ளன.

### 4. தேசீய அருங்காட்சியகம், புதுதில்லி

இந்த அருங்காட்சியகம் நம் நாடு சுதந்திரம் அடைந்த பிறகு 1949–இல் நிறுவப்பட்ட ஒன்றாகும். இங்கு நம் நாட்டிலுள்ள பலவிதமான கலைப்பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இங்குள்ள கூடங்கள் நவீன முறைகளைப் பின்பற்றி சிறந்த முறையில் அமைக்கப்பட்டுள்ளன. நம் நாட்டின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் கலைப்பொருட்கள் இங்கு காட்சியில்

வைக்கப்பட்டுள்ளன. மேலும் கொலம்பியா நாட்டின் வரலாற்றுக்கு முந்தையகால கலைப்பொருட்கள் இந்த அருங்காட்சியகத்தின் சேகரிப்புக்களில் உள்ளன.



படம். 29 தேசீய அருங்காட்சியகம், புது தில்லி.

5. வேல்ஸ் இளவரசர் அருங்காட்சியகம், பம்பாய்

மகாராஷ்டிர மாநிலத்திலுள்ள மிகப்பெரிய அருங்காட்சியகமாகும். இந்த அருங்காட்சியகம் ஒரு தனியார் அமைப்பினால் (டிரஸ்ட்) நடத்தப்பட்டு வருகிறது. கலைப்பொருட்களும், இயற்கை இயலைச் சார்ந்த பொருட்களும் இவ்வருங்காட்சியகத்தில் உள்ளன. இந்த அருங்காட்சியகத்தின் சேகரிப்புக்களில் சிறந்ததாக நேபாளிய படிமங்களும், இந்தியச் சிறு ஓவியங்களும் ஆகும்.



படம். 30 வேல்ஸ் இளவரசர் அருங்காட்சியகம், மும்பை.

6. சாலார்ஜங் அருங்காட்சியகம், ஹைதராபாத்

சாலார்ஜங் என்கிற ஒரு நவாப்பினால் சேகரிக்கப்பட்ட பொருட்கள் இந்த அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இது ஒரு சிறந்த அலங்காரக் கலைப்பொருட்கள் கொண்ட அருங்காட்சியகமாகும். குறிப்பாக ஜப்பானிய எம்பராயடரிகள், பாரசீகம், அராபிக் மொழிகளில் உள்ள சுவடிகள், விலையுயர்ந்த கற்களால் செய்யப்பட்ட கலைப்பொருட்கள், பிரான்சு, இங்கிலாந்து, சொமானிய நாடுகளில் உருவாக்கப்பட்ட தளவாடங்கள், கடிகாரங்கள் போன்ற கவர்ச்சி மிகுந்த பொருட்கள் இங்கு காட்சியில் வைக்கப்பட்டுள்ளன.

7. தேசீய இயற்கையியல் அருங்காட்சியகம், புதுதில்லி

நம் நாட்டிலுள்ள இயற்கைப் பொருட்களைச் சேகரித்துக் காட்சியில் வைப்பதற்கு இந்த அருங்காட்சியகம் நிறுவப்பட்டுள்ளது. இங்கு நவீன முறைகளைக் கொண்டு காட்சிக் கூடங்கள் இயற்கையியல் கருத்துக்களைக் கவரும் வகையில் விளக்கப்பட்டுள்ளன.

8. தேசீய வளர்கலைக்கூடம், புதுதில்லி

நம் நாட்டில் 20–ஆம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்ட ஓவியங்கள், சிற்பங்கள் இந்த அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. நவீன காலத்தில் நம் நாட்டில் தோன்றிய கலைப்பொருட்களை விளக்கும் வகையில் இந்த அருங்காட்சியகத்தில் அமிர்தா சாகில், ஜமினிராய், ரவீந்திரநாத் தாகூர், நந்தலால்போஸ் போன்ற சிறந்த ஓவியர்களின் படைப்புக்கள் இங்கு காட்சியில் வைக்கப்பட்டுள்ளன.

9. பிர்லா தொழில்நுட்ப அருங்காட்சியகம், கல்கத்தா

விஸ்வேஸ்வரய்யா தொழில்நுட்ப அருங்காட்சியகம், பெங்களூர், நேரு சென்டர், பம்பாய்– இவை அறிவியல் கருத்துக்களை மக்களுக்கும் எளிய முறையில் அறிவதற்காக உருவாக்கப்பட்ட காட்சிப் பொருட்களைக் கொண்ட அறிவியல் அருங்காட்சியகங்களாகும். தற்போது தேசீய அறிவியல் அருங்காட்சியகக் குழுவினால் இந்த அருங்காட்சியகங்கள் நடத்தப்படுகின்றன. பௌதீகம், இரசாயனம், கணிதம் சார்ந்த கூடங்கள் இந்த அருங்காட்சியகங்களில் உள்ளன.

10. அரசு அருங்காட்சியகம், புதுக்கோட்டை

மாவட்ட அருங்காட்சியகங்களில் மிகப் பழமையானதாக விளங்குவது புதுக்கோட்டை அருங்காட்சியகமாகும். 1911–இல் நிறுவப்பட்டது. இங்கு தொல்லியல், மானிடவியல், இயற்கை இயலைச் சார்ந்த கூடங்கள் உள்ளன. சிற்பங்கள், படிமங்கள், இசைக்கருவிகள், மணபாண்டங்கள், ஆடைகள் போன்ற கூடங்கள் இங்கே உள்ளன.

11. மாநில அருங்காட்சியகம், ஆந்திரபிரதேசம்

இந்த அருங்காட்சியகம் ஹைதராபாத்தில் உள்ளது. ஆந்திர மாநிலத்தைச் சார்ந்த கலைப்பொருள்களைக் கொண்ட அருங்காட்சியகமாக இரு விளங்குகிறது. படிமங்கள், நாணயங்கள், சிற்பங்கள், போர்க்கருவிகள் கொண்ட கூடங்கள் இவ்வருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

12. இராஜாகேல்கர் அருங்காட்சியகம், பூனா

கைவினைப் பொருட்கள் கொண்ட தனியார் அருங்காட்சியகமாகும் இது. இராஜாகேல்கர் எனபவரால் சேகரிக்கப்பட்ட பொருட்கள் இந்த அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டு ஒரு டிரஸ்டினால் நடத்தப்பட்டு வருகிறது. நம நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் சேகரிக்கப்பட்ட கைவினைப் பொருட்கள் இங்கு காட்சியில் உள்ளன. இந்த அருங்காட்சியகம் மராட்டிய மாநிலம் பூனா நகரத்தில் உள்ளது.

# 14. நிறைவுரை

அருங்காட்சியகம் என்ற அமைப்பு சில கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு மெய்ப்பிக்கப்பட்டு அந்தக் கருத்துக்களை நிறைவு செய்வதற்குச் சில நுட்பங்களைப் பயன்படுத்தி வரும் செய்மையான நிறுவனம் என்று நாம் இதுவரை கூறியதிலிருந்து தெளிவாக விளங்கும். அருங்காட்சியகம் என்பது பண்பாட்டு மையமாகவோ அல்லது அறிவியல் மையமாகவோ விளங்கி வந்து அதன் பார்வையாளர்களுக்கு வெவ்வேறு இயல்களைப் பற்றி விரிவான செய்திகளைத் தருகிறது. இவ்வாறு செய்திகளைத் தருவதற்குக் காட்சிப்பொருட்கள், வரைபடங்கள், புகைப்படங்கள் போன்றவற்றை அருங்காட்சியகம் பயன்படுத்தி வருகிறது. அறிவை இயல்பான முறையில் தருகிற நிறுவனமாக அருங்காட்சியகம் இயங்கி பார்வையாளர்களை விளையாட்டாகக் கவர்ந்து அவர்களுக்கு கல்வி புகட்டுகிறது.

தற்போது அருங்காட்சியகத்தின் செயல்பாடுகளில் கல்வி நோக்கம்தான் இன்றியமையா இடத்தை வகிக்கிறது. சில அருங்காட்சியக இயல் அறிஞர்கள் (Museologists) இந்த கல்வி நோக்கம் மிகவும் முக்கியம் எனக் கருதி அதனை அடிப்படையாகக் கொண்டு புதிய அருங்காட்சியக இயல் என்ற அமைப்பைத் தோற்றுவித்துள்ளார்கள்.

தற்போது அருங்காடசியகங்கள் எண்ணிக்கையிலும், தரத்திலும் வளர்ந்து வருகின்றன. நம் நாட்டில் பெரிய தலைவர்களை நினைவுகூரும் வகையில் அவர்களைப் பற்றிய அருங்காட்சியகங்கள் நிறுவும் வழக்கம் மிகுந்த அளவில் உள்ளது. கலை, தொல்லியல், மானிடவியல் அருங்காட்சியகங்களும் தொடர்ந்து நிறுவப்பட்டு வருகின்றன. மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும், அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் கலையின் வளர்ச்சிக்குத் துணைபுரியும் மையங்களாக அருங்காட்சியகங்கள் இயங்கி வருகின்றன. இரஷ்ய நாட்டில் அருங்காட்சியகங்கள் தேசீய உணர்வினை மக்களுக்கு ஊட்டும்

வகையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அறிவியல் மற்றும் இயற்கையியல் அருங்காட்சியகங்கள் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பின் சிறப்பினை மக்களுக்கு அறிவுறுத்தி விழிப்புணர்வினைத் தோற்றுவித்துவரும் பணியினை ஆற்றி வருகின்றன. அருங்காட்சியகங்கள், தற்கால அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கருவிகளையும், கூறுகளையும் பயன்படுத்தி தமது குறிக்கோள்களை நிறைவேற்றி வருகின்றன.

இதுபோன்ற முன்னேற்றங்களின் விளைவாக அருங்காட்சியக இயல் எனனும் புதிய இயல் தோற்றுவிக்கப்பட்டுப் பல்கலைக்கழகங்களில் பாட வகுப்புகளாக இடம்படுத்தப்பட்டுள்ளன. நம் நாட்டில் எட்டு பல்கலைக்கழகங்களில் அருங்காட்சியக இயல் பட்டப் படிப்புப் பாடமாக வைக்கப்பட்டுள்ளது.

முதன்முதலாக பரோடாவிலுள்ள எம்.எஸ். பல்கலைக்கழகம் அருங்காட்சியக இயல் பட்டப் படிப்பை அறிமுகப்படுத்தியது. முதலில் இது பட்டயப் படிப்பாகவும் தற்போது பட்டப் படிப்பாகவும் இருந்து வருகிறது. கல்கத்தா பல்கலைக்கழகம் தொடர்ந்து அருங்காட்சியக இயலை முதலில் முதுகலைப் பட்டப் படிப்பிற்குப் பாடமாக எடுத்துக் கொண்டது. மேலும் வாரனாசியிலுள்ள பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தைச் சார்ந்த பாரத் கலா பவனும், போபாலில் உள்ள பிர்லா அருங்காட்சியகத்தைச் சார்ந்த The Centre of Advanced Studies in Indology and Museology– யும் அலிகார் முஸ்லீம் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த The University Museum of Science and Culture, General Education Centre- என்ற நிறுவனமும் அருங்காட்சியக இயலை பாடமாக வைததுள்ளன. பிலானியிலுள்ள பிர்லா அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையத்தைச் சார்ந்த அருங்காட்சியகத் துறையில் அறிவியல் அருங்காட்சியக இயலைப் பற்றிய வகுப்புக்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

தில்லியில் உள்ள தேசீய அருங்காட்சியகம் தற்போது அருங்காட்சியக இயலில் மட்டும் தொடர் வகுப்புக்கள் நடத்தும் ஒரு பல்கலைக்கழகமாக விளங்கி வருகிறது. இங்கு கலை வரலாற்றிலும், கலைப் பொருட்களை பாதுகாக்கும் முறைகளிலும் அருங்காட்சியகங்களை நிறுவும் நுட்பங்களைப் பற்றியும் வகுப்புக்கள் நடைபெறுகின்றன. இவ்வாறாக இந்தியாவில் அருங்காட்சியகங்களின் அருமைப்பாடு பற்றிய விழிப்புணர்வு மக்களிடையே பரவலாகப் பெருகி வருகிறது வரவேற்கத் தக்கதொரு கல்வியியல் சாதனையாகும். மேன்மேலும் இவவியல் பற்றி ஆய்வு வளர்ந்து இந்தியக் கல்வித் தரத்தை மேம்படுத்தும் என்பது எம் துணிவு.

மேலும் படிக்க. . .

1) Hand book of Museum Technique, A.Aiyappan and S.T.Satyamurthi, Government Museum, 1959.
2) Fundamentals of Museology, M.L.Nigam, Hyderabad, 1987.
3) Brief Directory of Museums in India, Usha Agrawal, Museum's Association of India, New Delhi, 1981.
4) Administrative Problems in Indian Museums, S.T.Satyamurti, M.S.University of Baroda, 1963.
5) Museums To-day, 1967, Grace Morley, M.S.University of Baroda, 1971.
6) The Conservation of Antiquities and Works of Art, H.J. Plenderleith and A.E.W.Werner, Oxford University Press, London, 1976.
7) The Organisation of Museums, UNESCO, Museums and Monuments Series IX, Paris, 1960.
8) So you want a good Museum Exhibition, V.H. Bedekar, M.S. University of Baroda, 1984.
9) Journal of Indian Museums, Museums Association of India, all the volumes.
10) 'Museum', UNESCO Publication Centre, all the volumes.
11) 'Curator', ICOM Publications, all the volumes.
12) 'Conservation', Getty Conservation Institutes Bi-Annual museum letter.

தமிழ் நாட்டிலுள்ள அருங்காட்சியகங்கள்

அ) அரசு அருங்காட்சியகங்கள்

1) அரசு அருங்காட்சியகம், எழும்பூர், சென்னை
2) அரசு அருங்காட்சியகம், புதுக்கோட்டை
3) அரசு அருங்காட்சியகம், சேலம்
4) அரசு அருங்காட்சியகம், மதுரை
5) அரசு அருங்காட்சியகம், திருச்சி
6) அரசு அருங்காட்சியகம், வேலூர்
7) அரசு அருங்காட்சியகம், ஈரோடு
8) அரசு அருங்காட்சியகம், கடலூர்
9) அரசு அருங்காட்சியகம், உதகமண்டலம்
10) அரசு அருங்காட்சியகம், கோயம்புத்தூர்
11) அரசு அருங்காடசியகம், கன்னியாகுமரி
12) அரசு அருங்காட்சியகம், சிவகங்கை

ஆ) தமிழ்நாடு தொல்லியல் துறையின் அருங்காட்சியகங்கள்

1) ராசராசன் அகழ்வைப்பகம், தஞ்சாவூர்
2) மராட்டா தர்பார்ஹால் அகழ்வைப்பகம், தஞ்சாவூர்
3) ராசேந்திரச் சோழன் அகழ்வைப்பகம், கங்கைகொண்டச்சோழபுரம்
4) டேனீசு கோட்டை அகழ்வைப்பகம், தரங்கம்பாடி
5) ராமலிங்க விலாசம் அகழ்வைப்பகம், ராமநாதபுரம்
6) ராமேசுவரம் அகழ்வைப்பகம், ராமேசுவரம்
7) திருமலை நாயக்கர் அரண்மனை அகழ்வைப்பகம், மதுரை

8) கொற்கை அகழ்வைப்பகம், கொற்கை, திருநெல்வேலி மாவட்டம்
9) குற்றாலம் அகழ்வைப்பகம், குற்றாலம், திருநெல்வேலி மாவட்டம்
10) ஆற்காடு அகழ்வைப்பகம், ஆற்காடு
11) பூண்டி அகழ்வைப்பகம், பூண்டி, செங்கற்பட்டு மாவட்டம்
12) கோயமபுத்தூா அகழவைப்பகம், கோயம்புத்தூர்
13) கரூர் அகழ்வைப்பகம், கரூா
14) தர்மபுரி அகழ்வைப்பகம், தர்மபுரி

இ) இந்தியத் தொல்லியல் அளவீட்டுத் துறையின் அருங்காட்சியகங்கள்

1) கோட்டை செயின்ட் ஜார்ஜ் அருங்காட்சியகம், சென்னை
2) தொல்லியல் அருங்காட்சியகம், பிரகதீசுவரா கோயில், தஞ்சாவூர்
3) தொல்லியல் அருங்காட்சியகம், தாராசுரம்

ஈ) பல்கலைக்கழக அருங்காட்சியகங்கள்

1) அருங்காட்சியகம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்
2) தொல்லியல் அருங்காட்சியகம், வரலாறு மற்றும் தொல்லியல் துறை, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை
3) விலங்கியல் அருங்காட்சியகம், விலங்கியல் துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்
4) வேளாண்மைக் கல்லூரி அருங்காட்சியகம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்

உ) கல்லூரி மற்றும் பள்ளி அருங்காட்சியகங்கள்

1) ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி அருங்காட்சியகம், சென்னை–1
2) விலங்கியல் அருங்காட்சியகம், சென்னை கிறித்துவக் கல்லூரி, தாம்பரம், சென்னை

3) வாசவிக் கல்லூரி அருங்காட்சியகம், ஈரோடு
4) வெள்ளாளர் மகளிர் கல்லூரி அருங்காட்சியகம், ஈரோடு
5) பராசக்தி மகளிர் கல்லூரி அருங்காட்சியகம், குற்றாலம்
6) கலைமகள் கல்வி நிலைய அருங்காட்சியகம், ஈரோடு

ஊ) கோவில் அருங்காட்சியகங்கள்

1) கலைப்பொருட்கள் அருங்காட்சியகம், மீனாட்சி சுந்தரேசுவரா கோயில், மதுரை
2) அருள்மிகு அரங்கநாதர் திருக்கோவில் அருங்காட்சியகம், திருவரங்கம்

எ) தனி மனிதரைப் பற்றிய அருங்காட்சியகங்கள்

1) காந்தி நினைவு அருங்காட்சியகம், மதுரை
2) காந்தி இல்லம், சென்னை
3) பாரதியார் அருங்காட்சியகம், எட்டையபுரம்
4) காமராசா அருங்காட்சியகம், சென்னை
5) அண்ணா அருங்காட்சியகம், சென்னை
6) அண்ணா அருங்காட்சியகம், காஞ்சிபுரம்
7) எம்.ஜி.ஆர். அருங்காட்சியகம், சென்னை

ஏ) பிற அருங்காட்சியகங்கள்

1) தஞ்சாவூர் கலைக்கூடம், தஞ்சாவூர்
2) சரசுவதிமகால் நூலக அருங்காட்சியகம், தஞ்சாவூர்
3) அரண்மனை மற்றும் தொல்பொருட்கள் அருங்காட்சியகம், பத்மநாபபுரம்
4) கேஸ்கானக் அருங்காட்சியகம், கோயம்புத்தூர்

ஐ) அறிவியல் அருங்காட்சியகங்கள்

1) மாவட்ட அறிவியல் மையம், திருநெல்வேலி
2) மாநில அறிவியல் மையம், சென்னை

இந்நூலுக்குப் புகைப்படங்கள் அளித்து உதவியதற்காகக் கீழ்க்கண்டவர்களுக்கு நூலாசிரியர்களால் நன்றி தெரிவிக்கப்படுகிறது.

## Acknowledgement for Photographs

| புகைப்பட எண்கள் | | புகைப்படம் அளித்தவர் |
|---|---|---|
| Photograph Numbers | | Photograph given by |
| 1, 2, 3 | - | அரசு அருங்காட்சியகம், சென்னை<br>Government Museum, Chennai. |
| 4, 5, 6 | – | பண்பாட்டுப்பொருள் பாதுகாப்பிற்கானத் தேசிய ஆய்வுக்கூடம், லக்னோ.<br>National Research Laboratary for Conservation of Cultural Property, Lucknow. |
| 7, 12 | – | சாலார்ஜங் அருங்காட்சியகம், ஹைதராபாத்.<br>Salarjung Museum, Hyderabad. |
| 11, 29 | - | வேல்ஸ் இளவரசர், அருங்காட்சியகம். மும்பை.<br>Prince of Wales Museum, Mumbai. |


6/2/2006

| | | |
|---|---|---|
| 10, 30 | _ | தேசிய அருங்காட்சியகம், புது தில்லி. National Museum, New Delhi. |
| 18, 19 | – | அறிவியல் அருங்காட்சியகங்களின் தேசிய ஆலோசனைக் குழுமம், கல்கத்தா. National Council of Science Museums, Calcutta. |
| 24, 25 | _ | தேசிய இயற்கைவரலாறு அருங்காட்சியகம், புது தில்லி. National Museum of Natural History, New Delhi. |
| 8, 9, 13, 14, 15, 16, 17, 20, 21. 22. 23. 26. 27. 28 | _ | திரு என்.ஹரிநாராயணா, முன்னாள் இயக்குநர், அருங்காட்சியகம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர். |

# தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 613 005

## அண்மைவெளியீடுகள்

| | |
|---|---|
| காஞ்சிக் கோயில்கள் | 90.00 |
| பார்புகழும் பால்சங்கு | 40.00 |
| தன்வந்திரி வைத்தியக்கும்மி | 50.00 |
| தஞ்சைக் கூத்து மரபுகள் | 50.00 |
| தஞ்சை மராட்டியர் வளர்த்த தமிழ் இலக்கியம் பகுதி - 3 | 100.00 |
| வீட்டு மருத்துவம் | 44.00 |
| தொண்டைமான் செப்பேடுகள் | 70.00 |
| தமிழ்ப் பழமொழிகள் ஓர் ஆய்வு | 120.00 |
| சாந்தாதி அசுவமகம் | 240.00 |
| அறிவியல் களஞ்சியம் தொகுதி - 14 | 700.00 |
| தமிழில் சொல்லாக்கம் | 130.00 |
| பழவேற்காடு 1816 இல் (மெக்கன்சியின் சுவடி - பதிப்பாய்வு) | 125.00 |
| தமிழ்நாவல்களில் உளச் சித்திரிப்பு | 130.00 |
| தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும் தொகுதி - 2 | 160.00 |
| தமிழக அறிவியல் வரலாறு | 60.00 |
| இசைத்தமிழ்ப் பேரறிஞர்கள் தொகுதி - 1 | 60.00 |
| உலக நாடுகளில் தமிழர் பண்பாடு | 50.00 |
| 108 ஆடலியக்கத் தமிழ்ப் பெயரீடுகளும் அமைவுகளும் | 50.00 |
| பாவேந்தரின் மொழியுணர்வும் மொழிநடையும் | 35.00 |
| தமிழ் நிகண்டுகள் வரலாற்றுப் பார்வை | 140.00 |

தொடர்பு முகவரி :

**இயக்குநர் (பொறுப்பு), பதிப்புத்துறை**

**தமிழ்ப் பல்கலைக்கழகம், (அரண்மனை வளாகம்)**

**தஞ்சாவூர் – 613 001. தொ.பே. 04362 – 239221**